ஜநவிநோதிநி.

இல. 10, 11.] {அக்டோபர்மீ / நவம்பர்மீ} 1877. [புஸ்த. VIII.

தஞ்சைமாநகரம்

பூமண்டலத்தின் குணார்த்தகோளத்தில், எகிப்துதேசத்திலுள்ள நைல்நதியின் பள்ளத்தாக்கும், வட இந்தியாவிலுள்ள கங்காநதி தீரமுமே, மிகவும் நிலவளமும் நீர்வளமும் பெற்ற நாடுகளென்று பலர் நினைத்துக்கொண்டிருக்கலாம். நன்றாய் ஆய்ந்துபார்க்குமளவில், தென்னிந்தியாவில் காவிரியாற்று வெள்ளம் ஊடுருவி ஓடுந் தஞ்சைநாடும் செழிப்பில் அவைகளுக்குத் தாழ்ந்ததல்ல; ஆனது பற்றியே ஐரோப்பியர்கள் இத்தஞ்சைநாட்டைத் தென்னிந்தியாவின் சிங்காரத்தோட்டமென்று வர்ணித்திருக்கிறார்கள். முற்காலத்தில் தென்னிந்தியாவுக்கு முக்கிய ராஜாக்களாயிருந்த சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூவருள் சோழராஜன் அரசாட்சியிலிருந்ததனால் சோழநாடென்று பேர்பெற்று விளங்கும் அத்தஞ்சைநாட்டின் வளம் இப்படிப்பட்டதென்று, நேரில்போய்ப் பார்த்தவர்களுக்கு நன்றாய்ப் புலப்படுமேயல்லது, மற்றவர்களுக்குப் பூரணமாய்ப் புலப்படாது.

இப்படி இத்தேசத்துப் பல வளநாடுகளுக்குந் திலகமணிபோல் விளங்குகின்ற சுந்தரமான தஞ்சைநாட்டில் சிறப்புற்றிருக்கும் தஞ்சாவூர், கும்பகோணம், மாயூரம், மன்னார்கோயில் முதலிய நகரங்களில், முற்காலத்திலிருந்த தஞ்சைநாட்டரசர்கள் பலவித விசித்திரமான கோபுர மண்டபப் பிராகாரங்களும், பல தேவாலயங்களும், உப்பரிகைகளும், மடங்களும், அன்ன ஸத்திரங்களும், யாத்திரைக்காரர்கள் போய்ப் பார்த்துப் பிரமிக்கத்தக்க வடிவழகோடு, கட்டுவித்து, அநேகந் தடாகங்களும் அநேகம் ஆற்றுக்கால்களும் வெட்டுவித்திருக்கிறார்கள்.

இத்தேசத்தில் கோயில்களும் கோபுரங்களும் ஸாதாரணமாய் எங்குமுண்டாகையால் அவை, தேசாந்தரத்திலிருந்து வந்து பார்ப்

பவருக்கு ஒரு புதுமையாய்த் தோன்றுமேயன்றி, எவ்வளவு விசித்திரமாய் அமைத்திருந்தாலும், அடிக்கடிபோய்த் தரிசித்துக்கொண்டிருப்பவர்களாகையால், சுதேசிகளுக்கு ஒரு ஆச்சரியமாய்த் தோன்ரு. ஆயினும் இத்தேசத்திலுள்ள ஆலயங்களெல்லாம் கொஞ்சம் ஏறக்குறைய ஒன்ருேடொன்று ஒத்ததாகவேயிருக்குமென்று கருதவேண்டாம். இத்தேசத்திலுள்ள தேவாலயங்களை அடிக்கடி போய்ப் பார்த்துப் பழகினவர்கள்கூட ஒவ்வொருதருணங்களில் கண்டு மதிமயங்கத்தக்க வேலைப்பாடுகளும் சிலவிடங்களில் உண்டு. சோழநாட்டிற்குச் சிகாமணிபோன்ற தஞ்சைமாநகரத்திலுள்ள ஆலயம் அப்படிப்பட்ட சிறந்த கட்டடங்களிலொன்று. அதன் கருங்கற்கோபுரத்தையும், கோபுரத் துவாரத்துக்கெதிரிலிருக்கும் பருத்தவடிவமுள்ள கல்வெட்டு விருஷபத்தின் அழகையும் கண்டு வியக்காதவர்களில்லை. கரிகாற்சோழனென்கிற அத்தேசத்தரசனொருவன், தனக்குண்டாயிருந்த பெருவியாதி நீங்கினதற்காகப் பிரார்த்தனையாய், இந்த விருஷபத்தைப் பிரதிஷ்டை செய்வித்ததாகச் சொல்லுகிருர்கள். அந்தக் கோபுரமோ நூறடியுயரமுள்ளது. இத்தேசத்தில் கோபுரங்கள் பலவாயிருப்பினும் முழுதும் பருத்த கருங்கற்களாலே அவ்வளவு சிறந்த சிற்ப வேலைத்திறத்தோடு அமைந்த கோபுரமெங்குமில்லை. காவிரியாற்றங்கரையில் அந்த அற்புத கோபுரத்தோடுகூடக் கோயிலமைத்திருக்குமழகைப் பாராதவர்கள் கண்டு களிக்கும்படி, அதனுருவத்தை இச்சஞ்சிகையுடன் சேர்த்திருக்கிருேம்.

இந்தக் கோபுரத்தில், இத்தேசத்துக் கட்டடங்களில் எங்குஞ் சித்திரித்திராத, விநோதப் பிரதிமை ஒன்றுண்டு. அது நுட்பநோக்கமுடையவர்கள் தவிர மற்றவர்கண்ணுக்குச் சாதாரணமாய்ப் புலப்பட்டிராது. அதைப்பற்றி ஒரு கதைசொல்லக் கேட்டிருக்கிருேம். அது இக்காலத்து ஜனங்களுக்கு ஒரு அதிசயக் கதையாயிருக்குமென்று அதைப் பின்வருமாறு சுருக்கிச்சொல்வோம்.

பலவருஷங்களுக்குமுன் தஞ்சாவூரில் கலெக்டராயிருந்த இங்கிலீஷ் துரை ஒருவர் சாதாரணமாய் வட்டவடிவமான மொட்டைத் தோப்பியே தரித்துக்கொண்டிருப்பது வழக்கமாம். அவர் கொஞ்சகாலம் அந்நாட்டில் அதிகாரம் செலுத்திப் பின்பு செலவுபெற்றுக்கொண்டு தேகசவுக்கியத்திற்காகச் சுதேசம்போய், அங்கே சிலமாதங்களிருந்து மறுபடியும் தன் உத்தியோகத்திற்குத் திரும்பிவருகையில், தன் வழக்கமான மொட்டைத் தோப்பியை நீக்கி நீண்டதான மற்ருெரு தோப்பியைத் தரித்துக்கொண்டுவந்ததாகவும், வந்தபிறகு அவர் ஜில்லாவைச் சுற்றிப்பார்க்கப் போனபோது தேவாலயங்களுள்ள இடங்களிலெல்லாம் அவரை எதிர்கொள்வதற்காக வந்த ஜனங்களுள் முக்கியமாய்த் தாசிகளே அவர்

முன்னிலையில் நின்றுகொண்டிருந்ததாகவும், அதைக்கண்டு அந்த துரை: இதென்ன, நான் போகிறவிடமெல்லாம் இப்பெண்கள் எதிரில் வந்துநிற்கிறார்களேயென்று கேட்டதற்கு, சிரஸ்தேதார்: இவர்களெல்லாம் சிவபக்தர்களாய் லிங்கபூஜை செய்கிறவர்கள்; தாங்கள் அவர்கள் பூஜிக்கும் லிங்கவடிவமானதைச் சிரசின்மேல் தரித்து வந்திருப்பதினால் தாங்கள் சிவமதத்திற்கு ஒரு சிகாமணிபோன்றவர் என்று எண்ணித் தங்களை வந்து மரியாதைசெய்கிறார்கள் என்று விடைகொடுத்ததாகவும், அப்படி அந்தப்பிரபு லிங்கவடிவமான ஒரு பாகையைத் தலையில் தரித்துக்கொண்டு பார்வைக்கு விநோதமாயிருந்ததனால், பிறகு இந்தக் கோபுரங் கட்டியகாலத்தில் அம்மாதிரியாய் அவர் உருவத்தை, அதிற் சித்திரித்ததாகவும் சொல்லுகிறார்கள். இக்கதை மெய்யோ பொய்யோ நாம் சொல்லத்துணியோம்; ஆனாலும் இத்தேசத்துக் கோபுரமுதலிய புராதனக் கட்டடங்களில் எங்கும்காணப்படாத ஐரோப்பியருடைய பிரதிமையொன்று விநோதமாய் இந்தத் தஞ்சாவூர்க் கோபுரத்தில்மாத்திரம் அமைக்கப்பட்டிருப்பதனால் இது ஒரு புதுமையென்று நினைத்து, ஐரோப்பிய சிற்பசாஸ்திரி ஒருவர் நமக்குச்சொன்ன மேற்படி கதையுடன் சேர்த்து, அதைச் சுட்டிக்காட்டினோம்.

கைகள்.

நாம் சுகமாய் வாழ்வதற்காக நன்மைதீமைகள் இப்படிப்பட்டவையென்று நன்றாய் அறிந்துகொள்ளும்படி மெய் வாய் கண் மூக்கு செவி முதலான இந்திரியங்கள் நமக்கு இயல்பாயே உண்டாயிருக்கின்றன. அவற்றுள் மெய் என்னும் இந்திரியம், வாய் கண் மூக்கு செவி என்னும் நான்கு இந்திரியங்களைப்போலாகாமல், நமது உடல் முழுதும் பாவியிருக்கிறது. மெய் அல்லது த்வக்கு என்னும் இந்திரியமானது பல விஷயங்களில் மற்ற இந்திரியங்களைவிட மிகவும் விநோதமானது. கண் மூக்கு முதலிய இந்திரியங்களுக்கு, வெளியிலுள்ள விஷயங்களைக் கிரகிக்க, வழியாயிருக்கின்ற கண்ணுருண்டைமுதலியவைகளெல்லாம் தம்மிருப்பிடத்திலேயே அசையாமல் நிலைபெற்றிருக்கின்றன. த்வகிந்திரியத்திற்கு இருப்பிடமான கைகால் முதலிய உறுப்புகளோ அப்படியல்ல; வேண்டியபடி அசையும் திறமையுடையவைகளாயிருக்கின்றன. கண் காது மூக்கு இவைகள் மலர்ந்து தம்மிருப்பிடத்திலேயே இருக்கின்றன. பலவித ஒளி ஓசை நாற்றம் என்கிற விஷயங்கள் தாமே அவற்றுள் வந்து புகுகின்றன. அவை வந்து உறுத்தும்போது, அவைகளைப் பாராமலும் கேளாமலும் மோராமலுமிருக்க நம்மால்

மாளாது. பரிசேந்திரியத்திற்கு இடமான கைகால்முதலியவை களோ அப்படியல்ல. பரிசிக்கத்தக்கவை இவையென்பதும் பரிசிக்கத்தகாதவை இவையென்பதும் தாமே தேர்ந்தெடுத்து, தமக்கு ஏற்றதாயிருப்பதையே பரிசிக்கின்றன.

கையானது தனக்கு விருப்பமான பொருள்களைக் கிட்ட வரவழைத்துக்கொள்கிறது. விருப்பமில்லாதவைகளைத் தூர ஒதுக்கி விடுகின்றது. கண்ணோ அப்படியல்ல; எதிரிலுண்டாகும் எத்தன்மையான பயங்கரக் காட்சிகளையும் கண்டே தீரவேண்டும். அதைத் தன்னைவிட்டு ஒழிக்கவாவது அதைவிட்டுத் தானொழியவாவது கண்ணாலாகாது. காதும் அப்படியே: எவ்வளவு அருவருப்பான சத்தமுண்டானாலும் அதைக் கேட்டாலொழியத் தீருமா? அப்படியே தனக்குள்ளே வந்தடைகிற பலவகைக் கெட்ட நாற்றங்களை மூக்கு மோராமல் மற்றென்னசெய்யமாட்டும்?

இப்படி பரிசேந்திரியமானது தன் காரியமொன்றுக்குமாத்திரமே கவலைப்படுகிறதென்று கொள்ளவேண்டாம். மற்ற இந்திரியங்கள் உபயோகமற்றுப்போனால், அவற்றிற்குப் பதிலாய் அவைகளின் வேலையையும் தானே செய்விக்கின்றது. குருடனுக்குக் கை வழி காட்டுகின்றது. கால் மேடுபள்ளங்களில் பிசகாமல் ஏச்சரிக்கையாய் அடிவைக்க முயலுகின்றது. கையானது இஷ்டர்களின் உருவங்களைச் செம்மையாய்ப் பார்க்கின்றது. எதிரில் வந்துநிற்பவர்களைத் தெரிவிக்கின்றது. எழுத்துக்களின் வரிவடிவங்களை அறிகின்றது. இப்படிக் கண்ணிலாதவர்களுக்குக் கண்ணாலாக வேண்டிய பற்பல காரியங்களையும் கை செய்துகொடுக்கின்றது.

செவிடனுக்கும் இப்படியே கை உபயோகப்படுகின்றது. பேசவாயில்லாமலும், கேட்கக் காதில்லாமலும் அல்லாடுகிற ஊமைக்குக் கை எத்தன்மையாக உபயோகப்படுகிறது பாருங்கள்! அவன் கையாட்டங்களும் விரற்கூட்டங்களும் எதிரிலிருப்பவர் கண்களோடு எவ்வளவு சாமர்த்தியமாகப்பேசிக் கருத்தைக் கண்ணாடிபோலக் காட்டுகின்றன!

இப்படி மற்ற இந்திரியங்கள் தமது இயற்கையில் குறைவுபட்டிருக்கும்போதுமாத்திரம்தானோ கை அவைகளுக்கு உதவுகின்றது? அவை ஏதேனும் சிறிதளவும் குறைவில்லாமல் செம்மைப்பட்டிருக்கும் காலத்திலும் கைகள் அவைகளுக்கு அதிக சாமர்த்தியத்தையும் பெருமையையும் உண்டாக்குகின்றன. கையானது கண்களின் பார்வை செம்மையாய்ச் செல்லும்படி அவற்றிற்கு வேண்டிய பல கருவிகளைக் கற்பிக்கின்றது. வெகுதூரத்திலுள்ள நக்ஷத்திரங்களின் வடிவங்களைக்கூடப் பக்கத்திலிருப்பவைபோலப் பார்க்கக் கருவியான தூரதிருஷ்டிக் கண்ணாடிகளையும், வெறுங்கண்ணால் கண்டறியக்கூடாத அதிநுட்பமான பொருள்களைக்கூடத் தெளிவாய்ப் பார்க்கத்தக்க அணுதரிசினியென்னும் கருவிகளையும் கற்பித்

துக்கொடுத்து யாவர்க்கும் வியப்புண்டாக்குவது கையல்லவா? அப்படியே காதுக்கு இனிப்பான சிறந்த நாதங்களை உண்டாக்கத் தக்க வீணைமுதலிய பல கருவிகளை உண்டுபண்ணி, அவற்றின் பலவகை நாதங்களின் விசேஷங்களையும் வேற்றுமைகளையும் காது செம்மையாய்க் கற்றுக்கொள்ளுகிறவனாயில், அந்த வாத்தியங்களை ஒலிப்பித்துக்கொண்டிருப்பதும் கைதானே. கையானது நாசிக்கு வாஸனையூட்டும்பொருட்டுப் பலவித வாஸனை மலர்களையும் கொய்துகொடுக்கின்றது. நாசி எக்காலத்தில் எந்த வாஸனையை மோர விரும்பினாலும் கையானது அதைத் தேடிக்கொடுக்கச் சித்தமாயிருக்கிறது. ரசனேந்திரியத்திற்கிருப்பிடமான நாக்கைப்பற்றிப் பார்த்தாலோ, அதற்கு வேண்டியபடி உபசரிக்கக் கையொன்றிரா விட்டால், அப்போதே உருசியறிகிற விஷயத்தில் அதற்கிருக்கிற பெருமை போனதுதான். பலவாறு சொல்லியென்ன? கையானது மற்றெல்லா இந்திரியங்களுக்கும் தக்கதருணங்களில் தகுந்தபடி உபசரிக்கத்தக்க வல்லவனான ஒரு வேலைக்காரனாயிருக்கின்றது.

இவ்வாறு ஒரு மனிதனுக்குக் கையானது பலவகையாய் உதவுவதுமல்லாமல், அவனுடைய தைரிய சவுரியங்களையும், யுக்தி புத்திகளையும், உற்சாக சாமர்த்தியங்களையும், தயைதாக்ஷிணியங்களையும், விருப்பு வெறுப்புகளையும், இன்னும் இவ்வகைப்பட்ட பலவித மனோகுணங்களையும் பலவகையாக வெளிப்படுத்த் முதற் கருவியாயிருக்கின்றது. கையில் ஒரு கத்தியைக் கொடுத்தால் அது அந்தக் கத்தியைக்கொண்டு அவனுக்காகப் பகைவரோடு பலமாய்ப் போராடும். ஒரு கலப்பையைக் கொடுத்தால் அதைக் கொண்டு ஏருழும். ஒரு வீணையைக் கொடுத்தால் அதைக்கொண்டு விநோதமாய் விளையாடும். ஒரு வர்ணவர்த்தியைக் கொடுத்தால் அதைக்கொண்டு வெகு நேர்த்தியாய்ச் சித்திரமெழுதும். லேகினியைக் கொடுத்தால் அதைக்கொண்டு ஒருவனுக்குப் பதிலாகப் பேசும்; சபைகளில் சம்பாஷணை செய்யும்; கடவுளைத் துதிக்கும்; இன்னும் எந்தெந்தக் கருவிகளைக் கொடுத்தாலும் அததற்குத் தகுந்த காரியங்களைச் செய்யும்.

கை செய்யமாட்டாத காரியங்கூட உலகத்தில் ஒன்றுண்டோ? எந்தக்காரியந்தான் கை செய்து முடிக்கவில்லை? சிறந்த நீராவியந்திரமும் ஒரு பெருங்கையாயிருக்கின்றது. ஒரு மனிதனுடைய சிறு கையானது அப்பெருங்கையின் வல்லமைகளை விரியச்செய்யத் துணைக்கருவியாயிருக்கின்றது. மிகவும் மேன்மைபெற்றிருக்கும் மின்தபாலும் ஒரு மனிதனுடைய சிறு கைக்கு ஏற்ற எழுதுகோலாயிருக்கின்றது. அப்படியே சத்துருக்களை ஜயிக்கவல்ல, பலவகைப் பீரங்கிகுண்டுகளும் பலவகை ஆயுதங்களும் பருத்து உரத்துக் கொடியவைகளாயிருக்கின்ற கைகளே ஒழிய வேறென்ன? மேலும், பலவகைக் கப்பல்களென்ன, புகைவண்டிகளென்ன,

ஆகாயமளாவிய தீபமாளிகைகளென்ன, உயர்ந்த உப்பரிகைக ளென்ன, பெரிய பட்டணங்களென்ன, பல தேசங்களென்ன, பூகண்டங்களென்ன, இவையெல்லாம் என்னவென்று நினைக்கிறீர் கள்? கையின் திறமையல்லவா! செம்மையாய்ப் பார்த்தால் இந் தப் பூலோகமுழுதும் சர்வசக்தியுள்ள ஒரு கையின் திறமைதானே. கை செய்யாத காரியமொன்றுமில்லை; நன்மைசெய்வதற்கும் கருவி அதுதான்; தீமைசெய்வதற்கும் கருவி அதுதான். அது ஒரு நொடிப்பொழுதாகிலும் சோம்பலாயிருப்பதில்லை.

கையினால் எடுத்து ஆளக்கூடாத கருவி ஒன்றும் உலகத்தில் கிடையாது. ஏதாவது ஒரு கருவியில்லாமலும் அது ஒரு வேலையி லிழியமாட்டாது. உலகத்தில் கைத்தொழிலாளி என்கிற பெயரை ஓயாமல் உழைக்கிற அற்ப ஜனங்களுக்கே சர்தாரணமாய் வழங்கு கிறார்கள். அது சரியல்ல; கையினால் ஏதாவது ஒரு காரியஞ்செய் கிற ஸகல ஜனங்களுக்கும் வழங்கலாம். அரசனது கைக்குச் செங் கோலும், யுத்தவீரன் கைக்குக் கத்தியும், தச்சன் கைக்கு வாளும், கருமான் கைக்குச் சம்மட்டியும், கொல்லன் கைக்குக் கொல்லும், வேளாளன் கைக்குக் கலப்பையும், சிறுவர் கைக்கு விளையாட்டுக் கருவிகளும், கப்பலோட்டிகைக்குத் துடுப்பும், வர்ணக்காரன்கை க்கு வர்த்தியும், சித்திரவேலைக்காரன் கைக்குச் சிற்றுளியும், கிரந்த காரர் கைக்கு எழுதுகோலும் கருவிகளாய் இருக்கின்றன.

இந்தக் கருவிகளுள் ஏதாவது ஒன்றையாவது அல்லது நல்ல பயனை விளைக்கத்தக்க இவைபோன்ற வேறெந்தக் கருவியையாவது கையாள விரும்பாதவன், கைகளிலும் கால்களிலும் விலங்கை மாட்டிக்கொண்டு, சிறையில் அடைபடும்படியாகும். ஆதலால் வாழ்நாளை இவ்வுலகத்தில் செம்மையாய்க் கழிக்க விருப்பமுடை யவர்கள், தமக்கேற்றதாய் ஏதாவது ஒரு கருவியைச் செம்மை யாய்க் கையாள்வார்களாயின், எக்காலத்திலும் எவ்விடத்திலும் யாதொரு குறையுமின்றி சுகமாக வாழ்வார்கள்.

முதலும் வட்டியும்.

(ஒரு மூட்டை நெல்.)

சோமன் என்கிற ஒரு குடியானவன், பலவகையிலும் எளிய வனாய், அன்றாடம் வருந்தி உழைத்துச் சம்பாதித்துப் போந்ததும் போதாத்துமாய்க் கால்வயிற்றுக் கஞ்சி குடித்து ஜீவித்துவந்தான். அப்படியிருக்கையில் ஏதோ ஒரு காரணத்தால் மிகவும் ஸாரக்ஷேத் திரமான காம்புநிலம் சிறிது சொந்தமாய்க் கிடைத்தது. தனக்குச் சுவாதீனமாய் நிலங்கிடைக்கவே அதைப் பண்படுத்திப் பயிர்

செய்யவேண்டுமென்று சோமன் பேராவல்கொண்டான். ஐயோ, பாபம்! அவன் என்னசெய்யமாட்டுவன்! நன்றாய் நீர்க்கால்கள் வெட்டி வரப்புபோட்டுத் தனிதனியாய்ப் பிரித்துக் கல்காடு கெடிசெட்டு மேடுபள்ளங்களில்லாமல் அந்த நிலத்தைச் செப்பனிட்டுத் தண்ணீர்கட்டி உழுது சேறாக்கி எருவிட்டு விதைக்கப் பதமாக்குவதற்கே சுமார் ஒரு வருஷகாலம் செல்லுமே! அதன்பிறகு விதைத்துக் காலந்தவறாமல் தண்ணீர்கட்டித் தகுந்த காலத்தில் களைபறித்துப் பயன்படச்செய்வது அற்பசொற்பமான வேலையல்லவே! இதென்ன, இவையெல்லாம் இன்று நாளையில் ஆகத்தக்ககாரியமா! ஆதலால் வரப்புவெட்ட ஆரம்பிக்கிற நாள் முதல் அறுவடையாகித் தானியம் வீடுவந்து சேருகிற நாள்வரையில் வயிற்றுக்கு வேண்டியதை முன்னதாய்ச் சேகரித்து வைத்துக்கொள்ளாமல் வேளாளத்தொழிலில் தலையிட்டுக்கொள்வது மிகவும் புத்திஹீனமான காரியம். பயிரிடுகிறவிஷயத்தில், அறுவடைநாள்வரையில் வேறுவேலையின்றி ஓயாமல் உழைக்கவேண்டுவது இன்றியமையாததாயிருக்கிறது. அப்படி பாடுபடாவிட்டால் யாதொரு பலனும் கைக்கு எட்டாமல் அடுப்பு நெருப்பும் போய் வாய்த்தவிடும்போன கதையாய் முடிந்துபோமே! என்றிப்படிப் பலவிதமாய் அந்தச் சோமன் சிந்திக்கத்தொடங்கினான். ஆயினும் இப்படி எண்ணமிட்டுக்கொண்டிருப்பதினாலேயே அவனுக்குத் திருப்தியுண்டாகவில்லை. கடைசியில் அவன் மனதில் ஒருவிதமாய்த் தீர்மானமுண்டாயிற்று: கொஞ்சகாலம் முகத்தினீர் மூக்கில்வடிய நன்றாய் உழைத்து வேலைசெய்து கிடைக்கிற கூலியில் தினச்சாப்பாட்டுச் செலவுபோகச் சிறிது சிறிதாய் மிகுத்தி, வேளாண்மைத்தொழிலுக்கு இன்றியமையாததான மண்வெட்டி காறு கல்பைமுதலிய சாமான்களும், பயிரிட்டு அறுப்பாகிறவரையில் சாப்பாட்டுக்குப் போதுமானதாய் ஒரு மூட்டை நெல்லும் சேகரம் செய்துகொள்ளவேண்டுமென்று தீர்மானித்து, அப்படியே சிலநாள் வருந்தி வேலைசெய்து தான் கோரியபடியே ஒரு மூட்டைநெல் மிகுத்தி இதை மாவாக்கியாவது, நமது நிலத்தில் நிரம்பப் பயிர்கள் அறுவடைத்தருணமாய்க் கொந்தளிக்கக் காணுமளவும், கஞ்சிகாய்ச்சிக் குடித்துக்கொண்டு வேலைசெய்ய வேண்டுமென்று மனவுறுதிகொண்டான்.

எதையும் நாம் ஒன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்குமல்லவா! சோமன் இவ்வாறு ஏற்பாடு செய்துகொண்டு பயிரிடப் புகுந்தருணத்தில், சுந்தனென்கிற மற்றொரு வேள்ளாளன், சோமன் கொஞ்சம் தானியம் சேர்த்துவைத்திருக்கிறானென்று தெரிந்து, அவனண்டைவந்து: சகோதரனே! நீ வைத்திருக்கிற தானிய மூட்டையைக் கொஞ்சநாளைக்கு எனக்குக் கடனாகக் கொடுப்பாயா? அவ்வளவு சகாயஞ்செய்வாயானால், எவ்வளவோ பேருதவி

செய்தவனாக நினைத்து நான் உன்னிடத்தில் நன்றிபாராட்டுவேன். ஏனெனில், ஏதாவது கொஞ்சம் லாபமுண்டாகத்தக்க ஒரு காரியத்தைத் தொடங்கலாமென்று தோன்றியிருக்கிறது. அந்தக் காரியம் முடிவாகிறவரைக்கும் சாப்பாட்டுக்கு வேண்டுமான சரக்கு கையிருப்பிலிருந்தாலல்லது அந்த வேலையில் தலையிட்டுக்கொள்வது கூடாது. அது இல்லாமையாலேதான் நான் இப்போது சும்மா இருக்கும்படியாயிருக்கிறது. நீ மனம்வைத்தால் முடிந்துபோமென்றான். சோமன் அதைக்கேட்டு: நானும் இத்தனைநாள் அப்படித்தான் தவித்தேன். கொஞ்சநாளைக்கு வருந்தாமல் ஜீவனஞ்செய்யும்படியாய் இப்போதுதான் இந்த மூட்டையைச் சம்பாதித்தேன். இது எனக்கு எப்படி கிடைத்ததென்கிறாய்? என் கையோடுகூட வயிற்றையும் வருத்திச் சேர்த்தது. இப்படி நான் வேண்டுமென்று வருந்திச் சம்பாதித்துச் சேர்த்த பொருளை என் சொந்தவேலைக்கு உபயோகப்படுத்தாமல் நீ லாபம் சம்பாதிப்பதற்காக உன் கையில் கொடுத்துவிட்டு நான் இளித்தவாயனாய் நிற்பது நியாயந்தானா என்று கேட்டான். அதற்காக நெடுநேரம் அவ்விருவர்க்கும் ஒப்பந்தப்பேச்சு நடந்தது. அந்தப்பொருள் தன் சொந்த உபயோகத்திற்காகச் சேர்த்துவைத்திருக்கிறதென்று சோமன் எத்தனைதரம் மறுத்துச்சொல்லியும், 'பாம்பு தன் பசியை நினைத்ததாம், தேரை தன் விதியை நினைத்ததாம்' என்கிறபடி, சுந்தன்: நான் போகிறவழியென்ன? எனக்கு என்னசொல்லுகிறாய் என்றே கேட்டுக்கொண்டிருந்தான். கடைசியில் அவ்விருவர்க்கும் அந்த விவாதம் ஒருவிதமாய் முடிவாயிற்று. எப்படியெனில்,

முதலில் சுந்தன், இப்போது தான் சோமனிடத்தில் கடனாக வாங்கிக்கொள்ளுகிற ஒரு மூட்டை நெல்லையும், அளவிலும் எடையிலும் ஒருமணிகூடக் குறையாமல் அதேமாதிரியான தானியமாய் வருஷக்கடைசியில் திருப்பிக்கொடுப்பதாய் ஒப்புக்கொண்டான். அவன் அப்படி ஒப்புக்கொள்ளாவிட்டால் தீருமா? அந்தப் பொருளைத் திருப்பிக் கொடாதபக்ஷத்தில் இனமாய் வாங்கிக்கொண்டதாகுமேயன்றி கடனாக வாங்கிக்கொண்டதாகுமோ?

அதுமாத்திரமே அல்லாமல் நூற்றுக்கு ஐந்துவீதம் வட்டியும் கொடுக்கும்படி சம்மதித்தான். அப்படிக் கொடுக்கச் சம்மதியாவிட்டால் சோமன் கைம்மாறில்லாமல் உதவினதுபோலல்லவோ ஆகும். மேலும் சோமன், தான் சொந்தத்திற்கு உபயோகித்து அதனுதவியைக்கொண்டு ஒருவருஷகாலம் உழைத்து அதனால் விசேஷலாபம் அடையவேண்டுமென்று எண்ணங்கொண்டிருக்க, அவையெல்லாம் நிறுத்தி, அதை நமக்காக உபயோகப்படுத்துவதும், நாம் ஒருவருஷகாலம் அவன் தேடிச்சேர்த்த பொருளைக் கொண்டு ஜீவனம்பண்ணுவதும், அதனால் பிறகு நாம் விசேஷ

லாபமடைவதும் இவையெல்லாம் பதிலொன்றுமில்லாமல் செய்த காரியங்களாகுமே. சோமன் தன் சொந்தநிலத்தை உழுது பயிர்செய் வதை நிறுத்தி, அதற்குப் பதிலாய் நாம் வியாபாரம் செய்யும்படி அவன் சேர்த்துவைத்த பொருளைக் கொடுப்பதனால், அந்தப் பொருளைக்கொண்டு வியாபாரஞ்செய்து நாம் அடைகிற லாபத்தில் ஒருபங்கு அவனைச் சேருவது மிகவும் நியாயத்திற்கு ஒத்ததே யென்று சுந்தன் தனக்குள்ளே உறுதியாய்த் தீர்மானஞ்செய்து கொண்டு நூற்றுக்கு ஐந்துவீதம் வட்டி கட்டிக்கொடுப்பதாகப் பூர்ணமாய்ச் சம்மதித்தான்.

எவ்வளவுநேரமானாலும் சுந்தன் சொல்வதை மறுக்கமாளாமல் கொஞ்சம் கணக்குவழக்குக் கற்றுத்தேர்ந்தவனான சோமனும் தனக்குள்ளே ஒருவகையாய் யோசனைசெய்துகொண்டான். இப்போது நாம் கொடுக்கிற தானியத்தைச் சுந்தன் இந்த வருஷாந் தத்தில் திருப்பித் தருவதாகச் சொல்லுகிறான். அப்படியே அது வருமாயின், மறுதரம் அதை ஒரு வருஷத்திற்குக் கடன் கொடுக்கலாம். அது திரும்பிவந்தபிறகு மறுபடியும் கடன்கொடுக்கலாம்; அதை மறுபடியும் கொடுக்கலாம். இப்படியே வெகுநாளைக்கு நடத்தலாம். இப்போது நாம் கடன்கொடுக்கிற தானியம் சிலநாளையில் புசித்தாய்விடுகிறதல்லவா? இதென்ன புதுமை! நாம் அப்பப்போது கடன்கொடுக்கிற தானியம் அப் பப்போது செலவழிந்துபோனபோதிலும் அந்தப் பொருளின் உரிமைமாத்திரம் நம்மைவிட்டு நீங்குவதில்லை. ஆனால் அந்தப் பொருளை நாம் மறுபடி வாங்கிக்கொள்வது அநியாயமோ? அல்ல. முதலில் இந்தத் தானியம் சுந்தன் விஷயத்தில் உபயோகமாகி அவன் பெரும்பயன் பெறும்படி பிரயாசைப்படுவதற்கு ஆதாரமா கின்றதல்லவா? அதனால் நாம் கொடுத்த தானியத்தையாவது அத ற்கு ஈடான வேறெந்தப் பொருளையாவது அவன் ஒரு வருத்த மும் இல்லாமல் திருப்பிக்கொடுக்க வல்லவனாகிறான். எவ்வளவு காலம் அந்தப் பொருளை நாம் சொந்தத்திற்கு உபயோகப்படுத்த வில்லையோ, அவ்வளவுகாலம் அது நமக்கு உரியதாகவே இருக்கி றது. இதைக்கொண்டு நாம் நமது நிலத்தைப் பயிர்செய்வோமா னால் நமக்கு அளவற்ற பயன்கிடைக்குமல்லவா? அதில்லாமல் நாம் கடனாய் மற்றொருவனுக்குக் கொடுக்கிறோம். அது அப்படியே நம்மிடத்திற்குத் திரும்பிவந்து சேருகிறது; இது நியாயந்தான்.

இவ்வளவோடு இராமல் சுந்தன் இரண்டாவது ஒன்று சொல் லியிருக்கிறானே. அதனால் இப்போது கடன்கொடுக்கிற தானி யத்திற்கு நூற்றுக்கு ஐந்துவீதம் வட்டி கிடைக்குமென்று தெரி கிறது. இப்போது நாம் சேர்த்ததுபோல் இன்னும் கொஞ்ச காலம் வருந்திச் சம்பாதித்துச் சேர்ப்போமானால் கொஞ்சகாலத் தில் இரண்டுமூட்டை தானியங் கடன்கொடுக்கும்படியாகும்.

மறுபடியும் அவ்வாறே செய்வோமானால் மூன்றுமூட்டை தானியம் கடன்கொடுக்கும்படியாகும். பிறகு நான்கு கொடுக்கும்படியாகும்; பின்பு ஐந்தாகும்; இப்படியே இந்தத் தானியங்களின் மேல் நூற்றுக்கு ஐந்துவீதம் கிடைக்கிற வட்டியே எந்நாளும் நமது சுகஜீவனத்திற்குப் போதுமானதாகும்படி அவ்வளவு தானியம் சேர்த்துப்போடுவோமானால் தள்ளாதநாளில் வருந்தாமல் உட்கார்ந்த இடத்திலேயே இருந்து சுகமாக ஜீவனம்பண்ணலாம். அப்படியானால் பிறர் பொருளைக்கொண்டு பிழைப்பதாகுமோ? ஒருபோதும் ஆகாது. இப்போது நாம் கடன்கொடுத்து அவர்களுக்கு உதவிசெய்திருக்கவில்லையா? நம்மிடத்தில் கடன்வாங்குபவர்களுக்கு ஒரு வியாபாரத்தைத் தொடங்குவதற்கு வேண்டிய முன் வருத்தத்தை நாம் ஏற்றுக்கொண்டதற்காக, அவர்கள் தேடுகிற லாபத்தில் நாம் சிறிதளவு வாங்கிக்கொள்ளுகிறோம். இப்படி ஒரு மனிதன் ஒருவர்க்கும் உபத்திரவமில்லாமல் தான் சுகமாக வாழவேண்டிய வழியைத் தேடிக்கொள்வது எவ்வளவு சிறப்பாயிருக்கிறது! இந்த வழியைப்பார்த்து நியாயமாய் ஒருவன் பொருமைப்படுவதற்காவது நிந்தனை செய்வதற்காவது யாதொரு காரணமுமில்லை என்று இவ்வாறு தனக்குள்ளே யோசனைசெய்து மகிழ்ந்துகொண்டு சோமன் தனக்காகத் தேடிய பொருளைக் கடன் கொடுக்கத் துணிந்தான்.

(இழைப்புளி.)

ஒரு சிறு கிராமத்தில் சிற்பசாஸ்திரத்தில் சிறிதளவு பயின்றவனான பொன்னனென்கிற தச்சனொருவன் நாள்தோறும் பொழுதுவிடிந்தால் பொழுது போமளவும் கையோயாமல் உடல்வருந்த வேலைசெய்துகொண்டிருந்தான். அக்காலத்தில் அவன் மனதும் சும்மாவிருக்கவில்லை. நாம் எத்தனைநாளைக்குச் சிறிதும் விருத்தியில்லாமல் ஒரேவிதமான வேலைசெய்துகொண்டிருக்கிறது; இப்போது நாம் வைத்துக்கொண்டிருக்கிற வாள், கோடரி, சம்மட்டி, சுத்தி, உளியாகிய இக்கருவிகளைக்கொண்டு செய்கிற சாமான்களெல்லாம் நாணயமற்ற முரட்டுச்சாமான்களாயிருக்கின்றன. வரும்படியும் அதற்குத் தக்கபடிதான் வருகிறது. நல்லதாய் ஒரு இழைப்புளிமாத்திரம் இருக்குமாயின், வெகு நேர்த்தியாய் வேலைசெய்து சாமான் வாங்கவருகிறவர்களுக்கு அதிகமாய்ச் சந்தோஷமுண்டாக்கலாம்; கூலியும் அதிகமாய்க் கிடைக்கும். எப்படியாவது வியாபாரத்தைப் படிப்படியாய் விருத்திபண்ணவேண்டுமேயன்றி சும்மாயிருப்பது சரியல்ல. உடனே இழைப்புளியொன்று சித்தப்படுத்திக்கொள்ளவேண்டியதுதான் என்று மனவுறுதிகொண்டான்.

இவ்வாறு ஆலோசனை செய்துகொண்டு அவன் வேலைசெய்யத் தொடங்கும்போது அவன் மனதில் மற்றொரு தோற்றமுண்டாயிற்று. இப்போது

நாம் இழைப்புளி செய்யப் பத்துநாள் செலவழிப்போமானால் இந்தப் பத்துநாளைய வரும்படி போய்விடுகிறதல்லவா? இந்த நஷ்டத்தைப் பிறகு இந்த இழைப்புளியைக்கொண்டு செய்கிற சாமான்களாலேதானே பதிலாக்கிக்கொள்ளவேண்டும். மேலும் அந்த நஷ்டம்மாத்திரமே அல்லாமல் இன்னும் அதிக லாபமும் அந்தச் சாமான்களால் நமக்குக் கிடைக்கவேண்டும். இல்லாவிட்டால் நமது வியாபாரத்தைச் சீர்திருத்த முயன்றதற்குப் பயனென்ன? ஆதலால் இந்தப் பத்துநாளைய நஷ்டமும்போய் விசேஷலாபமும் கிடைக்கும்படியாகவே சாமான்களை விற்கவேண்டும் என்று மனதில் எண்ணங்கொண்டு சந்தோஷமாய் வேலையிலிழிந்தான். கடைசியில் அவன் செய்த ஆயுதத்தின் பெருமை எத்தன்மையாய் முடிந்ததோ பாருங்கள்.

பொன்னன் கருதியபடியே பத்துநாளில் வெகு நேர்த்தியாய் இழைப்புளிசெய்து முடிந்தது. அது தன் கையாலும் புத்தியாலுமே செய்து முடிந்ததாகையால் அவன் மற்ற ஆயுதங்களைவிட அதையே மேன்மையாகப் பாராட்டினான். அந்த ஆயுதத்தைச் செய்து முடிக்கவே சந்தோஷம் உள்ளடங்காமல், உடல்தெரியாமல் தாறுமாறாய் ஆடவும் பாடவும் ஆரம்பித்தான். அவ்வளவு சந்தோஷத்திற்குக் காரணம் என்னவெனில், ஒரு புளியங்கொட்டையைக்கொண்டு கணக்கிட்ட கோமுட்டிகதையாய் அந்தப் பொன்னன், தன் இழைப்புளியைக்கொண்டு வேலைசெய்து கொஞ்சம் பொருள்தேடி அதைக்கொண்டு ஒரு ஆடுவாங்கி, அதனால் கொஞ்சம் பொருள் சம்பாதித்த அதைக்கொண்டு ஒரு மாடுவாங்கி, அதனால் கொஞ்சம் பொருள் சம்பாதித்து அதைக்கொண்டு இன்னும் சில உயர்ந்த வஸ்துக்கள்வாங்கி இப்படியே விசேஷமாய்ப் பொருள் சம்பாதித்துப் பூமிவாங்கிக் கொஞ்சங்கொஞ்சமாய்ப் பயிர்செய்து தானியங்களை விற்று தேவசபைபோல ஆகாயமளாவியதாய் ஒரு வீடு கட்டிக்கொண்டு இன்னும் வேண்டிய சவுக்கியங்களையும் தேடிக்கொண்டு மேன்மையாய் வாழலாமென்று மனோராஜ்யம் செய்துகொண்டிருந்தான்.

பொன்னன் இப்படி எண்ணமிட்டுக்கொண்டிருக்கையில், அவனுக்கு மிகவும் இஷ்டனான மாணிக்கமென்கிற பக்கத்தூர்த் தச்சனொருவன் ஏதோ காரியமாய் அவ்விடத்திற்கு வந்தான். அங்கே பொன்னன் செய்து வைத்துக்கொண்டிருந்த அற்புதமான இழைப்புளியைக் கண்டு ஆச்சரியப்பட்டு, அதை எப்படியாவது தான் வாங்கிக்கொண்டு போகவேண்டுமென்று ஆசைகொண்டு பொன்னனைக் கண்டு கேட்க, அவ்விருவர்க்கும் கீழே வருகிறபடி சம்பாஷணை உண்டாயிற்று.

மாணிக்கம்: அப்பா நண்பனே! நீ எனக்கு ஒரு உதவிசெய்வாயா?

பொன்னன்: என்ன உதவி?

மாணி. உன் இழைப்புளி ஒரு வருஷத்திற்கு எனக்கு வேண்டியிருக்கிறது. அவ்வளவு சகாயஞ்செய்வாயா?

போன். (நாம் மேலே சொன்னபடி தன் புத்திக்கெட்டினமட்டும் ஆலோசனை செய்துகொண்டிருந்த பொன்னனுக்கு இந்தப் பேச்சைக் கேட்டால் எப்படியிராது? அதைக்கேட்டு ஒன்றும் தோன்றாமல் மனந்தடுமாறினவனாய்ச் சொன்னது) நல்லது; நான் உனக்கு இந்த உபகாரஞ்செய்தால் அதற்கு நீ என்ன பிரதியுபகாரம் செய்வாய்?

மாணி. நான் ஒன்றும் செய்யமாட்டேன். இரப்போர்க்கு யாசகம் கொடுப்பது சுகிருதமென்று உனக்குத் தெரியாதோ? மேலும் நாம் இருவரும் சிநேகம் பாராட்டிக்கொண்டிருக்கிறோமென்பது உனக்குத் தெரியாதோ? என்னிடத்தில் கைம்மாறு பெற்றுக்கொண்டு நீ எனக்கு உதவி செய்தால் அதனால் உனக்கு என்னபெருமை?

போன். அண்ணே! மாணிக்கம்! சிநேகம் செய்துகொண்டமாத்திரத்திலே யாசகங்கொடுக்கவேண்டுமென்பது கடமையோ? அப்படித்தான் இருந்தாலும் கொடையெல்லாம் ஒருவன் பக்கத்திலேயே இருக்கவேண்டுமென்பதற்கு ஏதாவது நியாயமுண்டோ? அப்படியானால் அவையெல்லாம் உன்னிடத்திலேதான் ஏன் இருக்கக்கூடாது? ஒருவனுக்கு இனமாய்க் கொடுக்கவேண்டுமென்பதுதான் என்ன அவசியமோ அதுவும் எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று தெரிகிறது. இப்போது இதை நான் கொடுத்துவிட்டால் நீ எடுத்துக்கொண்டு ஓடிப்போகிறேனென்கிறாய். அப்படியானால் இந்த இழைப்புளி செய்தகாரியம் எதுவோ அது நிறைவேறிற்று சொல் அண்ணே?

மாணி. தம்பி! இப்போது அந்த நியாயங்களைப்பற்றி நான் ஒன்றும் பேசவரவில்லை. எனக்கு ஒரு உதவி செய்வாயாவென்று கேட்டேனேயொழிய வேறில்லை. நல்லது, இந்த உதவிக்கு உனக்கு என்ன பதில் செய்யவேண்டும்?

போன். முதலில் ஒன்று சொல்லுகிறேன். இந்த இழைப்புளியை ஒரு வருஷகாலம் நீ கையாள்வாயானால் அவ்வளவோடு நான் வேண்டுமென்று செய்த இழைப்புளி உபயோகமற்றதாய்விடுமல்லவா? அப்போது நீ இதைப் போல் வேறொன்றுதான் செய்துகொடுக்கும்படியாகும். அல்லது அதைப் பழுதுபார்ப்பதற்குவேண்டிய பொருளாவது கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் இதைச் செய்வதற்குச் செலவான பத்துதினத்து வரும்படியையாவது எனக்கு ஒத்துக்கொடுக்கவேண்டும்.

மாணி. தம்பி! இப்போது உன் புத்தியை மெச்சுவார் ஒருவருமில்லை. நீ சொன்னது சரிதான். இதை நான் ஒப்புக்கொள்ள யாதொரு தடையுமில்லை. இந்த ஆயுதத்தைப் புதிதாயாவது செய்துகொடுக்கிறேன்; இல்

'லாவிட்டால் அதைச் செப்பனிடுவதற்குப் பிடிக்கும் செலவையாவது ஒத்துக்கொடுக்கிறேன். சரிதானே; இனி உனக்கு ஆக்ஷேபமொன்றுமில்லையே.

பொன். என் எண்ணம் அதல்லவே. இந்த இழைப்புளியை நான் என்க்காகச் செய்தேனே ஒழிய உனக்காகச் செய்யவில்லை. இந்த இழைப்புளியின் உதவியால் வெகு நாணயமாய் வேலைசெய்து கொஞ்சம் விசேஷமாய்ப் பொருள் சம்பாதித்து விருத்தியடையலாமென்பது என் எண்ணம். மரம்வைத்து வளர்த்தவனொருவனிருக்க அதன் பலத்தை மற்றொருவன் அனுபவிப்பதுபோல், இழைப்புளி செய்தவன் நானிருக்க அதனால் விளைகிற லாபத்தை நீ அனுபவித்துக்கொண்டுபோவதற்கு நியாயமென்ன? அப்படியாயின், நீ வைத்திருக்கிற உன் வாளையும் சுத்தியையும் எனக்குக் கொடுத்துவிடேன். என்ன மயங்குகிறாய்? முன்கை நீண்டாலல்லவோ முழங்கை நீளும்? தன் கையைச் சும்மா வைத்துக்கொண்டிருப்பது எப்படி நியாயமல்லவோ, அப்படி தன் கையினால் செய்த கருவியைத் தன்னிடத்திலேயே வைத்துக்கொண்டிருப்பதும் நியாயமல்லவென்று சொல்லுகிறாயே. நல்லது, தன் கையைப் பிறர்க்கு இனாமாய் உபயோகப்படுத்துகிறவனைத்தான் அடிமை என்று சொல்லுகிறோம். அதுபோலத் தன் பொருளைப் பிறர்க்கு இனாமாய் உபயோகப்படுத்துகிறவனைத்தான் தோழனென்று சொல்லவேண்டுமோ?

மாணி. இதென்ன, நீ என்னென்னவோ பேசுகிறாய்? உன் இழைப்புளியை இந்த வருஷக்கடைசியில் இப்போது இருப்பதுபோலவே புதிதாய்க் கூருமழுங்காமல் வருணமுதலியவைகளும் மாறாமல் திருப்பிக்கொடுத்துவிடுவதாய்ச் சொல்லுகிறேனே; அதன்பிறகென்ன பேச்சு?

பொன். வருகிற வருஷத்தைப்பற்றி நாம் இப்போது ஒன்றும் பேசவேண்டாம்; இந்த வருஷத்தைப்பற்றி அல்லவோ இப்போது பேசுகிறோம். என்னுடைய வியாபாரத்தையும் அந்தஸ்தையும் விருத்திபண்ணவேண்டுமென்றே நான் இப்போது இந்த இழைப்புளி செய்தது. ஒரு வருஷம் கழித்து இதை நீ எனக்குத் திருப்புவதானால் அதுவரையில் இதன் பயனை அனுபவிப்பது யார்? அப்படி உன்னிடத்திநின்றும் யாதொரு பதிலும் பெற்றுக்கொள்ளாமல் உனக்கு உதவவேண்டுமென்பது எனக்குக் கடமையா என்ன? ஆதலால் இப்போது நான் சொந்த உபயோகத்திற்காகச் செய்துகொண்ட ஆயுதத்தை நீ விரும்புவாயானால் அதற்குத்தகுந்த வெகுமானம் ஏதாவதொன்று நீ எனக்குக் கொடுக்கச் சம்மதிக்கவேண்டும்.

இப்படி அவ்விருவரும் நெடுநேரம் வாதாடினார்கள். கடைசியில் ஒருவிதமாய் முடிவாயிற்று. மாணிக்கமென்பவன், தான் பொன்னன் இழைப்புளியை ஒரு வருஷம் கழித்துப் புதிதாகவே திருப்பிக்கொடுப்பதாய்ச் சம்மதித்ததுந்தவிர, பெரும் வெண்பாலைப்பலகையொன்று இனா

மாய்க் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டான். அந்தப்பலகை பொன்னனுக்கும் அவசியம் தேவையாயிருந்தது. ஏனெனில் அவன் தன் சொந்தவேலைக்காக வைத்துக்கொண்டிருந்ததைத் தன் நண்பன் ஒருவனுக்குக் கொடுத்துவிட்டான். இந்த வியாபாரத்தில் எவன் நியாயவாதியோ ஆய்ந்து பாருங்கள்.

பொன்னனிடத்திலிருந்து தான் வாங்கிக்கொண்ட இழைப்புளியை மாணிக்கம் ஒரு வருஷமானதும் திருப்பிவிட்டான். பொன்னன் அதை மறுபடியும் ஒரு வருஷத்திற்குக் கடன்கொடுத்தான். மறுபடியும் திரும்பிவர அதை மற்றொருதரம் கடன்கொடுத்தான். அப்படியே அவன் தன் வாழ்நாள் முழுதும் அந்த இழைப்புளியைக் கடன்கொடுத்துக்கொண்டே இருந்து காலஞ்சென்றான். அவன் காலத்திற்குப்பிறகு அவன் பிள்ளையும் அதே செய்கையில் இறங்கினான். ஐயோ! அநாத இழைப்புளி பாவம்! எத்தனை பேர் கையில் அகப்பட்டுக்கொண்டு அலைபடும்! அதன் உருவமோ எத்தனையோதடவை மாறிப்போயிற்று. எத்தனையோதரம் அதன் பிடி போய்விட்டது. எத்தனையோதரம் உளி போய்விட்டது. முதலிலிருந்த இழைப்புளி முதல்வருஷமே மாறிப்போனாலும் அதன் விலை ஒருபோதும் மாறவில்லை. பொன்னனுக்கிருந்த அதனுரிமையுமாறவில்லை.

மரியாதைகளைப்பற்றி.

மரியாதைகளென்பவை உலகத்தில் நல்வழி கற்பிக்கின்ற நீதிவாக்கியங்களென ஒரு வித்துவான் சொல்லியிருக்கிறார். உண்மையாய் அவை நீதியாகாவிடினும் நீதியின் சாயலாகக்கொள்ளலாம். சிறந்த மேனியைவிடச் சிறந்த ஆசாரம் எவ்வளவோ மேலானது. அழகிய சித்திரங்களும் பிரதிமைகளும் எவ்வளவு சந்தோஷத்தை உண்டுபண்ணுமோ, அதைவிட மேலான சந்தோஷத்தை நன்னடக்கையுண்டாக்குகின்றது. உலகத்திலுள்ள சிறந்த கல்விகளெல்லாவற்றிலும் மிகச்சிறப்புற்றது நல்லொழுக்கம் அல்லது மரியாதையே. இந்தச் சிறந்த வித்தையை ஒவ்வொருவரும், நான் முன்னே நான் முன்னேயென்று மேல்விழுந்து, முழுமையும் தாமே ஆக்கிரமித்துக்கொள்ள ஆவல்கொள்ளாமலிருப்பது எவ்வளவு பரிதாபமாயிருக்கிறது! உயர்ந்த அந்தஸ்திலிருக்கிற பிரபுக்களுக்கு அவர்களுடைய மேலானபதவியே பலவந்தமாய் நல்லொழுக்கங்களைப் படியச்செய்து மரியாதையாய் ஒழுகப்பயிற்றுவிக்கும். தாழ்ந்த பதவியிலுள்ளவர்களும் ஒருவர்க்கொருவர் மிக்கமரியாதையாய் நடந்துகொள்வதற்கு யாதொரு தடையுமில்லை. ஏனெனில், மரியாதையென்பது என்னவென்று நினைக்கிறீர்கள்? நமது மித்திரர்களுக்

கும் பந்துக்களுக்கும் மற்றுமுள்ள பல ஜனங்களுக்கும் யாதொரு மனவருத்தமும் உண்டாகாமல் நடந்துகொள்வதேயொழிய வேறல்ல. இவ்வுலகத்தில் ஒருவர்க்கும் மனதில் எள்ளளவேனும் அசந்துஷ்டியுண்டாக்காதபடி எவன் நடக்கிருனே அவனே மரியாதையுடையவனுவான்.

வீண்பெருமை, அகங்காரம், துஷ்டசுபாவம், பக்ஷமின்மையாகிய இக்குணங்களே முக்கியமாய்க் கெட்டநடத்தை சுரப்பதற்கு ஊற்றுக்கண்களாயிருக்கின்றன. ஒரு மனிதன் தன்னையும் தன் குணங்களையும்மாத்திரம் மறந்து, தன் புத்திவிவேகங்களைக் கைவிடாமல் பிறரிடத்தில் தயைதாக்ஷிணியமுள்ளவனுயிருப்பனுயின், அவனுக்குச் சொல்லிலாகட்டும் செய்கையிலாகட்டும் சிறிதளவும் தவறு நேராது. அப்படிப்பட்ட மனிதர்கள் பல சபைகளுக்கும் சம்ஸ்தானங்களுக்கும் போகவேண்டிய விதங்களையும் நடத்தவேண்டிய மரியாதைகளையும் கற்றறியாமலிருந்தாலும் இருக்கலாம். பார்வைக்குப் படாடோபமாயிருந்து உள்ளே ஒன்றுமில்லாமலிருப்பதைவிட, உள்ளே நற்குணங்கள் நிறைந்து மேலுக்கு அவலக்ஷணமாயிருப்பதே மேலானது. மேல்தோற்றம் எப்படியிருந்தாலும் நற்புத்தியும் நல்லெண்ணமுமிருக்குமாயின், அவை சபையிலிருப்பவர்களோடு செம்மையாய்ப்பேசி மிகுந்த மேம்பாட்டைத்தாமே விளைவிக்கும். அப்படியில்லாமல் பார்வைக்கு வெகு பகட்டாய்த் தோன்றி உள்ளே சாரம் ஒன்றுமில்லாமல் காரியத்திற்கு உபயோகமற்றிருப்பவன், பார்வைக்குப் பூனைபோலிருந்து கழுத்தறுக்கிற கொடியனுக்கு எள்ளளவுங்குறைந்தவனல்லன். நாம் படிப்பில்லாமலே எப்படி புத்திமான்களாயிருக்கக்கூடுமோ, அப்படியே மரியாதையாய் நடப்பதற்கு வழிகாட்டும் ஏட்டுவிதிகளும் நியாயங்களும் சிறிதும் படியாமலே மரியாதையுடையவர்களாகலாம். அந்த விதிகளெல்லாம் நமது விவேகத்திற்குத் துணைக்கருவிகளேயொழிய வேறல்ல. ஊன்றிப்பார்க்குமளவில் அந்த விதிகள் ஒவ்வொரு இடத்தில் ஒவ்வொருவிதமாகவும், ஒரு இடத்திலேயே பலவிதமாகவுமிருப்பதனுல் நாம் செம்மையாயொழுகக்கற்பதற்கு அந்த விதிகள் உபயோகமுமல்ல.

அகங்காரமானது மனிதர்களை விசேஷமாய்த் தமது பெருமையையே பாராட்டும்படி செய்கிறது. அதனுலேதான் அகங்காரிகளுக்கு நன்னடக்கை அதிகமாய்ப் படிவதில்லை. ஏனெனில், நாம் எப்போதும் நமது காரியங்களையும் கதைகளையுமேகுறித்துக் கவனித்துப் பெருமைபாராட்டிக்கொண்டிருப்போமாயின், பிறர்படுகிற துன்பங்களையும் தொல்லைகளையும்பார்க்கவும், அவர் பேசுகிறபேச்சைக் கவனித்துக்கேட்கவும் நமக்கு மனம் வருமா? மேலும் நாம் சுபாவமாயிருக்கவேண்டுமென்று அதற்காக ஒரு யத்தினப்படக்கூடாது. யத்

தினப்பட்டால் அதுவே கடைசியில் கபடமாகும். ஆதலால், தன்னை நல்லவனென்று யாவரும் சந்தோஷித்துச் சொல்லவேண்டுமென்று ஒருவன் விரும்பினால் அவன் தன்னை மறந்து தன் இயல்பான சுபாவத்தோடிருக்கவேண்டும். புதிதாய்க் கலியாணமாகிக் கொஞ்சம்பருவம்வந்த இக்காலத்துப்பெண்களும், கொஞ்சம் கற்றோமென்று கர்வங்கொண்ட வயதுபிள்ளைகளும் எவ்வளவு அவலக்ஷணமாய் நடக்கிறார்கள்? இதற்கு முதற்காரணம் தம்பெருமையைப் பாராட்டுகிற தன்மையேயொழிய வேறென்ன?

அகங்காரத்தினாலேதான் ஆத்மஸ்துதிகளும் கங்குகரையில்லாமல் உத்பத்தியாகின்றன. ஆத்மஸ்துதியைவிட நன்னடக்கைக்கு வேர்ப்புழு வேறொன்றுமில்லை. எவனொருவன் எப்போதும் தன்னையும் தன் இனத்தாரையும் புகழ்ந்து பேசுகிறானோ, எவன் ஒருவன் தன் குலகோத்திரங்களையும், அந்தஸ்தையும், தன் வியாபாரங்களையும், தானடையும் காரியசித்திகளையுமே மேன்மையாய் எடுத்துப்பேசி, எளிய ஜனங்களை அலக்ஷியஞ்செய்கிறானோ, எவனொருவன் பிறர் நடத்தையைக்கண்டு ஏளனஞ்செய்வதைத் தவிர்க்கக்கூடாத தன்மையுடையவனாயிருக்கிறானோ, அவன்தான் கெட்ட நடத்தையுள்ளவன். பெரிய மனிதனுக்கு உள்ள மனோகுணங்கள் ஒருவனுக்கு இருக்குமாயின், அவன் ஒருபோதும் எளியவர் துக்கப்படும்படி தன் சந்தோஷத்தையும் அகங்காரத்தையுங் காட்டமாட்டான்.

துடுக்காய்ப்பேசுகிற வழக்கமும், ஒருவனை உதாசீனமாய் எடுத்தெறிகிற குணமும் உள்ளவன் மரியாதை உடையவனாவானோ? அந்தத் துர்க்குணங்களெல்லாம் அகங்காரத்தால் எவ்வளவு உண்டாகுமோ, அவ்வளவு கெட்டசுபாவத்தாலும் உண்டாவதில்லை. மரியாதைக்கேடான ஒரு காரியத்தைச்செய்ய ஒருவனுக்கு எவ்வளவு சுதந்தரமுண்டோ, அவ்வளவுதான் மரியாதைக்கேடான பேச்சைப் பேசுவதற்கும் சுதந்தரமுண்டு. ஒருவனை நன்றாய்ப் புடைப்பதற்கு எவ்வளவு சுதந்தரமுண்டோ, அவ்வளவுதான் ஒருவனைப் பார்த்துத் துடுக்காய்ப்பேசுவதற்கும் சுதந்தரமுண்டு. பிறரை அலக்ஷியஞ்செய்யத்தக்க கர்வம் ஒருவனிடத்தில் உண்டென்பதை அறிந்துகொள்வதற்கு அநேக வழிகளுண்டு. அத்தன்மையான துர்க்குணமுள்ளவன் மரியாதைக்கேற்றபடி ஒழுங்காய் உடைகளைத்தரியான்; அவனொருகாலும் அழுக்கற்றுச் சுத்தமாயிரான்; பலவகைக் கெட்ட நடைகளுக்கும் இடங்கொடுத்திருப்பான்; சிலர் தமது குடிப்பிறப்பு சாமர்த்தியம் சம்பத்துமுதலியவை எவ்வளவோ சிறந்தவையென்று மதித்து, நமது மேன்மைகளைப்பற்றி உலகத்தாருக்கு என்னதெரியுமென்று நினைத்து அகங்களித்துப் பேசுவார்கள்.

ஒருவனுக்குப் பிறரிடத்தில் இரக்கமில்லாதிருக்குமாயின், அவன் நெஞ்சில் கேடுவிளைவிக்கும் கடினத்தனமொன்று உண்டா

கின்றது. கடினத்தனமாவது அயலாருடைய மனவருத்தங்களை நுட்பமாய் அறியவேண்டுமென்கிற கவலையில்லாமைதான். அது ஒருவனிடத்தில் பகையினாலும் உண்டாவதில்லை; அலக்ஷியத்தாலு முண்டாவதில்லை. ஒருவர்க்குச் சந்தோஷமுண்டாக்கத்தக்கவை இவையென்பதும், வருத்தமுண்டாக்கத்தக்கவை இவையென்பதும் நுட்பமாய்த் தெரிந்துகொள்ளத் திறமையில்லாமையால் உண்டாகின்றது. கல்நெஞ்சன் ஒருவன் பிறருடைய பந்துக்களைப் பற்றியாவது, பெண்டுபிள்ளைகளைப்பற்றியாவது, தேசத்தைப்பற்றியாவது துர்ப்பாஷையாய்ப் பேசாமலிருந்தால் அவ்வளவோடு தான் உலகத்திற்கு மகோபகாரஞ்செய்துவிட்டதாக நினைத்து, தனக்குள்ள பேசுந்திறமையால் அயலார்மனம் புண்படும்படி பலவிதமாய்ப் பேசுவான். ஆயினும் நாம் அவனவனுடைய சுபாவம் இப்படிப்பட்டதென்று மேல்தோற்றத்தினாலே முழுதும் நிதானிக்கக்கூடாது. எந்தப் புற்றில் எந்தப்பாம்பு இருக்குமோவென்று அஞ்சி நிற்கவேண்டும். அநேகர் பார்வைக்குப் பூனைபோலிருந்தாலும் பாய்ந்தாற் புலியாயிருப்பார்கள். இக்கருத்துதான்

> "அடக்க முடையா ரறிவில ரென் றெண்ணிக்
> கடக்கக் கருதவும் வேண்டாம்"

என்கிற பாவினாலும் விளங்குகிறது.

இதுவும் அல்லாமல் உலகத்தில் அநேகர் புதிதாய் யாராவது ஒருவர் வந்தால் அக்காலத்தில், தாம் இயற்கையாயிருப்பதைவிட்டுப் பலவித விகாரங்களையுஞ் செய்துகொள்வார்கள். நம்முடைய சுபாவம் வெளிக்குத் தோற்றுகிறபடிதானோ வேறோவென்று நிதானித்து உற்றுப்பார்த்து அவர்கள் அறிந்துகொள்ளமாட்டார்களாகையால், யாராவது புதிதாய் ஒருவர் வருகிறகாலங்களில் நாம் வேஷதாரிகள்போல் குதிக்கக்கூடாது. அப்படிச் செய்வோமானால் அநேகர் வெறுப்படைந்து போகிறபோக்கில் இழிவாய்ப் பேசிப் போவதைக்கேட்டுத் துக்கப்படும்படியாகும்.

பிறப்பிலேயே மடப்பிறப்பான ஒருவன் ஒருகாலும் மரியாதையுடையவனாகமாட்டான். ஏனெனில், நல்ல அறிவில்லாத ஒருவன், நான்குபேர் சேர்ந்திருக்கும் ஓரிடத்திற்குப்போனால் புத்தியீனனென்றே பேரெடுத்துக்கொண்டுவருவான். ஒருவன் மரியாதையுடையவனாவதற்குக் கேவலம் அறிவுமாத்திரமே போதுமானதன்று. முக்கியமாய்ச் சாதுரியமும் சமயத்துக்கேற்ற ஊகையுமே அவசியமானவை. புருஷர்களைவிட ஸ்திரீகள் அதிக மரியாதையாய் ஏன் நடக்கிறார்கள்? அவர்களுக்கு மன்னுயிரிடத்திலிருக்கும் அன்பும் ஊகையும் அந்தந்த வேளைக்குத்தகுந்தபடி யுக்திசாதுரியங்களையும் நாகரிக நடக்கையையும் உண்டாக்குகின்றன. அந்தந்த சமயத்துக்குத்தக்கபடி செய்யவேண்டிய யுக்தி

களை உண்டாக்கவல்ல ஊகை யொன்றுமாத்திரம் இல்லாமல், சிறந்த சாஸ்திரஞானமும் யுக்தாயுக்த விவேகமும் எவ்வளவு இருந்தாலும் சமயத்துக்கு உபயோகப்படா. வேண்டிய ஞானமிருந்து சிறிதும் ஊகையில்லாத ஒருவன், அளவற்ற ஆஸ்தியைப் புதையல் போட்டுவிட்டுச் செலவுக்காகக் கையில் காசுகூட இல்லாமல் தவிக்கிற தனவான்போலாவான்.

ஒருவன் விசேஷமாய் மரியாதையைக் காட்டவேண்டிய இடங்கள் உலகத்தில் பலவுள. ஆயினும் அவற்றுள் சம்பாஷணையைப் போலச் சிறந்தது வேறொன்றுமில்லை. மரியாதையுள்ள மனிதர்கள் தாம் அதிகமாய்ப் பேசாமல் பிறர்சொல்லுவதையே விசேஷமாய் உற்றுக்கேட்பார்கள். எதிரிவாயை எப்போது அடக்கப்போகிறோமென்கிற ஆவலுங்கொள்ளார்கள். தம்வாயை எதிரி அடக்கினாலும் வருத்தமடையார்கள். சம்பாஷணைசெய்கிற காலங்களில் தம் பிறப்புவளர்ப்புமுதலிய கதைகளைச் சொல்லுவதும் எதிரிக்குப் பொத்தும்படி விடைகொடுப்பதும் உபயோகமற்றவையென்று தெரிந்து, எதிராளி சொல்லுவதையே சாந்தமாய்க் கவனிப்பார்கள். எதிரி சொல்லுகிற யுக்தி சரியானதாயிருக்குமானால் அதன்மேல் சற்றும் வாயைத்திறவார்கள். சம்பாஷணைகாலங்களில் வாய்பதைத்துப் பேசக்கூடாதென்பதும், சில ஸமயங்களில் பொறுத்து வாயைத்திறவாமலிருக்கவேண்டுமென்பதுமாத்திரமேயல்ல; வேறொரு விதியுமுண்டு. நாம் சொல்லுவது சரியென்று நாமே சாதிக்கக்கூடாது; எதிரியையும் அவன் சொல்லுகிற விஷயத்தையும் நாம் எவ்விதமாய் நினைப்போமோ, அப்படித்தானே நம்மையும் நாம் சொல்லுகிற விஷயத்தையும் அவன் நினைத்துக்கொண்டிருப்பானென்பது நம்மனதில் உறுதியாயிருக்கவேண்டும். ஆதலால் யாராவது புதிதாய் ஒருவர் வந்தால் அவரோடு பொதுவாய் நமது குடும்பத்தின் கதைகளையும், அவற்றுள் முக்கியமாய் நமக்கு உண்டான நோய்களையும், இன்னும் பல தொல்லைகளையும், படிப்பதற்காக நாம் பட்டவருத்தங்களையும், பொருள் தேடுவதற்காகப் பட்டவருத்தங்களையும், கடைசியாய் இவை ஒவ்வொன்றிலும் அடைந்த காரியசித்தியையும்பற்றிப்பேசிப் புகழ்ந்துகொள்வதிற் பயனென்ன? இவ்விதமாய் ஒருவரோடுபேச, கடைசியில் அவர் நம்மை அகம்பிடித்தவனென்றோ துஷ்டனென்றோ எதோ ஒருவிதமாய் நினைத்துக்கொண்டுபோவானேன்? சளசளவென்று எப்போதும் வாயாடுகிறவனும், கோட்சொல்லுகிறவனும் மரியாதையாய் நடப்பதற்கு உதவானென்றுகூட நாம் சொல்லவேண்டுமோ? பேசாமல் வாயை மூடிக்கொண்டிருக்கவேண்டிய தருணங்கள் யாவருக்குந் தெரிந்தவையே. சொல்லவேண்டிய சங்கதி ஒன்றுமில்லாமற்போனாலும், இருந்தும் அது ஒரு புதுமையான சங்கதியாயிராவிட்டாலும், புதுமையாய் இருந்தாலும் அத

ளுல் நமக்காகிலும் அல்லது நாம் யாரோடு பேசப்போகிருேமோ அவனுக்காகிலும் ஏதாவது ஒருவிசேஷமிராவிட்டாலும் வாயைத் திறந்து மிகைபடப் பேசக்கூடாது. அப்படி ஒருவனிருப்பளுனல் அவன் அதிகமாய்ச் சொற்குற்றத்திலகப்படாமல் எங்கும் மரியாதையாகவே நடந்துகொள்வான். அவனுக்கு நிந்தனையும் அவமரியாதையும் அதிகமாய் நேராது.

(இன்னும் வரும்.)

தக்காணத்துப் பூர்வகதைகள்.

குருடனும், செவிடனும், கழுதையும்.

ஒருகால் ஒரு குருடனும் செவிடனும் சேர்ந்து, செவிடன் குருடனுக்குப் பதிலாய்ப் பார்ப்பதாகவும், குருடன் செவிடனுக்குப் பதிலாய்க் கேட்பதாகவும் ஒன்ருய்க்கூடிக் கூட்டுவர்த்தகம் செய்வதாய் ஒப்பந்தஞ்செய்துகொண்டு இருவரும் கூட்டாளிகளானார்கள். ஒருநாள் ஓரிடத்தில் பாட்டுகூத்து வெகு விநோதமாய் நடக்கிறதென்று கேள்விப்பட்டு அதற்கு அவ்விருவரும் போனார்கள். குருடன்: பாட்டு வெகு ரசமாய்ப் பாடுகிருர்கள், கூத்து எப்படியிருக்கிறதோ என்ருன். செவிடன்: கூத்து வெகு நேர்த்தியாயிருக்கிறது, பாட்டு எனக்குக் கேட்கவில்லையேஎன்று சொல்லித் துக்கப்பட்டான். ஆயினும் குருடன் கேட்பதைச் செவிடனுக்குச் சொல்வதும், செவிடன் பார்ப்பதைக் குருடனுக்குச் சொல்வதுமாய் ஒருவர்க்கொருவர் ஒத்தாசையாயிருந்து காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தார்கள்.

மற்ருெருநாள் அவர்களிருவரும் வெளியே யாத்திரைபோவதாய்ப் புறப்பட்டார்கள். போய்க்கொண்டிருக்கையில் ஓரிடத்தில் ஒரு கழுதையும், அதன் பக்கத்தில் ஒரு பெரிய வண்ணான்தாழியும், அந்தத் தாழிநிரம்பத் துணியுமிருந்தன. அதைச் செவிடன் கண்டு, குருடனைப்பார்த்து: தோழனே! இங்கே ஒரு கழுதையும் வண்ணான்தாழியும் இருக்கின்றன. உடையவன் ஒருவனையும் காணேன். இவைகளைக் கொண்டுபோவோமானல் ஏதாவது ஒரு காலத்தில் நமக்கு உபயோகமாகும் என்றுசொல்ல, குருடனும்: நல்லது, அப்படியே கொண்டுபோவோம் என்ருன். குருடன் தலையில் தாழியைத் தூக்கிவைத்துக்கொண்டான். செவிடன் கழுதையைப் பிடித்துக்கொண்டான். இப்படியே இருவரும் சிறிதுதூரம் போகையில் அங்கே ஓரிடத்தில் எறும்புப்புற்று ஒன்றிருந்தது. செவிடன் அதைப்பார்த்து: தோழா! ஒருவகை விநோதமான கறுப்பு எறும்புகள் இங்கே அளவற்றிருக்கின்றன. இவ்வளவு பெரிய எறும்புகளை நான் எங்கும் ஒருபோதும் கண்டதில்லை.

இவற்றுள் சிலவற்றைக் கொண்டுபோனால் நம்முடைய நேசர்களுக்குக் காட்டலாமென்று சொல்ல, குருடன்: நீ சொல்லுகிறபடியே செய்வோம்; நம்முடைய தோழர்களுக்குக் காணிக்கையாகச் சில கொண்டுபோகவேண்டுவதுதான் என்றுசொல்லிச் சம்மதிக்கவே செவிடன், தன் கையிலிருந்த பொடிடப்பியில் ஏழெட்டு எறும்பைப் பிடித்துப் போட்டுக்கொண்டான். பிறகு இருவரும் தமது வழியே நடந்துபோனார்கள்.

இப்படிக் கொஞ்சதூரம் போகையில், இடியும் மின்னலும் காற்றும் குளிருமாய்ப் பிரளயகாலம்போல் அதிக பயங்கரமாய்க் காற்றுமழை எடுத்தது. அதைக்கண்டு செவிடன்: அப்பா! இதென்ன மின்னல்! கண்ணைப் பறித்துக்கொண்டுபோம்போலிருக்கிறது. கடிய நட; எங்கேயாவது ஓரிடத்தில் போய்ப் பத்திரமாய்ப் பதுங்கிக்கொள்வோமென்றான். குருடன்: அதென்ன மின்னல் மின்னுகிறதோ எனக்குத் தெரியவில்லை. கர்ப்பம் கலங்கும்படி நிமிஷத்துக்கு நிமிஷம் அதிக பயங்கரமாய் இடி இடிக்கின்றதே! எப்போ தலையில் விழுமோவென்று திகிலாயிருக்கின்றது; துரிதமாய் எங்கேயாவது ஓரிடத்தில் போய்த் தங்கினால்தான் நல்லது என்றான்.

அப்போது அவர்களிருந்த இடத்திற்குச் சமீபத்தில் தேவாலயம்போலச் சிறந்த கட்டடமொன்று தெரிந்தது. செவிடன் அதைப் பார்த்துச் சொல்லவே இருவரும், இராத்திரி அவ்விடத்தில் தங்கியிருக்கும்படி தீர்மானித்து, வேகமாய் அவ்விடத்துக்குப்போய் அதற்குள் புகுந்து கழுதையையும் தாழியையும் உள்ளே வைத்துக்கொண்டு கதவை மூடிக்கொண்டார்கள். அது ஒரு கோவிலென்று அவர்களுக்குத் தோன்றியிருந்தது. உண்மையாய் அது கோவிலன்று; ஒரு ராக்ஷசன் மாளிகை. இவர்கள் உள்ளேபோய்ப் புகுந்து கதவைப் போட்டுக்கொண்டவுடனே, வெளியே போயிருந்த ராக்ஷசனும் திரும்பிவந்தான். வந்துபார்க்கையில், தன் மாளிகையின் வாயிற்கதவுபோட்டிருந்தது. உள்ளே மனிதர்கள் நடமாடுகிற ஓசையும் பேசுகிற சத்தமும் கேட்டது. அதைப்பார்த்து அந்த ராக்ஷசன் இதென்னவென்று பிரமித்து: ஓ! ஓ! யாரோ உள்ளே வந்திருப்பது போலே காண்கிறதே! யார் உள்ளே வந்திருக்கிறது? உங்களுக்கு நான் நல்ல விருந்தளிக்கவந்தேன். கதவைத் திறவுங்கள், கதவைத் திறவுங்கள்! யாருள்ளே! நேரமாகிறது என்று கதவைப் பலதடவை இடித்திடித்து இடியைவிட உரப்பாய்க் கூச்சலிட்டான். அவன் தோற்றமோ, அவன் கூச்சலைவிடக் கோடிமடங்கு அதிக பயங்கரமாயிருந்தது. செவிடன் சுவரிலுள்ள சாளரத்தின்வழியாய் அவன் உருவத்தைப்பார்த்து மிகவும் பயந்து, அதற்கு இன்னது செய்கிறதென்று தெரியாமல் இடிவிழுந்துபோனான். அந்த ராக்ஷசனைப்பாராமையால் குருடன் பயப்படாமல் தைரியமாய்க் கதவண்

டைவந்து: யார் நீ? இதென்ன, தலைநோயுண்டாகும்படி அர்த்தராத்திரியில் வந்து சளசளவென்று கதவைபிடித்து இப்படிக் கூச்சலிடுகிறாய்! உனக்குச் சிறிதளவாயினும் புத்தி விவேகமொன்றுமில்லையா? என்று கூவினான்.

ராக்ஷசன் அதைக்கேட்டு மிகவும் கோபமடைந்து: நான் ராக்ஷசனென்று உனக்குத் தெரியாதோ? இது என் மாளிகைதான், சீக்கிரம் கதவைத்திற; இல்லாவிட்டால் உன்னைக் கொன்றுபோடுவேன் என்றான். அவனைப் பார்க்கப்பார்க்கப் பயம் அதிகமாகிச் செவிடன் உடல்நடுங்கி அகங்கலங்கி ஒன்றும் தோன்றாமல் திகிலடைந்துபோனான். பார்க்கச் சக்தியில்லாத குருடன் சிறிதும் தைரியம் குலையாமல்: ஆ! நீ யார்? ராக்ஷசனா? அப்படியா! நீ ராக்ஷசனானால் நான் பாக்ஷசனாயிற்றே; பாக்ஷசன் ராக்ஷசனுக்குக் குறைந்தவனோ என்றான். அதைக்கேட்டு ராக்ஷசன்: என்ன? பாக்ஷசனா? பாக்ஷசன்! பாக்ஷசன்! இதென்ன பேய்ப்பிதற்றலாயிருக்கிறது! பாக்ஷசனென்றுகூட ஒரு ஜாதியுண்டோ? இதுவரையில் இந்தப் பெயரை நான் கேட்டதேயில்லையே! என்று மெதுவாய்ச் சொல்லிக்கொண்டான். குருடன்: போ, ஓடிப்போ; சளசளவென்று இங்கே கூச்சலிட்டுக்கொண்டிராதே; நான் யார்! பாக்ஷசனல்லவா! பாக்ஷசர்களெல்லாம் ராக்ஷசர்களுக்குத் தந்தையல்லவா? இனி ஏதாவது தொந்தரைசெய்வாயானால் உடனே உன்னைக் கொன்றுபோடுவேன் என்றான். அதைக்கேட்டு ராக்ஷசன்: அப்படியா? எனக்குத் தகப்பனா நீ? ஓ பெருமானே! என் தந்தையே! பாக்ஷசனே! இத்தன்மையான என் பிறப்பின் வரலாற்றை நான் இதுவரையில் கேட்டதில்லையே; இது வெகு புதுமையாயிருக்கிறது. நீங்கள் எனக்குத் தந்தை; என் தகப்பன்பெயர் பாக்ஷசனென்று இதுவரையில் எனக்குத் தெரியாமலிருந்தது; இப்போதுதான் அறிந்துகொண்டேன் என்றான்.

அதற்குக் குருடன்: ஆம்! நான்தான் உன் தகப்பன்; நான் சொன்னபடி நீ கேட்கவேண்டும்; ஓடிப்போவென்று வெகு கம்பீரத் தொனியாய் வெருட்டிச்சொல்ல, ராக்ஷசன் மிகவும் திகிலடைந்து: அப்படியே, இதோ ஓடிப்போகிறேன். நீங்கள் என் தந்தையானால் உங்கள் திருமுகத்தைக் கொஞ்சம் காட்டுங்கள், பார்த்துவிட்டு ஓடிப்போகிறேனென்றான். (ஒருவேளை மோசமாயிருக்குமோ என்னவோவென்று சந்தேகமுண்டாகி அவன் அப்படி கேட்டது.) அந்தப் பேச்சைக்கேட்கவே குருடனுக்கும் செவிடனுக்கும் இன்னது செய்கிறதென்று தோன்றவில்லை. சிறிதுநேரம் யோசனை செய்தபிறகு ஒருவிதமாய்த் தீர்மானமுண்டாகி, சிறிய திட்டிக்கதவைத்திறந்து கழுதையின் மூக்கை வெளியே நீட்டிக்காட்டினார்கள். ராக்ஷசன் அதைப் பார்க்கவே, அப்பா! அந்தமட்டும் தப்பினேன்! நமது தந்தை பாக்ஷசன் முகமே, பார்ப்பவர் நடுங்கிப்போம்படி, இவ்வளவு பயங்கரமாயும் விகாரமாயுமிருக்கிறதே! என்று

மனதிலே நினைத்துக்கொண்டு: ஓ தகப்பன்மாரே! தங்கள் முகம்மாத்திரம் உலகமெல்லாம் அச்சமுறும்படி மிகவும் பயங்கரமாயிருக்கிறது. உலகத்தில் மண்டை பெரிதாயிருந்தாலும் சிலருக்கு உடல் சிறிதாயிருப்பதுண்டு. உங்களுக்கு எப்படியிருக்கிறதோ பார்ப்போம். சற்றே திருமேனியைக் காட்டுங்கள்; பார்த்துவிட்டு ஓடிப்போகிறேனென்று சொல்ல, அவ்விருவரும் கடகடவென்று பெருஞ்சத்தமுண்டாகும்படி வண்ணான் தாழியைத் தரையிலிழுத்துவந்து தூக்கிச் சிறுதுவாரத்தின் வழியாய்க் காட்டினார்கள். அதேகாரியமாய் உற்றுப்பார்த்துக்கொண்டிருந்த ராக்ஷசன் கன்னங்கறுத்த அந்தப் பெரும்பாண்டத்தைப்பார்த்துப் பிரமித்து: நமது தந்தை ராக்ஷசனுக்குத் தலைக்குத் தக்கபடிதான் உடலுமிருக்கிறது! நம்மை ஒரு நொடியில் பக்ஷித்துப்போடுவார்! ஓடிப்போவதே நலம்! என்று எண்ணித் திகிலடைந்தான். ஆயினும் இன்னும் சிறிது சந்தேகமுண்டாகி, அவன்: ஓ ராக்ஷசரே! ஓ என் தகப்பன்மாரே! உங்கள் மண்டை எவ்வளவு பருத்திருக்கிறதோ அதைவிடப் பதின்மடங்கு அதிகமாய் உடலும் பருத்திருக்கிறது. அதெல்லாம் சரியே! ஆனாலொன்றிருக்கிறது. உங்கள் மிடற்றோசை எப்படியிருக்கிறதோ சற்று கேட்டுவிட்டு ஓடிப்போகிறேன். ராக்ஷசர்கள் வெகு பயங்கரமாய்க் கர்ச்சிப்பார்களே; உங்கள் கர்ச்சனை எப்படிப்பட்டதோ என்று வணக்கமாய்க் கேட்கவே, அந்தக் கள்ளச்செவிடன் கொஞ்சம் பயந்தணிந்து தந்திரமாய் ஒரு யோசனைசெய்து தன் பொடிடப்பியையெடுத்து அதனுள்ளிருந்த கட்டெறும்புகளை வலது காதில் நான்கு, இடதுகாதில் நான்காகக் கழுதையின் காதில் ஏற்றிவிட்டான். அவை அந்தக் கழுதையின் காதில் புகுந்துகொண்டு தம்மால் கூடியவளவு குடையத்தொடங்கின. இரண்டு காதிலும் பல கட்டெறும்புகள் புகுந்துகொண்டு குடைந்தால் அந்தப் பேதைக் கழுதை என்னசெய்யமாட்டும்! தொந்தரை பொறுக்கமாட்டாமல் தன் அழகிய தீங்குரலைக்கொண்டு ஓயாமல் ஊளையிட்டுத் தொடங்கிற்று. அந்தக் குரலைக்கேட்ட க்ஷணத்திலேயே ராக்ஷசன் கிடுகிடாய்த்து: போதும் போதும் தகப்பன்மாரே! போதும் போதும் ராக்ஷசரே! உமது கூச்சலைக்கேட்டு மூன்றுஉலகமும் நடுங்கிப்போகுமே! இதுவரையில் அடங்காமலிருந்த உம்முடைய பிள்ளை இதோ உமது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து ஓடிப்போகிறான் என்று சொல்லிக்கொண்டே ஓடிப்போனான். பின்பு செவிடன் அந்த எறும்புகளை எடுத்து முன்போலவே டப்பியில் அடைத்துவிட்டான். அவ்விருவரும் அன்றிராத்திரியை அவ்விடத்திலேயே கழித்தார்கள்.

மறுநாள் காலையில் விடியனேரத்திலேயே செவிடன் குருடனை எழுப்பி: அப்பா தோழனே! எழுந்திரு; இவ்விடத்திற்கு நாம் வந்துசேர்ந்தது நமக்கு நல்ல அதிர்ஷ்டகாலந்தான். ராக்ஷசன் கையி

னும் அகப்படாமல் தப்பிப்பிழைத்தோம்; இங்கே தரையெங்கும் பொன்னும் வெள்ளியும் நவரத்தினங்களும் குப்பல் குப்பலாய்க் கொட்டிக்கிடக்கின்றன. எழுந்திரு, நேரமாகிறதென்முன். அவன் சொன்னது உண்மைதான்; அது ராக்ஷசன்மாளிகையாகையால் அந்த ராக்ஷசன் வேண்டிய பொருளை அங்கே சேர்த்துவைத்திருந் தான். குருடன் வெகு சந்தோஷமாய் எழுந்து: தோழனே! இது நமக்கு நல்லகாலந்தான். அந்தப் பொருள்கள் எங்கே காட்டு; நானும் உனக்குத் துணையாய்க் குவித்துச்சேர்த்துக் கட்டு கிறேனென்று சொன்னான். இருவரும் வேண்டிய பொருளைத் திரட்டி நான்கு மூட்டையாகக் கட்டி, இரண்டு மூட்டையைக் கண் டாளமாகக் கழுதைமேல் போட்டு, மற்ற இரண்டையும் தலைக் கொன்முய்த் தூக்கிக்கொண்டு வீட்டுக்குப்போகப் புறப்பட்டார் கள்.

சென்றராத்திரி இவ்விருவரும் வெருட்டித் துரத்திய ராக்ஷசன் வெகுதூரம் ஓடிப்போகவில்லை. நந்தந்தையான ராக்ஷசன் எப் படியிருக்கிருனே பகலில் செம்மையாய்ப் பார்க்கவேண்டுமென்று சிறிதுதூரத்தில்போய் நின்று அவன் எப்போது வெளியே வருவா னென்று காத்துக்கொண்டிருந்தான். காலையில் கதவைத் திறந்து கொண்டு இரண்டு மனிதர்களும் ஒரு கழுதையும், ஒவ்வொருவரும் சுமக்கமாட்டாத பொருட்சுமையைச் சுமந்துகொண்டு, தன் மாளி கையினின்றும் புறப்பட்டுப்போவதுகண்டு ராக்ஷசன், இந்தப் பேய் மனிதர்களைக் கண்டா நாம் பயந்தோடிவந்தோம் என்று கோபம் தலைக்கேறினவனாய், இந்தக் குருடனையும் செவிடனையும் கழுதை யையும் கொன்று தன் பொருள்களைப் பிடுங்கிக்கொள்ளத் தனக்குத் துணைசெய்யும்படி ஆறு ராக்ஷசர்களைக் கூட்டிக்கொண்டு இவர்கள் மேல் பாய்ந்துவந்தான்.

அதிக பயங்கரமாய்த் தரையில் வீழ்ந்து புரள்கின்ற செம் பட்டைமயிர்களும், முழநீளம் நீண்டுவளைந்த கோரைப்பற்களும் இருப்புத்தடிபோன்ற கைகளும், வாள்போன்ற நகங்களுமாய் ஏழு ராக்ஷசர்கள் தங்களைத் தொடர்ந்துவரக்கண்டு: செவிடன் நடு நடுங்கி நா தழதழத்துக் கால் தள்ளாட ஒன்றுந்தோன்ருமல் தட் டித்தட்டி நடந்துபோனுன். குருடனுக்கு இவை ஒன்றுந்தெரி யாமையால் அவன் வெகு தைரியமாய்: நேசனே! நீ ஏன் இப்படி பின்தங்கி நடக்கிருய் என்று கேட்க, செவிடன்: அப்பா! இதோ அதிபயங்கரமான வடிவத்தோடு ஏழு ராக்ஷசர்கள் நம்மேல் பாய் ந்துவருகிருர்களே; செய்யவேண்டுவதென்னவென்று திகைப்படுகி றேனென்முன். அதைக்கேட்டுக் குருடன்: நீ இதற்கேன் அஞ்சுகி ருய்! இந்த மூட்டைகளை ஒரு புதரில் போட்டு ஒளித்துவிட்டு என் னை ஒரு உயர்ந்த மரத்தடியில் கொண்டுவிடுவாயானல், நான் முன் னே அதன்மேல் ஏறிக்கொள்ளுகிறேன்; நீயும் என் பின்னுல் ஏறிக்

கொண்டு பத்திரமாயிருக்கலாமென்று சொல்ல, செவிடன் இது நல்ல யோசனைதானென்று தெரிந்து, அப்படியே மூட்டைகளையும் கழுதையையும் ஒரு புதரில் தள்ளிவிட்டு அருகிலிருந்த உயர்ந்த ஒரு தென்னைமரத்தண்டைபோய்ச் சேர்ந்தான். இந்தச் செவிடன் கடுநெஞ்சும் கள்ளக்கருத்தும் உள்ளவன். கண்தெரியாத கபோதியை முதலில் மரத்தின்மேல் ஏறவிடுவதைவிட்டு, மரத்தில் கொஞ்சம் கீழ்ப்புறத்திலிருந்தால் ஒருவேளை அபாயத்திற்கிடமாகுமோ என்னவோ! அந்தவிடத்தில் குருடனைத்தான் ஏறவிடவேண்டும் என்று தான் முதலில் உச்சியில் ஏறிக்கொண்டு தனக்குக் கீழ்ப் புறத்தில் குருடனை ஏற்றி வைத்துக்கொண்டான்.

இதற்குள் அந்த ராக்ஷசனும் வேகமாய் ஓடிவந்தான். இவர்கள் தன் கைக்கு எட்டாமல் உயர்ந்த மரத்தில் ஏறிக்கொள்ளவே, ராக்ஷசன் ஒன்றுந்தோன்றாமல் தன் துணைவர்களைப்பார்த்து: நாம் ஒருவர்தோள்மேல் ஒருவராய் ஏறி இவர்களை எட்டினாலல்லது நாம் ஒன்றும் இவர்களைச் செய்யமாளாது என்றுசொல்ல, அதற்கு அவர்களும் சம்மதித்து ஒருவன் மரத்தடியில் நின்றான்; அவன் தோளில் ஒரு ராக்ஷசன் ஏறிநின்றான். அவன் தோளில் மற்றொருவன் ஏறிநின்றான். அவன் தோளில் பின்னும் ஒருவன் ஏறி நின்றான். இப்படியே ஆறு ராக்ஷசர்கள் ஒருவன் தோளில் ஒருவனாய் ஏறிநின்றார்கள். கடைசியில் இந்த ஆறு ராக்ஷசர்களையும் அழைத்துவந்த பெரிய ராக்ஷசன் இவ்வாறுபேரையும் தாவிக்கொண்டு ஏறிவந்தான். குருடன்தலைக்குமேலிருந்த செவிடன் தனக்கும் அபாயம் சம்பவிக்குமென்று திகிலடைந்து குருடன் கையைப் பிடித்துக்கொண்டு: ராக்ஷசன் மரத்தின்மேல்ஏறிக் கிட்டிவருகிறான்! கிட்டிவருகிறான்! என்று கூவினான். குருடன் உட்காந்திருந்த விடம் அவ்வளவாய்ப் பத்திரமான இடமல்ல; ஏதோ ஒரு மட்டையை மெதுவாய்ப் பற்றிக்கொண்டு தங்கியிருந்தான். ராக்ஷசன் தன்னை எட்டும்படியான இடத்தில் வந்துவிட்டானென்பதும் அவனுக்குத் தெரியாது. ராக்ஷசன் நெருங்கிவந்துவிடவே, செவிடன் மிகவும் அச்சமுற்று மெல்லக் குருடனைத் தள்ளிவிட்டான். அவன் உருண்டுவிழுகிற வேகத்தில் தெய்வாதீனமாய் அப்போது ஏறிக் கொண்டிருந்த ஏழாவது ராக்ஷசன் தோளில்வந்து தங்கினான். அப்போது அவனுக்குத் தானிருக்குமிடம் ராக்ஷசன் புஜமென்றுந்தெரியாது. வேறொரு மரக்கிளையில் வந்து தங்கினதாய் எண்ணி கைக்குப்பிடியொன்றும் அகப்படாமல் கையை விரித்துத் தேடிப்பார்க்க, அந்த ராக்ஷசனது முறம்போன்ற காதுகள் இரண்டும் அகப்படவே, அதை உறுதியாய்ப் பிடித்துக்கொண்டு அந்த ராக்ஷசன் நடுங்கி வீரிடும்படி அதை அழுத்திப் பிசைந்து நிமிண்டினான். தன் தோளில் விழுந்து தன்னை அழுத்துவது இன்னதென்று அந்த ராக்ஷசனுக்குத் தெரியவில்லை. குருடன் இந்த ராக்ஷசன்மேல் விழுந்து அவனை

அழுத்த, இவ்விருவர் சுமையும் ஆருவது ராக்ஷசனை அழுத்த, இம் மூவர் சுமையும் ஐந்தாவது ராக்ஷசனை அழுத்த, இந்த நால்வர் சுமையும் நான்காவனை அழுத்த, இவ்வைவர் சுமையும் மூன்றுவனை அழுத்த, இவ்வறுவர் சுமையும் இரண்டாவனை அழுத்த, இவ்வெழுவர் சுமையும் முதல்வனை அழுத்த இப்படி ஒருவர்மேலொருவராய்க் குண்டாங்கரணம் போட்டுக்கொண்டு தலைகீழாய்த் தரையில் வந்து வீழ்ந்தார்கள். சரேலென்று கீழே விழவே, குருடன் பிரமித்து: ஓகோ! நேசனே! இதென்ன! இதென்ன! நான் இப்போது எங்கேயிருக்கிறேன்! எங்கேயிருக்கிறேன்! நேசனே! என்று கதறிக்கூவ, மரத்தின்மேல் பத்திரமாய் உட்கார்ந்திருந்த செவிடன்: அப்பா! நல்லகாரியஞ்செய்தாய்! பயப்படாதே! நீ செய்தது சரிதான்! பயமில்லை! பிடியைமாத்திரம் உறுதியாய்ப் பிடித்துக்கொள்! உனக்குத் துணையாய் நானும் இதோ வருகிறேன் என்றுசொல்லிக் குருடனைத் தைரியப்படுத்தினன். யாதொரு அபாயமும் இல்லாமல் உட்கார்ந்திருக்கும் இடத்தைவிட்டு ஒரு அடியாவது அசையச் செவிடனுக்குச் சிறிதளவும் விருப்பமில்லை. ஆயினும் மேலுக்குமாத்திரம்: நேசனே, அஞ்சாதே! தைரியமாயிரு; நானும் இதோ வந்துவிட்டேன்; வந்துவிட்டேன் என்று அவனுக்குத் துணிவுசொல்லி உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தான். அவன் சொல்லச் சொல்லக் குருடன், தானிருக்குமிடம் அம்மரத்தில் ஓர் பாகமென்று நினைத்து, தன் கையில் அகப்பட்டுக்கொண்ட காதுகளை அழுத்திப்பிடித்துப் பிசைந்து கிள்ளினன். இந்தப் பெரிய ராக்ஷசனுக்குத் துணைசெய்யவந்த ஆறுராக்ஷசர்கள், மரத்திலிருந்து சறுக்கிவிழுந்த வேகத்தால் நல்ல அறைபட்டு, தலைகாலில்லாமல் தாறுமாறாய் விழுந்திருந்த குப்பலிலிருந்து ஒருவரையொருவர் மெல்ல விடுவித்துக்கொண்டு, அந்த மட்டும் இந்த ராக்ஷசனுக்குத் துணைசெய்தது போதும்போதுமென்று வீரிட்டுக்கொண்டு அதிவேகமாய் ஓடிப்போனார்கள். தனக்குத் துணையாய் வந்தவர்கள் எல்லாரும் ஓடிப்போகவே அந்தப் பெரிய ராக்ஷசன், நாம்மாத்திரம் தனித்திருந்தால் இன்னும் உபத்திரவம் வரவர அதிகமாகுமென்று திகிற்பட்டு, தன் தோள்மேல் ஏதோ ஒரு பூதமோ பிசாசமோ ஏறிக்கொண்டதென்று மிகவும் பயந்து, நாம் ஒரு கொசுகைக் கீழே தள்ளுவதுபோல், தன்மேலிருந்த குருடனைத் தள்ளிவிட்டு, இது யாரோ என்னவோ என்றுகூட நின்று திரும்பிப்பாராமல் ஒரு குதியாய்க் குதித்தோடித் தன் தோழர்களோடுகூடி ஓடிப்போனன்.

இப்படி இந்த ராக்ஷசர்களெல்லாம் கண்ணுக்குத் தெரியாமல் வெகுதூரம் ஓடிப்போனபிறகு, நடந்தசெய்திகளையெல்லாம் மேலே நின்று பார்த்துக்கொண்டிருந்த செவிடன் வேகமாய் இறங்கிவந்து, குருடனை எடுத்து அணைத்துக்கொண்டு: அப்பா! என் பிராணசிநேகிதனே! நீ நல்லகாரியஞ்செய்தாய்! நம் சத்துருக்களையெல்

லாம் ஒருவர் தப்பாமல் வெருட்டித் துரத்திவிட்டாயே! நானும் இதோ கூடியசீக்கிரத்தில் உனக்குத் துணைசெய்ய வந்தேன் பார்த்தாயா! என்றுசொல்லிக் குருடனைக் களிக்கச்செய்தான். பின்பு அந்தச் செவிடன் புதரிலிருந்த பொதிகளையும் கழுதையையும் இழுத்து முன்போலவே இரண்டு பொதியைக் கழுதைமேல் போட்டு, மற்றதை முன்போலவே குருடனும் செவிடனுமாய்த் தூக்கிக்கொண்டு தங்களூருக்குப் போம்படி வழிநடந்தார்கள்.

அந்தக் காடு தாண்டினதும் செவிடன் குருடனை நோக்கி: நண்பனே! நாம் இப்போது ஊருக்குச் சமீபத்தில் வந்துவிட்டோம்; இந்தப் பொருள்களையெல்லாம் இப்படியே தூக்கிக்கொண்டுபோனால் ஒருவேளை திருடர்களென்று பிடித்துக்கொள்வார்கள்; ஆகையால் இந்தப் பொருள்களை இங்கேயே பாதியாய்ப் பங்கிட்டு அவரவர் பாகத்தை அவரவரிஷ்டப்படி இந்தக் காட்டிலேயோ அல்லது வேறெந்த இடத்திலேயோ ஒளித்துவைத்துவிட்டுப் போவதே நலமென்று தோன்றுகிறதென்று சொல்ல, குருடன்: நீ சொன்னது நல்லயோசனைதான், அப்படியே இந்தப் பொருள்களையெல்லாம் உனக்கு ஒருபங்கும் எனக்கு ஒருபங்குமாய்ச் சரியாய் இரண்டு பங்காகப் பிரியென்றான். அந்தப் பொருள்களையெல்லாம் பாதியாய்ப் பங்கிட்டுப் பாதிப்பொருள் குருடனுக்குக் கொடுக்கச் செவிடனுக்குச் சம்மதமில்லை. நாம் என்னசெய்தாலும் இவனுக்குக் கண் தெரியாதே என்று தான் எடுத்துவந்த மூட்டையையும் கழுதை சுமந்துவந்த மூட்டைகளையும் ஒருபக்கத்தில் ஒளித்துவிட்டு, குருடன்கையிலிருந்த மூட்டையிலும் அநேகமாய் ஒளித்துவிட்டுக் கொஞ்சம்பொருளை இரண்டுபங்காகப் பிரித்து, ஒன்றைக் குருடன் முன்னிலும் ஒன்றைத் தன்முன்னிலும் வைத்து: சகோதரனே! இதோ நமது பொருள்களை இரண்டுபங்காகப் பிரித்து உனக்கு ஒருபாகமும் எனக்கு ஒருபாகமுமாய் வைத்தேன் என்றான். குருடன் தன் முன்னிருந்த குப்பலைக் கையினால் தடவிப்பார்த்துத் தனக்குக் காட்டிய பொருள் மிகவும் கொஞ்சமாயிருக்கவே மிகவும் கோபம் அதிகரித்து: அடா! இது உனக்குத் தகுதியன்று; குருடன்தானே என்று என்னை நீ மோசஞ்செய்ய நினைத்தையோ? எல்லாப் பொருள்களையும் நீ எடுத்துக்கொண்டு எனக்குச் சிறிதளவு காட்டுகிறையே; இது உனக்கு நியாயந்தானா! என்று கேட்க, செவிடன்: நண்பனே! நீ என்ன அப்படிச் சொல்லுகிறாய்! நீயே நன்றாய் முழுதும் தடவிப்பார்; உனக்கு எவ்வளவு வைத்தேனோ, அவ்வளவுதான் நானும் வைத்துக்கொண்டிருக்கிறேன். இதுதவிர வேறு பொருளில்லை என்றான். குருடன் முழுதும் கையை நீட்டித் தடவிப்பார்த்தான். தன் எதிரில் எவ்வளவு குப்பலிருந்ததோ, அவ்வளவுதான் செவிடன் எதிரிலுமிருந்தது; வேறொன்றுமில்லை. உள்ளது இவ்வளவுதானென்று

செவிடன் மறுத்தும் சாதனை சாதிக்கவே, குருடன் முன்னிலும் கோபமதிகமாகி: அடா! அடா! நம்பினவனைக் கழுத்தறுக்கத் துணிந்த கொடியனே! கண்ணில்லையே, இவனை ஏய்க்கலாமென்று நினைத்தாயோ! கண்ணைக்கெடுத்த தெய்வம் மதியைக் கொடுத்ததா மென்கிறபடி, எனக்குக் கண்கெட்டுப்போனாலும் மதிகெட்டுப்போக வில்லை. நான் ஒரு மூட்டை தூக்கமாட்டாமல் தூக்கிக்கொண்டு வந்தேன்; நீ ஒரு பெருமூட்டை சுமந்துகொண்டு வந்தாய்; கழுதை மேல் ஒரு குன்றளவு ஏற்றிக்கொண்டுவந்தோம். அவையெல்லாம் இந்த இரண்டு சிறு குப்பல்தானா இருக்கும்! இன்னும் எவ்வளவோ மிகுதியாயிருக்கவேண்டும்; நான் சத்தியமாய்ச் சொல்லுவேனென்றான். அதைக்கேட்டுச் செவிடன்: இதென்ன? நீ வாயில் வந்தபடி பிதற்றுகிறாய்; உனக்குப் பித்தந் தலைக்கேறிற்றோ? என்று சொன்னதற்கு, குருடன்: நீ எப்படியாவது என்னை வாயடித்து ஏய்த்துவிட்டுப் பொருளைத் தூக்கிக்கொண்டுபோகலாமென்று நினைக்கிறாய்; அது நடவாது என்றுசொல்ல, செவிடன்: நான் அப்படி ஒருகாலும் நினைக்கமாட்டேன் என்றான். குருடன்: கைப்புண்ணுக்குக் கண்ணாடியேன்? இதோ நினைத்திருக்கிறையே என்று சொன்னான். இப்படியே இருவரும் சிறிதுநேரம் வாதாடி ஒருவரை ஒருவர் இழிவாய்ப் பேசித் திட்டி இரைந்து அடித்துப் புடைத்துக் குத்திக் குமைத்துக்கொண்டிருந்தார்கள். எவ்வளவுநேரம் சச்சரவுசெய்தும் தான் பிடித்ததே பிடியாய்ச் செவிடன் பொருளில்லையென்று சபதஞ்செய்யவே, குருடன் கோபாவேசம் உள்ளடங்காமல் செவிடன்கன்னத்தில் உரத்து ஓரறை அறைந்தான். அந்த அடியின் அதிர்ச்சியால் அவன் காது தன்னிலையில் வீழ்ந்து செவிடு நீங்கிப்போயிற்று. தன்னைக் கன்னத்தில் அறையவே செவிடன் கண்களில் நெருப்புப்பொறி பறக்கக் குருடனை மண்டை பிளந்துபோம்படி இடியிடித்ததுபோல் குருடன் முகத்தில் ஒரு புடை புடைத்தான். உடனே அவன் நொள்ளைக்கண் நல்லகண்ணாகிவிட்டது. தெய்வச்செயலைக் கண்டறிவது யார்!

இவ்விருவரும் ஒருவர்க்கொருவர் தீங்குசெய்ய நினைத்துப் புடைபுடைக்க, கிணறுவெட்டப் பூதம் புறப்பட்ட கதையாய் செவிடனுக்குக் காதுகேட்டது; குருடனுக்குக் கண்தெரிந்தது. அதனால் இருவரும் ஆச்சரியமடைந்து உடனே அந்தரங்க நேசராய்ப்போனார்கள். செவிடன் தான் பொருளை ஒளித்தது உண்மைதானென்று ஒப்புக்கொண்டு, முன் தான் மோசமாய்ப் பேசினதற்காக மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, புதரினின்றும் ஒளித்தவையெல்லாவற்றையும் எடுத்துச் சரிபாதியாகப் பிரித்தான். அவரவர் பங்கை அவரவர் எடுத்துக்கொண்டு வீடுபோய்ச்சேர்ந்து அநேகமாய்த் தானதருமங்கள் செய்துகொண்டு சுகமாக நெடுநாள் வாழ்ந்திருந்தார்கள்.

சூரிய சந்திர வாயுக்கள் விருந்துண்ண கதை.

ஒருநாள் சூரியன், சந்திரன், வாயு இவர்களெல்லாம் தங்களுக்குச் சிற்றப்பனும் சிற்றம்மையுமாகிய இடிமின்னல்களுடனே ஓரிடத்திற்கு விருந்துண்ணப்போனார்கள். அவர்களுடைய தாய் (அதாவது ஆகாயத்தில் வெகுதூரத்திலே நமது கண்ணுக்குப் புலப்படுகிற நக்ஷத்திரங்களுள் ஒன்று) தனியே இருந்துகொண்டு தன் மக்கள் எப்போ திரும்பிவருவார்களோவென்று அவர்கள் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

சூரியன் வாயு ஆகிய இருவரும் பேராசைகொண்டவர்களும் தன்னயம் பார்க்கின்றவர்களுமாயிருந்தார்கள். வீட்டில் தாயொருத்தியிருக்கிறளே, அவளுக்கு ஏதாவது ஒரு துளி கொண்டுபோய்க் கொடுப்போமென்கிற எண்ணம் எள்ளளவுமில்லாமலே அந்தச் சூரிய வாயுக்கள் இருவரும் தங்களுக்கு அளித்த நல்விருந்தைத் தாங்களே திருப்தியாய்ப் புசித்துக் களிப்படைந்தார்கள். சாந்த குணமுள்ள சந்திரனோ தன் தாயை மறக்கவில்லை. தனக்குப் பரிமாறின ஒவ்வொரு பண்டத்திலும் சிறிது சிறிதுபங்கு எடுத்துத் தன் தாய்க்கு என்று ஒரு மூட்டையாகக் கட்டி வைத்துக்கொண்டான்.

மிகவும் பிரகாசமுள்ள தன் கண்களைக் கொட்டாமலே மலர விழித்துக்கொண்டு நெடுநேரம் தன் மக்கள் வருகிறவழியையே பார்த்துக்கொண்டிருந்த தாய், அவர்கள் திரும்பி வீட்டண்டை வந்தவுடனே, "என் அருமைக்குழந்தைகாள்! நீங்கள் எனக்கு என்ன கொண்டுவந்தீர்கள்" என்று கேட்க, மூத்தமகனான சூரியன்: "நான் ஒன்றும் உனக்காக வீட்டுக்குக் கொண்டுவரவில்லை. நான் என் நேசர்களோடு உல்லாசமாய் விருந்துண்ணப்போனேனேயன்றி, தாய்க்குச் சோறெடுத்துக்கொண்டு வருவதற்கன்றே" என்று சொன்னான். பின்பு வாயுவானவன்: "அம்மா! நானும் ஒன்றுங் கொண்டுவரவில்லை. விநோதத்திற்காக நான் எங்கேயாவது வெளியேபோனால், அப்பொழுது நீ நமக்கு நல்ல உணவுகள் வந்து சேருமென்று ஒருபோதும் எதிர்பாராதே" என்று சொன்னான். கடைசியில் சந்திரன்: "என் தாயே! ஏதாவது ஒரு ஏனங்கொண்டுவா, இதோ நான் கொண்டுவந்த பண்டங்களைப்பார்" என்று சொல்லித் தன் கைக்குட்டையில் கட்டிவைத்திருந்ததை அவிழ்த்துக் காட்டினான். அதிலிருந்தவையெல்லாம் அவள் ஒருநாளும் கண்டிராத சிறந்த வாசனையும் ருசியுமுள்ள இனியபண்டங்களாயிருந்தன.

அதைப் பார்த்தஉடனே தாய்நக்ஷத்திரம் சூரியனைநோக்கி: அடா! நீ உன் விநோதத்தையே பெரிதாய் நாடி வீட்டில் தாய் ஒருத்தி இருக்கிறளேயென்கிற எண்ணமேயில்லாமல், உன் வயிற்

றைமாத்திரம் நிரப்பிக்கொண்டு களித்துவந்ததனால், இன்றுமுதல் உன் கிரணங்களெல்லாம் நெருப்புபோல் வெப்பமுடையவைகளாகவும் எதையும் எரித்துப்போடத்தக்க தன்மையுடையவைகளாகவும் ஆகக்கடவன; உன் கொடுமையைக் கண்டு யாவரும் உன்னைப் பகைக்கக்கடவர்கள்; உன்னைக் கண்டவுடனே எல்லோரும் தங்கள் தலையை மூடிக்கொள்ளக்கடவர்கள் என்று சாபமிட்டாள். அதனாலேதான் சூரியன் நாளைக்கும் கொடிய வெப்பமாய் எரிகிறான்.

அதன்பின்பு அவள் வாயுவைநோக்கி: உன் கோலாகலத்திலும் கொந்தளிப்பிலும் நீ சிறிதேனும் என் நினைவேயில்லாமல் என்னை மறந்துபோனாயல்லவா? ஆகையால் எதையும் எரிக்கிற கிரீஷ்மகாலத்திலேயே நீயும் வெப்பமாய் வீசத்தலைப்பட்டு எந்தப் பிராணியையும் வதக்கிக்கொளுத்தக்கடவை; அதனால் உன்னை எவரும் அருவருத்துத் தடுக்கக்கடவர்கள் என்று ஆணையிட்டாள். அதனாலேதான் கோடைகாலத்திய தீக்காற்று மிகவும் நாம் வெறுக்கத்தக்கதாயிருக்கின்றது.

அவள் கடைசியாய்ச் சந்திரனைநோக்கி: என் அருமைக் குழந்தாய்! நீ சுகமனுபவிக்குங்காலத்திலும் உன் தாயை மறவாமல் அவளுக்கும் உன் உணவிற் சிறிதுபங்கு கொண்டுவந்ததனால், இதுமுதல் நீ எப்போதும் குளிர்ந்தகுணமும், சாந்தமும், ஒளியும் பொருந்தியிருக்கக்கடவை. மிகவும் தெளிவான உன் கிரணங்களோடு விஷத்தன்மையுள்ள கிரணம் ஒன்றும் சேராது; பிராணிகள் உன்னை எப்போதும் குளிர்ந்தவன் என்று கொண்டாடக்கடவர்கள் என்று வாழ்த்தினாள். இதுதான் சந்திரகிரணம் எக்காலத்திலும் அழகாயும் சீதமாயும் யாவரும் நேசித்துக் கொண்டாடத்தக்கதாயும் இருப்பதற்குக் காரணமாம்.

பயிர்த்தொழிலின் சீர்திருத்தம்.

துரைத்தனத்தார் பரீக்ஷைக்காக ஏற்படுத்திய சைதாப்பேட்டை தோட்டத்தில் பயிர்விசாரணை நடாத்தும் ராபர்ட்ஸன் துரை சென்னை விநோதவஸ்துசாலையில் இத்தேசத்து நூதன வியவசாயத்தைப்பற்றிப் பலதரம் உபந்நியாஸஞ்செய்திருக்கிறார். அவற்றுள் சில முக்கியமான விஷயங்களைச் சுருக்கிச்சொல்லுகிறோம்.

இச்சென்னை ராஜதானியில் செய்காலுக்கு உபயோகப்படும்படியான 5 கோடி 6 லட்சம் ஏகராவில் சுமார் 27 லட்சம் ஏகரா நிலந்தான் சாகுபடியாய்க்கொண்டிருக்கிறது. அதில் சர்க்காருக்கு வரும்படியான தீர்வை ஏகரா 1க்கு சராசரி 1 ரூ. 4 அணா 5 பைசாதான். புன்செயில் சராசரி ஏகரா 1க்கு தீர்வை ரூ. 1-1-3; நிலக்காரருடைய வரும்படி ரூ. 1-1-3; சாகுபடிச் செலவு ஸெட்டில்மெண்டாருடைய கணக்குப்படி ரூ. 4-10-3 ஆக 6-12-9; இத்துடன் காலஸ்திதிக்காக உடைவாரத்தில் கழிந்த கால்பங்கு

சேர்த்துக்கொண்டால் புன்செய் ஏகரா 1ல் சராசரி உடைவாரம் ரூ. 8-7-11 விலையுள்ள தானியமாகிறது. இதில் மாடுகளுக்குத் தீனியாய் உபயோகப் படுவதும், சாகுபடிச் செலவில் சேராததுமான தட்டுதாள் சேராமல் இருக்கிறது. நன்செய் நிலத்தில் ஏகரா 1க்கு சராசரி தீர்வை ரூ. 5-6-11; நிலக்காரருடைய வரும்படி அல்லது துண்டுவாரம் ரூ. 5-6-11; சாகுபடிச் செலவு அல்லது குடிவாரம் ரூ. 7-9-9; காலஸ்திதிக்காக உடைவாரத்தில் கழிவு ஆறிலொருபங்கு; ஆகமொத்த உத்பத்தி ரூ. 21-8-10 விலையுள்ள தானியமாகிறது. இதிலும் முன்போல மாட்டுக்குபயோகப்படத்தக்க வைக்கோல் சேரவில்லை.

இந்தக் கணக்கின்படி 8 ஏகரா புன்செயும், 2 ஏகரா நன்செயுமுள்ள குடித்தனக்காரனுக்குத் தீர்வைபோக ரூ. 106-6-6 மிகுகிறது. இதில் காலஸ்திதிக்காகக் கழிப்பதைக் கழித்தால் வரும் தொகை ரூ. 79-13-11. அதாவது அவனும் அவனுடைய குடும்பமும் வேலைசெய்ததற்கும் செலவழித்ததற்குமாக ஒரு மாதத்திற்கு சராசரி ரூ. 6-8-0 வரும்படியடைகிறான்.

சென்ற வருஷத்தில் கைப்பற்றிலிருந்த 270 லட்சம் ஏகராவில் 50 லட்சம் ஏகரா போடுகோலாய்த் துண்டுவாரத்துக்கு உபயோகப்படாமலிருந்தது.

சாகுபடியான நிலங்களில் கோதுமை சாகுபடியான நிலம் மிகவும் கொஞ்சம். இதை சேலம், நீலகிரி, கோயம்புத்தூர், கர்னூல், பல்லாரி, கடப்பை, கிருஷ்ணை இந்த ஜில்லாக்களில் விசேஷமாய் அதிகப்படுத்தலாம். சாதாரணமாய் உழுது எருவிடுதல் கோதுமைக்குப் போதுமானது. நல்ல விலைக்கு விற்கத்தக்க இந்தத் தானியத்தை இவ்வளவு சொற்பமாய்ப் பயிரிடுவதே இந்தப் பிரவிடென்ஸியில் வியவசாயம் மிகவும் தாழ்ந்தஸ்திதியிலிருக்கிறதென்பதற்குப் பூரணதிருஷ்டாந்தமாம். எல்லாவிடங்களிலும் பயிராகத்தக்க கரும்பையும் அப்படியே மிகவும் சுவல்ப இடங்களில் பயிர்செய்துவருகிறார்கள்.

இத்தேசத்தைவிட அதிக நாகரீகத்தையுடைய இதரதேசங்களில் தீனிக்காகப் பயிரிடுகிற கிழங்குவகைமுதலான், நிலத்துக்கு ஸாரத்தைத் திருப்புகிற, பயிர்கள் இவ்விடங்களில் கிடையா. சாகுபடியாகிற பூமி முழுவதும் பூஸாரத்தைப் பீடிக்கிற பயிர்கள்தாம் இடப்படுகின்றன. செம்மையாய் எருப்போட்டே பயிரிடத்தக்க தானியங்களும் பயிர்செய்வதில்லை.

இவ்விடத்திய பஞ்சு அரிசி இவைகளைச் சீமையில் விற்பனை செய்தால், இவ்விடத்திய பஞ்சுக்கு அமெரிக்காதேசத்துப் பஞ்சின் விலையில் பாதி அல்லது முக்காலும், இவ்விடத்திய அரிசிக்கு அவ்விடத்திய அரிசி விலையில் ஏறக்குறைய அரைப்பங்குந்தான் கிடைக்கும். இவ்விடத்திய புகையிலை அவ்விடத்தில் விலையாவதேயில்லை. வெள்ளைக்காரர் பயிரிடுகிற நீலி, காபி, தே இவைகள்மாத்திரம் நல்ல விலையாய் விற்கப்படுகின்றன.

பூமியைச் சோதித்து அதின் ஸாரத்தை அறியாதிருக்கிறவரையில், விளைவு குறைவினாலேயே, பூமி கெட்டபூமியென்று சொல்லக்கூடவில்லை. செம்மையாய்ச் சாகுபடிசெய்யாமையினாலேயும் விளைவு குறைவாகலாம். ஆயினும் புகையிலைச் சாம்பலின் ஸாரம் அது விளையும் பூமியினுடைய ஸாரத்தைப்போலவே இருக்கிறபடியால், மேஸ்டர் பிரைடன் என்பவர்

செய்த புகையிலைச் சாம்பலின் சோதனையினால், அடியில் கண்ட ஜில்லாக்களின் நிலங்களில் மேற்சொன்ன திரவம் அடியில் கண்டபடி இருக்கிறதென்று ஊகிக்கலாம். பூமியிலே சாம்பலுப்பு என்கிற ஒருவகைத்திரவம் இருக்குமளவு, 100 பங்கு சாம்பலுக்கு, விசாகபட்டணம் 9·76; திருச்சிராப்பள்ளி 6·01; பல்லாரி 6·22; நெல்லூர் 6·96; கடப்பை 4·39; தஞ்சாவூர் 8·71; வட ஆர்க்காடு 4·58; தென் ஆர்க்காடு 11·29; நீலகிரி 17·81; கர்னூல் 5·73; கோயம்புத்தூர் 7·68; கிருஷ்ணை 13·52; தென் கன்னடம் 5·6; சென்னை 7; செங்கல்பட்டு 63; மதுரை 7·02; சேலம் 8·05; மடங்கு அந்தத் திரவம் இருக்கிறது. இதரதேசங்களில் விளைகிற புகையிலையில் இந்தத் திரவம் அதிகமாயிருக்கிறது. மெரிலாண்டில் 100க்கு 40·7 பங்கும், மசாசுசட்ஸில் 47·8 பங்கும், ஹங்கேரியில் 26·46 பங்கும் இருக்கிறது.

பயிர்களின் ஆகாரத்திற்கு மேல்திரவம் எவ்வளவு ஆதாரமென்பதைத் தெரிந்துகொள்வதற்காக அடியில் கண்ட பயிர்களின் சாம்பலில் அது இருக்கிற அளவு கீழே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

100 பங்கு சாம்பலுக்கு.

உருளைக்கிழங்கு..............	59·8	பருத்திவிதை	35·44
கோதுமை	31·1	பார்லி அரிசி	21·9
மக்காசோளம்	27	நெல்	18·4
சோளம்	11·9		மடங்கு இருக்கிறது.

அதிக எருவிட்டுச் செம்மையாய்ச் சாகுபடி செய்யப்படுகிற புகையிலை நடும் பூமியில் மேல்கண்ட திரவம் இருக்கும் அளவை யோசித்தால், பூமியில் அப்படிப்பட்ட திரவம் குறைந்துகொண்டுவருகிறதென்பது தெளிவாய்ப் புலப்படுகின்றது.

இத்தேசத்திய உற்பத்தியும் குறைவாகவேயிருக்கிறது. இவ்விடத்திய ஒரு ஏகராபூமியிலே 70 அல்லது 80 பவுன் பஞ்சும், 15 புஷல் நெல்லும் உண்டாகிறது. அமெரிக்காவிலோ 450 அல்லது 500 பவுன் பஞ்சும், 70 புஷல் நெல்லும் காணுகிறது. இவ்விடத்தில் செம்மையாய் விளைந்தால் ஒரு ஏகராவுக்கு 10 புஷல் மக்காசோளமாகிறது. அவ்விடத்தில் 50 முதல் 80, 100 வரையில் ஆகிறது.

இத்தேசங்களில் குண்டைகள் மிகவும் தாழ்ந்த ஸ்திதியிலிருக்கிறதென்பது சாதாரணமாய்த் தெரிந்த சங்கதியாகையால், அதைப்பற்றி இவ்விடத்தில் ஒன்றும் சொல்லத்தக்கதில்லை.

பயிர்க்காதாரமான பலவற்றுள்ளும் ஜலம்பாய்ச்சுவது மிகவும் முக்கியமானது. அது இத்தேசத்தில் மிகவும் ஈனஸ்திதியிலிருக்கிறது. ஜலங்கட்டவேண்டிய அளவு இம்மாத்திரமென்று இத்தேசத்தார்க்கு அநேகமாய்த் தெரியாது; வாய்த்தமட்டும் கட்டுகிறார்கள். குடித்தனக்காரர்கள் எவ்வளவு ஜலமிருந்தால் போதுமென்று சொல்வார்களோ அதைச் சுலபமாயறியக்கூடவில்லை. கஷ்டமொன்றுமில்லாமல் மதகுதிறந்து பாய்ச்சுவதாயிருந்தால் எவ்வளவு தண்ணீர் கட்டினாலும் கட்டலாமென்று அவர்கள் நினைத்திருப்பதாய்த் தெரியவருகிறது. 26 (அங்குலம்) செவிமழைபெய்த ஒரு வருஷத்தில், ஒரு ஏகராநிலம் ஒரு மஹசூல் அறுவடைசெய்வதற்காக, அதின்பேரில் 9 அடி நிற்கத்தகுந்த ஜலத்தை ஒரு குடித்தனக்காரன் உபயோகப்படுத்தினதாக,

1872-ஆ கோதாவரி ஜில்லாவில் தண்ணீர் பாய்ச்சலுக்கு முக்கிய அதிகாரியாயிருந்த இன்ஜினியர் ஒருவர், பாய்ச்சல் பரிட்சையைப்பற்றி, எழுதிய ரிப்போர்ட்டினால் தெரியவருகிறது. இது துரைத்தனத்து உத்தியோகஸ்தருடைய பார்வையில் நடந்தபடியால், குடித்தனக்காரர் சாதாரணமாய் உபயோகப்படுத்துவதைவிட, இப்போது உபயோகப்படுத்தியது குறைவென்று நம்பவேண்டியதாயிருக்கிறது. சாதாரணமாய் எல்லாரும் இப்படியே ஜலம் பாய்ச்சுவார்களென்பதற்கு யாதொரு ஆட்சேபமும் காணப்படாமையால், அந்தப் பரீட்சையில்மாத்திரம் அதிக ஜலம் உபயோகப்பட்டிருக்கலாமென்று நம்பவும் இடமில்லை. மராமத்து இலாகாதாரர்கள் பரீட்சையிலும், அப்படியே பெய்த மழையோடு 6 அல்லது 7 அடி ஜலம் ஒரு போகத்துக்கு வேண்டியிருப்பதாய்த் தெரியவந்தது. ஒரு ஏகரா ஒரு போகம் சாகுபடிசெய்வதற்கு, சாதாரணமண்ணுயிருந்து சற்றே செம்மையாய்க் கிருஷிபண்ணுவதாயிருந்து அதன்மேல் 4 அடி நிற்கத்தக்க ஜலமிருந்தால், போதுமானதென்று அனுபவத்தினால் அநேகமாய்த் தெரியவருகிறது. சதுப்பாகும்படி தண்ணீர் கட்டுவதினால், பயிருக்குப் பூமியிலிருக்கிற ஸத்தி விசேஷமாய்ப் போய்விடுவதுமன்றியில், மற்றப்படியாலும் மிகவும் கெடுதி சம்பவிக்கிறது. ஜனங்களுக்கும் சவுக்கியத்தாழ்ச்சியும் உண்டாகிறது. ஒரு படியாய் ஜலப்பயிர் என்று சொல்லத்தக்க தாழ்ந்த பயிர்களில் சில தவிர மற்றப் பயிர்கள்செய்ய மண் உபயோகமற்றதாய் விடுகிறது. அதிக நாளைக்குப் பாயுத்தகுந்த ஏரிகளின் பாய்ச்சலும் குறைந்துப்போகிறது.

ஒருவாறு ஜலப்பயிரென்று சொல்லும்படியான இத்தேசத்திய நெற்பயிர், வழக்கத்தினால் சதும்பத் தண்ணீர்கட்டிப் பயிரிடுவதற்கு உரிய பயிராய்விட்டிருக்கிறது; அப்படி இருப்பதினால் அதன் சிறுவேர்கள் பரவலாய்ப் பின்னிக்கொண்டு சேற்றிலே பயிரை நிலைநிறுத்தத்தக்கினவைகளாயிருக்கின்றன. ஆகையால் இந்த நெற்பயிர் புன்செய் சாகுபடிக்கு உபயோகமில்லாமல் மேல்மண்ணுலர்ந்தவுடனே வேரும் உலர்ந்து பயிர் வாடிப்போய் விடுகிறது. ஆனாலும் இப்போது அடிக்கடி உபயோகப்படுத்துவதைவிட மிகவும் கொஞ்ச ஜலத்தினால் அதைச் சாகுபடிசெய்யலாம். இதிலும் குறைந்த ஜலத்தினால் பயிரிடுவதற்கு வேர் கீழேயிறங்கும்படியான ஜாதிநெல் சம்பாதிக்கவேண்டும்.

புன்செய் சாகுபடியில் இத்தேசத்தாருக்கு ஒன்றும் தெரியாதாயினும், நன்செய் சாகுபடியில் அவர்கள் தெரிந்துகொள்ளத்தக்க விசேஷங்களொன்றுமில்லை என்று சிலர்சொல்லுவது தெரியாமையாயிருக்கிறது. புன்செய் சாகுபடிசெய்ய எவ்வளவு தெரியுமோ அதைவிட அதிகம் நன்செய் சாகுபடிசெய்யும் விஷயத்தில் அவர்களுக்குத் தெரிந்திருக்கிறதாகச் சொல்லக்கூடாது. விசேஷ ஜலத்தைக்கட்டி நல்லநிலத்தில் நடுத்தரமான மஹசூல் உற்பத்திசெய்வது கிருஷியினுடைய மேன்மைக்கு அடையாளமல்ல. இப்போது உபயோகப்படுத்துவதில் பாதி ஜலத்தைக்கொண்டு அவ்வளவும் உற்பத்திசெய்து அதனால் சாகுபடி இரட்டிப்பாக்கி, ஜனங்களுடைய சவுக்கியத்தையும் விருத்திசெய்து, பூமியினுடைய வளப்பமும் போகாமல், செய்யும் கிருஷிக்கு இந்தக் கிருஷி தாழ்ந்ததென்று சொல்வதற்குச் சந்தேகமென்ன?

களர்நிலங்களைத் திருத்துவதைப்பற்றி ராபர்ட்ஸன் துரை சொன்னதாவது: உப்பு மிகுதியாலே களராயிருக்கிற நிலங்களைப் பண்படுத்துவதில் எனக்கு

அநுபவமில்லை. உபாயமாய் மேலேமாத்திரம் உப்புக்களராயிருந்த சில துண்டுநிலங்களைச் சாம்பல் சுண்ணாம்பு முதலிய எருவிட்டும், ஆழ உழுதும், நல்ல ஜலத்தைக்கொண்டு மேல்மண்ணை அலம்பியும், மணல்போட்டும், மாட்டுச்சாணி மூத்திரமுதலிய எருவிட்டும் பயன்படாமற்போயிற்று. மற்றவைகளைவிடச் சாணியெருவில் விசேஷகுணமிருந்தது. உப்புத்தின்னிகளென்று சொல்லப்பட்ட அநேகம் பயிர்களையும் அவைகளில் செய்துபார்த்தேன்; ஒன்றும் செம்மையாய் முளைக்கவுமில்லை, பலிக்கவுமில்லை. சாகுபடி நிலங்களில் உப்பு உண்டாகும் காரணங்களைப்பற்றி விசாரிக்க எனக்கு அநேக அவசரங்கள் நேரிட்டன. அப்படி விசாரித்ததில் பூமியின்கீழ் நீர்க்கால்கள் கட்டுவதினால்மாத்திரம் அந்தக் களர் நீங்குமேயல்லது மற்றப்படி நீங்காதென்று நினைக்கவேண்டியதாயிருக்கிறது. இவ்விதமான களர்நிலங்களைத் திருத்துவதில் கோயம்புத்தூர் குடிகள் செய்யும் பக்குவங்களைக் கீழே விவரிப்போம். களர்நிலங்களை முதலில் சமப்படுத்தி, ஒன்றரை அடியுயரமுள்ள வரப்புகள்போட்டுப் பாத்திபாத்தியாகக்கட்டி, அவைகளில் பிரண்டை, கள்ளி, கொஞ்சி, எருக்கிலை, ஆவாரை, புங்கை, தும்பை, மணிப்போக்கி, கம்பங்கதிர், கேழ்வரகுகதிர் முதலானவைகளையும் சாணியையும் சேர்த்து சேற்றில் மிதித்து 20 நாள்வரையில் அடிக்கடி ஜலம்கட்டினால் கெட்ட நாற்றமெடுபட்டு, பூண்டுகள் மண்ணோடு கலந்து மக்கும்; இப்படி இந்தப் பூண்டுகள் அழுகுவதில் உப்பு எடுபட்டுப்போமென்றும் வருஷத்தில் இரண்டுதரம் விழுக்காடு மூன்றுவருஷம் இப்படிச் செய்யவேண்டுமென்றும் சிலரும், பலவிதமான தோல்களை நாற்றமெடுக்கும்படி அழுகப்போட்டு அவைகள் அழுகின ஜலத்தை அவற்றிலிருக்கிற பயிர்களோடு களர்வயலில் கட்டித் தண்ணீரும்கட்டிப் பத்துநாளைக்குப்பிறகு இந்தத் தண்ணீரை எடுத்துவிட்டாலும் களர் நீங்குமென்றும், ஆனால் இப்படி விருத்திசெய்த நிலம் அதிக மழைபெய்தால் மறுபடியும் களராய்விடுமென்றும் சிலரும், களர்நிலத்தில் நாகதாளி ராக்காசி இவைகளை உற்பத்திசெய்து நாலுவருஷத்திற்கு வளரும்படி செய்தால் இவைகளின் உப்பைத் தின்றுவிடுமென்று சிலரும் சொல்லுகிறார்கள்.

மக்காசோளமும் பருத்தியும் எவ்வளவு ஆழத்தில் விதைத்தால் குணமிருக்குமென்பதைப்பற்றிப் பரீட்சித்ததில் கண்டுபிடித்த விவரங்களைக் கீழே சொல்லுகிறோம்.

ஒரு அங்குலத்திற்குக் கீழே விதைத்த பருத்திவிதை 100க்கு 66 வீதம் 7–ம் நாள் முளைத்தது. 2 அங்குலத்திற்குக்கீழே விதைத்தது 100க்கு 34 வீதந்தான் 8–ம் நாள் முளைத்தது. 3 அங்குலத்தின் கீழே விதைத்தது 100க்கு 16 வீதம் 8–ம் நாள் முளைத்தது. 4, 5 அங்குலங்களுக்குக் கீழே போட்டது முளைக்கவேயில்லை.

மக்காசோளம் ஒரு அங்குலத்தின் கீழே விதைத்தவிதை 100க்கு 80 முளைத்தது. 2 அங்குலத்தின் கீழே விதைத்தது 100க்கு 32-ம் 3 அங்குலத்தின் கீழே விதைத்தது 100க்கு 26-ம் முளைகிளம்பிற்று. இதுவும் எவ்வளவு மேலே விதைக்கப்பட்டதோ அவ்வளவுதுரிதத்தில் முளை கிளம்பிற்று.

மேலே விதைப்பதினால் துரிதமாய் முளைத்து அதிக முளைகள் கிளம்பினபோதிலும், அதினால் நல்ல பலனுண்டு என்று நினைக்கக்கூடவில்லை. ஆயினும் மேல்கண்ட பெரும்விதைகளுக்கு ஒரு அங்குலம் சத்தமாய்ப் போதாதென்று தோன்றுகிறது. செம்மையாய் உழப்பட்ட சைதாப்பேட்டைத்

தோட்ட நிலத்தில் சதாரணமாய் 2 அங்குலத்துக்குக் குறைந்து விதைக்கிற தில்லே. முளைக்கும் சக்தியை அனுசரித்து எவ்வளவு ஆழ உழுகிறோமோ அவ்வளவு, முளைத்தமுளைகள் கடைசிவரையில் நின்று பலிக்குமென்று நன்றாய்த் தோன்றுகிறது. ஆயினும் ஆழமாய் விதைத்த விதை முளைக்கவேண்டியதற்கு நிலம் ஆழமாய் உழப்பட்டிருக்கவேண்டும். அப்படி உழுவதினால் மழைஜலம் கீழேயிறங்கிக் காற்றையும் கூடக்கொண்டுபோய்ப் புதைத்திருக்கிற விதைக்குச் சேர்க்கும். விதைகள் முளைக்கவேண்டியதற்குக் காற்று, உஷ்ணம், ஈரம் இவை அவசியமானவை. செம்மையாய் உழப்படாத மண்ணில் புதைந்த விதை முளைக்கவேமாட்டாது. ஒரேமாதிரியாய்ப் பயிர் வரவேண்டியதற்கு ஒரே அளவான ஆழத்தில் விதைகளை விதைக்க வேண்டுமென்பது மேலேசொன்ன பரீட்சையினால் தெளிவாகும். அப்படி ஒரே அளவான ஆழத்தில் விதைக்காமல் கண்டபடி ஒரு இடத்தில் ஆழத்திலேயும் ஒரு இடத்தில் மேலேயும் விழும்படி விதைப்பதில், பயிர்கள் ஒரே காலத்தில் ஏற்றேறி முற்றாமல் முன்னும் பின்னுமாய் முற்றுவதில் முற்றாததற்காகக் காத்து முற்றின மணிகளைச் சிந்தவிடவாவது முற்றியதை அறுத்துக்கொண்டு முற்றாததைக் கைவிடவாவது வேண்டியிருக்கிறது.

நாட்டுப்புறத்தில் உற்பத்திசெய்த இரண்டுமாதிரி, காரோலீனா தேசத்து, நெல்லரிசியை லண்டன் நகரத்துக்கு அனுப்பிவைத்ததில் அது, காரோலீனா அரிசி லண்டனில் விற்கிறவிலையை யோசித்து நான் உத்தேசித்திருந்த விலைக்கு, மிகவும் குறைவாய் மதிராசில் விற்கிற விலைக்குக் கொஞ்சம் அதிகமாய் விலைபோயிற்று.

கோயம்புத்தூர் நீலகிரி இந்த ஜில்லாக்களிலிருந்து வருவித்த கோதுமையை இந்தப் பாகத்தில் சிலவிடங்களில் செம்மையாய் உழுது எருவிட்ட நிலத்தில் ஜனவரி பிப்ரவரி மார்ச்சு இந்த மாசங்களில் விதைத்துப்பார்த்ததில், விதைகள் செம்மையாய் முளைத்துப் புஷ்பிக்கிறவரையில் நன்றாய் வளர்ந்தன. ஆனால் சில கதிர்கள்தாம் முற்றி மணியாயின. அதிக உஷ்ணத்தினால் எல்லாம் பலிக்காமல்போயினவென்று தோன்றுகிறது. நவம்பர்மீ முதலில் விதைத்து ஜனவரிமீத்தில் அறுவடையாகும்படி செய்திருந்தால் இப்படியாயிராதென்று தோன்றுகிறது. நெல் மஹசூலினால் எவ்வளவு தானியமுண்டாகுமோ, அதைவிட அதிகம் கோதுமை மஹசூலினால் உற்பத்தியாகின்றது. மேலும் நெற்பயிருக்கு ஒரு போகத்துக்குவேண்டிய ஜலத்தினால் இரண்டுமூன்று போகம் கோதுமை சாகுபடியாகும்.

புலங்களில் புல் பயிரிடுவது மிகவும் உபயோகமானது. இத்தேசத்திய சமபூமிகளில் புல் பயிரிடுவதற்கு யாதொரு தடையுமில்லை. அப்படிச் செய்வதில் மிகுந்த அனுகூலமுமிருக்கிறது. மற்றத் தேசங்களில் தீனிக்காகப் பயிரிடுகிற வேர்வகைகள் பயிரிடப்படாத இத்தேசத்தில் அவைகளுக்குப் பதிலாக இதைப் பயிரிடலாம். அது பயிராகும் மாதிரியினாலேயும் பயிரிடுகிற மாதிரியினாலேயும் மண்ணுக்குக் கொழுமையுண்டாக்கிக் களைகள் விழாதபடி செய்கிறது. மற்றப்பயிர் சாகுபடிசெய்த தாளடியில் சாகுபடி செய்தால் அதிக செலவுசெய்தாலும் களையைப் போக்குவது கடினமாயிருக்கும். இதனுடைய தாளடியில் சாகுபடியாகிற பயிர் செம்மையாய் வளர்ந்து நிழல்காக்கிறபடியாலும் பயிரிடுகிற ரீதியில் களைவிழாமல் செய்ய அனுகூலங்களிருக்கிறபடியாலும் களையைச் சொல்பச்செலவில் போக்கிவிடலாம்.

ஒரேவிதமான பயிர்செய்து களைகள் பூச்சிகள் விழுந்திருக்கிற நிலங்களில் மாறிமாறி இந்தப் புல்லைப் பயிரிடுவதில் மிகவும் அனுகூலமுண்டு.

இந்தப் புல்லை ஆடுமாடுகளுக்கு அறுத்துப்போட்டாலும் போடலாம்; அவைகளை அதிலே மேயவிட்டாலும் விடலாம். ஆனால் மழைக்காலத்தில் அறுத்துப்போடுவதே நல்லது.

மேல்சொன்னபடி பயிர் செய்வதில் எப்பொழுது வேண்டுமானாலும் அப்போது எருவிடலாம்.

சாணியை வறட்டிதட்டுவதினால் இத்தேசத்திய விளைவுக்கு மிகுந்த கெடுதியென்று நினைக்கிறேன். 1. சாணியை வறட்டியாக்கிக் கொளுத்திவிடுவதில் மாட்டினுடைய மூத்திரம் பிரயோசனமில்லாமல்போகிறது. 2. பூமிக்கு வளத்தைக்கொடுக்கிற ஓஷதிசத்தும் கொளுத்துண்டு காற்றிலே போய்விடுகிறது. 3. அது சுட்டுவரும் சாம்பலும் செம்மையாய்க் காப்பாற்றப்படாமல் வீண்செய்யப்படுகிறதுமன்றி, போடுகிற சாம்பல்கூட மழையில் சாக்கிரதையாய்க் காப்பாற்றப்படாததினால் சத்து குறைந்தும்போய்விடுகிறது. மாட்டினுடைய சாணியைவிட மூத்திரத்தை நல்ல எருவாக எண்ணுகிறார்கள்.

ஆகாசத்திலிருந்து ஈரத்தைக் கிரகித்துப் பூமியை நல்ல ஸ்திதியில் வைத்துக் காப்பாற்றுகிற சக்தி, அதிலிருக்கிற ஜெந்து ஓஷதிசத்து இவைகளை அனுசரித்திருக்கிறபடியால், அடிக்கடி மழையில்லாமையினாலும் க்ஷாமத்தினாலும் கஷ்டப்படுகிற இந்தத் தேசத்துக்கு, தொழுவத்துச் சாணியெருப் போடுவதில் எல்லாத் தேசத்தையும்விட விசேஷப் பிரயோஜனம் உண்டாயிருக்கும். சாணிகலந்த ஒரு அடி ஆழம் பூமியானது அதே அடி ஆழம் சாணியெருவில்லாமல் தாது எருகலந்தாவது எருவேபோடாமலாவது இருக்கிற பூமியைவிட $1\frac{1}{2}$ செவி ஜலம் அதிகங்கொண்டிருப்பதாக லாஸ் ஜில்பர்ட் என்பவருடைய பரீட்சையால் தெரியவருகிறது.

நைடர்ஜன் என்கிற அதிக வளமான சத்தையுடைய ஓஷதிசத்தானது சாணியிலே முக்காலரைக்கால் பங்காயிருக்கிறது. கொளுத்தினால் காற்றிலே போய்விடும்.

ஒருவண்டி சாணியை வறட்டிதட்டிச் சாம்பலாக்கிப்போடுவதினால் எவ்வளவு பிரயோஜனமுண்டாகுமோ, அதுபோல நாலு பங்கு, சாணியாய்ப் போடுவதில், உண்டாகுமென்று தெரிந்தவர்கள் ஒப்புக்கொள்வார்களென்பதில் சந்தேகமில்லை. போடுகிறமஹசூலுக்குமாத்திரம் உபயோகப்படுவேதல்லாமல் பின்னடிக்கும் அதே எரு பலன்கொடுக்கும். மழையில் சாம்பல் அடித்துக்கொண்டுபோவதுபோல சாணி அடித்துக்கொண்டுபோகாது.

விறகைவிட வறட்டி அதிக விலைவிற்பதாகத் தெரியவருகிறபடியால் வாங்குகிறவர்களுக்குக்கூட அதில் லாபமிருப்பதாகத் தெரியவில்லை.

சுண்ணும்பை எருவாய் உபயோகிப்பதால் உண்டாகும் பிரயோஜனம் இத்தேசத்தாருக்குச் சுத்தமாய்த் தெரிந்ததாகத் தோன்றவில்லை. சுண்ணும்பு சுலபமாய் அகப்படத்தக்க இடங்களில்கூட உபயோகிப்பதாய் தெரியாததால், அகப்படுவது அருமையினாலே உபயோகப்படுத்தவில்லையென்றும் சொல்லக்கூடவில்லை. சைதாப்பேட்டைத் தோட்டத்தில் நீலி பருத்தி சோளம் புகையிலை இவைகளைப்பற்றிச் செய்த பரீட்சையினால் அந்த எருவின் உபயோகம் நிஸ்ஸந்தேகமாய் விளங்கும். அதிகமாய் களிமண்ணும் ஓஷதிசத்தும் கலந்திருக்கிற மண்ணைப்போல இலேசுமண்ணை

சைதாப்பேட்டைத் தோட்டத்தில் சுண்ணும்பு எருவின் பிரயோஜனம் செம்மையாய்த் தெரியாது. இந்த எருவைப்போடுவதினால் மண் ஒத்துக் கெட்டியாவதன்றியில் பயிர் காய்ச்சலையும் தாளுகிறது. இவ்விடத்தில் சுண்ணும்பு விலை சீமை விலைக்கு இரட்டிப்பாய் இருக்கிறது; நயமாயிருந்தாலும் இங்கிலாந்தில் 15 வருஷத்திற்கொருதரம் ஏகரா 1க்கு 7,8 வண்டிகள் ஒரு தடவையாய்க் கனத்துபோடுகிறதுபோல்போடாமல் 3,4 வருஷத்திற்கு ஒருதரம் வண்டி விழுக்காடுபோடுவதில் இந்த இலேசுமண்களுக்கு அனுகூலமென்று தோன்றுகிறது.

வயலில் பயிராகிற பலவிதமான பயிர்களினுடைய சாம்பலிலும் சுண்ணும்பு உண்டு. வளமான நிலங்களில் எல்லாவற்றிலும் சிலவிடங்களில் அதிகமாயும் சிலவிடங்களில் கொஞ்சமாயும் இருக்கின்ற சுண்ணும்பு, தான் ஆகாரமாய் உபயோகப்படுவதன்றியில், பூமியில் உபயோகமில்லாமல் தங்கியிருக்கிற தாதுஸத்தையும் மண்ணிலிருந்து பிரித்து ஆகாரமாக்குகிறது. இதன்றியில் புளித்திருக்கிற பூமியின் புளிப்பையும் போக்கடிக்கிறது. இது, அழுத்தமான களிப்புமண்ணையும், அடியிலிருந்து கிளரி வெளிக்குக் கொண்டுவரப்பட்ட மண்ணையும் பக்குவமாக்குவதில் விலையில்லாத எரு. பழச்செடிகள் பயிர்செய்கிற மண்ணில் இந்த எருபோட்டால், பழத்தினுடைய ருசிவாசனைகளில் உண்டாகும் பேதம் வெகு ஆச்சரியமாயிருக்கும். அழுத்தமான களிமண்பூமியில் வைக்கப்பட்டு மட்டியாயும் சாப்பிடத்தகாததாயுமிருப்பதான காய்காய்த்துக்கொண்டிருந்த வாழைச்செடிகள் இந்த எருபோட்டதில் வாசனை மாறியதன்றியில் பருமனாய்ப் பருத்திருந்த தோல்கள் மெல்லியதாயு மிருதுவாயும் ஆகி ருசியும் நல்லதாயிற்று.

ஆயினும் இத்தேசத்திய குடிகள் அந்த எருவினுடைய உபயோகத்தைத் தெரிந்துக்கொள்ளாதிருப்பதே நலமென்று தீரயோசிப்பதில் தெரியவருகிறது. இப்போது குடித்தனக்காரர்கள் சாதாரணமாய்ச் சாகுபடிசெய்கிற மண்ணை ஆழமாய் உழுது வேறே எருவில்லாமல் இந்த எருமாத்திரம் போட்டாலும், இப்போது உற்பத்தியாவதைவிட அநேகமடங்கு அதிகம் சிலகாலம் உற்பத்தியானாலும், பிறகு விளைவு மட்டிட்டுக்கொண்டுவரும். ஏனென்றால் சுண்ணும்புதான் எருவாவதுமல்லாமல், பூமியில் முன் உபயோகப்பட்டுவராத, அல்லது அப்போதிய விளைவுக்குப்போதுமானமட்டில் உபயோகப்பட்டுவந்ததைவிட அதிகமான, ஸத்தைப் பூமியிலிருந்து பிரித்து எருவாக்கிப்போடுகிறதாகையால், மண்ணிலிருக்கிற ஸாரம் நாளாவட்டத்தில் எடுபட்டுப்போகிறது. இத்துடன் கூட வேறே செம்மையான எருவை செம்மையாய்ப் போடுவதாயிருந்தால்தான் இதை எருவாக உபயோகிக்கலாம்.

ஜலத்தைக் கீழாலே வடியவிடுவதின் பிரயோஜனத்தைப்பற்றி விவரிப்போம். ஜலம் பயிருக்கு ஆதாரமாயிருக்க, அதை வடியவிடுவதில் என்ன பிரயோஜனமென்று சிலர் கேட்கலாம். கீழ்ப்பூமியின் வடிவினால் ஜலமெல்லாம் வடிந்துபோகாது. செம்மையாய் வடித்தபூமியிலே வடியாத பூமியிலிருக்கிற ஈரத்தைவிட அதிக ஈரம் இருக்கிறது. ஆயுதங்களால் வேலைசெய்யச் சௌகரியங்களிருக்கிறபடியாலும் அப்படி அதிகநாள் செய்யக்கூடுமாகையாலும் மண் செம்மையாய்ப் புழுதியாகிச் சந்துகொடுத்திருப்பதினாலும் ஜலம் அதிகம் கொள்ளும்படியானசக்தி வடிவுள்ளபூமிக்குண்டாகிறது. ஜலம் மிகுந்திருக்கிற பூமியிலே காற்று பிரவேசிக்கிறதில்லை;

அதன்றியில் உஷ்ணம் பிரவேசிக்கக்கூடாமையினாலும் ஜலம் சுண்டு வதில் உஷ்ணம் போய்விடுகிறபடியாலும் பூமியும் அடியில் குளிர்ச்சியாக வேயிருக்கும். காற்றும் உஷ்ணமும் இல்லாமையால் விதையும் முளைக் காது; உஷ்ணம் அதிகமாய்க் குறையும்போது இந்த உஷ்ணதேசத்திய செடிகள் கெட்டுப்போகின்றன. மழைக்காலத்தில் மப்புமூடி அடர்மழை பெய்தால், செழுமையாயிருந்த செடிகள் சோகைபிடித்து உறங்கிப்போவ தன்றியில் பின்னிட்டுச் சாதாரணமாய் ஒருவகை நோயினாலே பீடிக்கப் பட்டுத் தலையெடுக்காமலே போய்விடுகின்றன.

பூமிக்குள் அந்தரத்தில் நிற்கத்தகாத ஜலத்தையும் பூமியின்கீழிருக்கிற ஊற்றுஜலத்தையும்மாத்திரம் கீழ்வடிவினால் வடியவைக்கவேண்டும்.

கீழ்வடிவு நீர்க்கால்களை ஆழமாய்க் கட்டி மழைஜலம் கீழேவடியும் போது அதிலிருக்கிற ஸத்தை அந்த மண்ணில் தாங்கும்படி செய்யவே ண்டும். 30 சுமை மண்மழைபெய்வதால் ஒரு ஏகராவில் விழுகிற ஜலம், ஒரு மஹாருஜுக்குப் போதுமான எருவாகிய 7 பவுன் அம்மோனியா என்கிற ஸத்தைக் கூடக்கொண்டுபோவதாய்ச் சொல்லுகிறார்கள்.

செம்மையாய் உழுது புழுதியாக்காத பூமி வடிவிருந்தாலும் வடிவில் லாத பூமியைப்போல்தான் ஜலம் கொள்ளும். காற்றிலிருக்கிற ஈரம் காற்றுப் போகத்தக்க சந்துகளுள்ள பூமியிலேமாத்திரம் பிரவேசிக்குமேயொழிய அழுத்தமான தரைகளிலே பிரவேசியாது. இராக்காலத்தில் குளிர்ந்திருக்கிற காற்றையுடைய இத்தேசத்தில் அதிலிருக்கிற ஈரத்தை உபயோகப்படுத்த வேண்டுமானால் பூமியை உழுது நல்ல புழுதியாய் வைத்துக்கொண்டிருக்க வேண்டும்.

இந்த நியாயங்களைச் செம்மையாய் ஆய்ந்தறிந்து பழையமாதிரிகளைவிட் டுப் புதுமாதிரியை அனுசரித்துத் திருத்தமாய்ப் பயிர்செய்வார்களானால் விளைவுகள் வருஷாவருஷம் அதிகமாகிக்கொண்டு வருமென்பதற்குச் சந் தேகமேயில்லை.

வாழ்நாள் போதாமையென்னும் பேதைமை.

மூன் கல்பங்களிலே இவ்வுலகத்தில் மனிதர்கள் ஆயிரம் பதினா யிரம் என்று ஆயிரக்கணக்காகவே ஆயுளுள்ளவர்களாய் வாழ்ந்திரு ந்தார்களென்று நாம் அநேகமாய்க் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அக்காலங்களில், இந்த உலகம் எந்த நிலையிலிருந்ததோ, ஜன ங்கள் எவ்விதமாய் வாழ்ந்தார்களோ, அவர்கள் காலத்தை எவ்வித மாய்ப் போக்கினார்களோ, எந்தக்காரியம் எவ்விதமாய் நடந்ததோ அவற்றின் வரலாறு இப்படிப்பட்டதென்று நமக்குத் தெளிவாய்த் தெரியாது. இந்தக் கல்பத்தில் நமது கண்முன்னே நடந்துவருகிற வியாபாரங்களைப் பார்க்குமளவில், நாம் செய்யவேண்டிய காரி யங்களுக்கு நமது வாழ்நாள் மிகவும் சொற்பமானது என்று சொ—

ல்வி இக்காலத்தவர் அநேகர் முறையிடுகிறார்களே; அது மிகவும் பேதைமைப் பிதற்றென்று நாம் துணிவாய்ச் சொல்லலாம். இக்காலத்து மனிதர் அநேகர் கோருகிறபடியே மன்னுயிர்களுக்கு வாழ்நாள் நீடித்து, எவரும் நெடுநாள் ஜீவித்திருக்கும்படி நேரிடுமாயின், ஜனங்களுக்கு வருத்தமும் அசவுக்கியமும் வரவா அதிகமாகி, இவ்வுலகம் மனிதர் குடியிருப்பதற்கே உபயோகமற்றதாய்விடும். ஏனெனில்,

முதலாவது: இப்போது இவ்வுலகநிலை ஒருவகையாயில்லை. இவ்வுலகத்தில் சிலர் அதிகவிடத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலோர் ஒன்றுமில்லாமல் அன்றாடம் உடல்வருந்தி உழைத்தாகிலும், பொருளுள்ளவர்களை வருத்தித் தொந்தரைசெய்து அவர் கைப்பொருளைப் பறித்தாகிலும், அல்லது பலதந்திரவித்தைகள்செய்து பொருள்தேடியாகிலும் தமது காலத்தைக் கழித்துவருகிறார்கள். ஆகையால், இவ்வுலகத்தையே தமக்குக் கைவசமாக்கிக்கொண்டு களிப்பும் கோலாகலமுமாய் வாழ்கிற செல்வவான்களும் பிரபுக்களும் இவ்வுலகத்திலேயே பல நூற்றாண்டுகளைக் கழிக்க விருப்பங்கொள்வதற்குப் பல ஏதுக்களுண்டாயிருப்பதாகத் தோன்றினும், மானவமானமில்லாமல் சாண்வயிற்றுக்காக ஊரூராய்த் தெருத்தெருவாய் ஓடிக் காசுபொறமாட்டாத அநாதைகளையெல்லாம் இந்திரன் சந்திரனென்று சொல்லித் துதித்து, அவர்கள் கழுத்தைப் பிடித்து நெட்டித்தள்ளத்தள்ள, கெஞ்சியிரந்தும், வயிற்றுக்கில்லாமையால் மதிகெட்டுப் பிறர்பொருளைக் கொள்ளையாடியும், பலருக்கு அடிமைசெய்தும் அல்லாடித் தவிக்கிற பேதைகளுக்கு வாழ்நாள் நாற்பது ஐம்பது வயதுவரைக்குங்கூட ஓடாமல் அதற்கும் உட்பட்டேயிருக்குமானால் அதுவே உத்தமம் என்று தோன்றுகிறது. குடிக்கக் கூழுங் கட்டக்கந்தையும் இல்லாமல் தவிப்பதும், காலும் விலங்குமாய்ச் சிறைச்சாலையில் அல்லாடுவதுமாக இந்தச் சுகத்தை எத்தனைநாள் அனுபவிக்கவேண்டும்! அப்படியில்லாமல், சொற்பகாலம் தமது வாழ்க்கைக்குப் போதாதென்று நினைக்கின்ற மூடர்கள் பின்பு தெய்வசங்கல்பத்தால் தமக்கு என்னென்ன சம்பவிக்குமோ அவைகளை அஞ்சாமல் அனுபவிக்க எதிர்பார்க்கவேண்டுவதுதான். ஆகையால் கொஞ்சம் ஏறக்குறைய எல்லாமனிதர்களும் தமது வாழ்நாள் சுருங்கியிருப்பதிலேயே விசேஷமாய்த் திருப்தியடைந்திருப்பதற்குக் காரணங்கள் அதிகமாயிருக்கின்றன.

நாம் நெடுநாள் வாழவேண்டுமென்று ஆசைகொள்வதற்குக் காரணம் ஏதாவதொன்று உண்டோ? அது ஒன்றுமில்லை.

இரண்டாவது: இவ்வுலகத்தின் இப்போதிய நிலைமையைப் பார்த்தால், சந்ததிகள் ஒன்றின்பின் ஒன்றாய் விருத்தியாகிக்கொண்டேயிருக்கின்றன; இப்போது இவ்வுலகத்தில் எங்கும் பிரஜைகள் நிறைந்து குடிகொண்டு ஒவ்வோரிடத்தையும் ஒவ்வொருவர் கைப்பற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும் நாம் முன்சொல்லியபடியே, இப்பூமியில் அதிக தேசத்தைக் கைவசப்படுத்திக்கொண்டிருப்பவர்கள் விசேஷமாயில்லை. இப்போது, முன்னே நூறு இருநூறுவருஷங்களுக்கு முன்னிருந்த நம் பூர்விகர்கள்மாத்திரம் அவரவர்களுடைய அந்தஸ்துகளோடும் ஆட்சிகளோடுங்கூட இன்னும் ஜீவித்துக்கொண்டிருப்பதாகப் பாவித்துக்கொள்வோம். அப்படியானால், இப்போது ஆஸ்தியும் அதிகாரமுமாயிருக்கின்ற இக்காலத்து மனிதர்களின் வாழ்வு எவ்விதமாயிருந்திருக்கவேண்டுமோ யோசித்துப்பாருங்கள்! மூன்று நான்கு ஐந்து நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த பெரியோர்களும் நமது காலத்தில் பிழைத்திருப்பதாய் இருந்திருக்குமானால் இவ்வுலகம் எப்பாடுபடுமோ? முதலில் அவ்வளவு ஜனங்களுக்கும் தங்க இவ்வுலகில் இடமெங்கே கிடைக்கும்? இப்போது எங்கே ஏழை மனிதன் ஒருவனைக் காண்கிறோமோ அங்கே ஐந்நூறுபேரைக் காணும்படியாகும். அல்லது இவ்வுலகம்முழுதும் ஏற்றத்தாழ்ச்சியில்லாமல் ஒரே அந்தஸ்துக்கு வந்துவிடும்படியாகும். அதாவது, எளியவர்கள் உயர்ந்துபோவதல்ல; நெடுநாள்வாழ விரும்பும்படியான நல்ல போகங்களை அனுபவிக்கும் தனவான்களும் அந்த விருப்பத்தை உடனே விட்டுவிடும்படி நேரிடும். ஆயினும் இவ்வுலகவியற்கை அப்படியே இருக்குமானால், உலகத்தில் ஒரு நன்மையுண்டாகுமென்று தோன்றுகிறது. வாழ்நாள் மிகவும் சொற்பமாயிருக்கிற இக்காலத்திலேயே, நமது தாய்தந்தையர்கள் சீக்கிரமாய் இறந்துபோகார்களா! நமது ஆஸ்திகளை நம்மிஷ்டப்படிச் செலவுசெய்யமாட்டோமா என்று கோருகிற இக்காலத்து வாலிபர்களுடைய கதி எவ்விதமாகும்? அதோகதிதான். தம் ஆஸ்தி தமக்குச் சுவாதீனமாவதற்கு முன்னேயே கைக்கெட்டினமட்டும் சோராமற் சிலர் செலவழிப்பதெல்லாம் பறந்தோடும். எவர்க்கு எந்த எண்ணமிருக்கட்டும், இராமற்போகட்டும்; யாவரும் அக்காலத்தில் பெட்டியிலடங்கின பாம்பு

போல் அடங்கிக்கிடக்கவேண்டுவதுதான். அப்படிப்பட்ட வெட்கங்கெட்ட பிழைப்பு பிழைப்பதைவிட மரிப்பதே மேலானதென்று அவர்கள்தாமே நினைப்பார்களென்று தோன்றுகிறது. ஆதலால் அப்படிப்பட்டவர்கள், தம் தாய்தந்தையர்கள் அற்பாயுஸ்ஸாய் இறந்தார்களென்பதை ஒரு குற்றமாய்க் கடவுள்மேல் சார்த்தார்கள். நாஸ்திகவாதத்திற் புகுத்துகிற துஷ்டயுக்திகளும் அவர்கள் மனதில்தோன்ற. வாழ்நாள் நீடித்திருந்தால் அவ்வளவுகாலம் ஏற்றபடி செலவுசெய்யத் தங்கள் ஆஸ்தி சிறிதும் போதாதாகையால், தங்களுக்குக் கடவுள் ஏற்படுத்திய ஆயுளளவு சொற்பமானதென்கிற எண்ணம் உதிக்கவே உதிக்காது.

மூன்றுவது: உண்மையாய்ப்பார்த்தால் இவ்வுலகமே பலவித வருத்தங்களையும் துக்கங்களையும் விளைவிக்கத்தக்கதாயிருக்கின்றது. சுபாவத்திலேயே நல்லோர்களாயிருப்பவர்கள், நாற்பது ஐம்பதுவருஷகாலந்தான் இவ்வுலகத்தில் நாம் எவ்விதமாய்ப் போக்குகிறதென்று ஏங்கிநிற்பார்கள். ஐந்தாறு நூற்றாண்டு இங்கேயே இருக்கும்படியிருந்தால் அப்போது அவர்களுக்கு எவ்வளவு சங்கடமாயிருக்கும்! மரணகாலம் வெகு சமீபத்திலிருக்கிறதென்று தெரிந்திருக்கையிலேயே இப்போது அநேக மனிதர் மிகக் கொடியராகி அளவற்ற தீமைகள் விளைவித்துக்கொண்டிருக்கிறார்களே. சிரஞ்சீவியாயிருப்போமென்றுதெரிந்தால், அவர்கள் எப்பாடுபடார்கள்? இவ்வுலகம் முழுதும் மன்னுயிர் வாழ்க்கைக்குச் சிறிதும் ஒவ்வாமல் எவ்வளவு கேடுகெட்டதாய்விடும்! முற்காலத்தில் இவ்வுலகத்தில் பல கொடியமனிதர்கள் அளவற்ற தீமைகள் விளைவித்துக்கொண்டிருந்தார்களென்றும், அவர்கள் கொடுமையை அடக்க எவ்வாறுமாகாமல், கடவுள்தாமே நேரில் வந்து உதித்து அவர்களைச் சங்கரித்தாரென்றும் பலவிடங்களில் படித்துங்கேட்டுமிருக்கிறோமே; அந்தத் தொல்லைகளுக்கெல்லாம் ஆதிகாரணம் அவர்கள் நெடுநாள் இவ்வுலகில் வாழும்படியிருந்ததென்பதேயொழிய வேறென்ன? ஆகையால் இவ்வுலகத்தில் நெடுநாள்வாழ விரும்புவதை விடப் புத்தியீனமானது வேறொன்றுமில்லை. தெய்வபக்தியும் ஜீவகாருணியமுமாய்க் காலத்தைக் கழிக்கின்ற மகாபுருஷர்கள் எப்போது இந்தக் கர்மபூமியைவிட்டுப் பரமானந்தத்தை அடையப் போகிறோமென்று போாவல்கொண்டிருப்பார்கள். பேதை ஜனங்களும் கொடியவர்களும் வெகுகாலம் பூலோகவாழ்க்கையை விரும்

புவதற்கு இடமேயில்லை என்று அடியிற் குறித்த குறிப்புகளால் தெளிவாய் விளங்கும். மேலும் இப்போது கிடைத்திருக்கிற வாழ் நாளை வீண்போக்காமல் சரியாய் உபயோகிப்பார்களானால் அதற்குள் சாதிக்கக்கூடாதகாரியங்கூட ஒன்று உண்டோ? ஆகையால் எவரும் தமக்குக் கடவுள்கொடுத்த காலவரை போதுமென்று அவ்வளவோடு திருப்தியடைந்து, அந்தக் காலத்திற்குள்ளே தம்மால் கூடியவரையில் பல நன்மைகள்செய்து பொல்லாங்கென்பனவ யெல்லாந்தவிர்த்துக் கடவுளின் கருணாகடாக்ஷத்திற்குப் பாத்திரராகி அழியாத பொற்றாமரைப்பதத்தை எப்போது அணுகப்போகிறோ மென்று ஆவல்கொண்டிருப்பதைவிட ஆனந்தம் வேறொன்றுமில்லை.

சிறுவர்க்கான கதை.

சிங்கமும் சுந்தரமும்—(தொடர்ச்சி.).

அழகியசாயலும் அழகியசெய்கையும் உள்ளவளாயிருந்ததனால், அதற்கேற்கச் சுந்தரமென்று பேர்பெற்ற வர்த்தகன்மகள் ஒருத்தி தன் தகப்பன் உயிரைக் காப்பதற்காக ஒரு சிங்கத்திற்கு அடிமையாகி, அந்தச் சிங்கத்தின் மாளிகையில் தன் உற்றார் உறவினர் ஒருவருமில்லாமல் தனித்துக் குடியிருந்தாளென்றும், நாள்தோறும் ராத்திரி சிங்கம் அவள் போசனஞ்செய்கிறகாலத்தில் அவ்விடத்திற்கு வந்து நெடுநேரம் அவளுடன் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருந்து போகிற போக்கில், 'என்னைக் கலியாணஞ்செய்துகொள்ள உனக்கு விருப்பமுண்டா? என்று ஒரு பேச்சு கேட்டுவிட்டுப் போய்க்கொண்டிருந்ததென்று, சென்ற சில சஞ்சிகைகளில் விவரமாய்ப் படித்திருப்பீர்களே.

அந்தச் சிங்கம் நாளுக்குநாள் அவளிடத்தில் விசேஷ பக்ஷத்தோடு பொறுமையும் அடக்கமுமாய் மிருகத்தன்மை சிறிதும் தோன்றாமல் நடந்துவரவே, சுந்தரம் அதைக்கண்டு பயப்படுவதை விட்டு, அது வருகிறதருணத்தில் வெளியே வந்துநின்று அது வருவதை எதிர்பார்த்துக்கொண்டிருப்பாள். அது கடைசியில் சொல்லிப்போகிற வார்த்தை ஒன்றுமாத்திரமே சுந்தரத்திற்குக் கொஞ்சம் கூச்சமுண்டாக்கத்தக்கதாயிருந்ததேயொழிய மற்றதெல்லாம் அவளுக்கு உகப்பாகவேயிருந்தது. அந்தக் கடைசிப்பேச்சுக்கு அவளும் ஒரேபிடியாய் மாட்டேனென்றே மறுமொழி கொடுத்துக் கொண்டுவந்ததனால், சிங்கத்திற்குமாத்திரம் வரவர விசனம் அதிகமாகிக்கொண்டிருந்தது. அதுதெரிந்து ஒருநாள் சுந்தரம் சிங்கத்தைப்பார்த்து: நீ நாள்தப்பாமல் என்னைப் பலவந்தப்படுத்தி என் மனதைப் புண்ணாக்குகிறாய்! ஒரு நாளைப்போல மாட்டேனென்று மறுக்கிறதென்றால் எனக்கு மனந்துணியவில்லை. நல்லது; உனக்காக ஒன்றுமாத்திரம் ஒப்புக்கொள்கிறேன்; உன்னைக் கலியாணஞ்

செய்துகொள்ள எனக்கு விருப்பந்தான்; இது ஒருபோதும் எங்கும் நடவாதகாரியம்; ஆனால் ஒன்றுமாத்திரம் உறுதியாய் உன் மனதி லிருக்கவேண்டும். கலியாணஞ்செய்துகொண்டாலும் நான் உனக் குத் தோழியாகமாத்திரமே இருப்பேன். அவ்வளவோடு நீ திருப்தி யடைந்திருக்கவேண்டுமென்று சொன்னாள்.

தான் ஒன்றுக்கும் உதவாத கொடிய காட்டுமிருகமென்று தன் இயற்கையை அறிந்ததாகையால் அந்தச் சிங்கம், அவள் இவ்வ ளவாவது சம்மதித்தாளே என்று சந்தோஷமாய்: என் அருமைக் கண்ணாட்டி! சுந்தரமே! என் பிராணனைவிட உன்னையே நான் மேலாய் மதித்திருக்கிறேன். எப்படியாவது நீ என்னோடுகூட இவ்விடத்திலேயே இருப்பாயானால் அதுவே எனக்குப் பேரா நந்தமாயிருக்கும்; நீ ஒருபோதும் என்னைவிட்டுப் போவதில் லையென்று கையடித்துக்கொடு என்று கேட்டது. கொடிய மிருக மான சிங்கந் துக்கித்துச்சொன்ன அந்தப் பரிதாபப்பேச்சைக் கேட்டு மனந்தாளாமல் அவள் அப்படியே ஒப்புக்கொண்டாள். அதைக் கேட்டுச் சிங்கம் பேராநந்தமாய்ப் பேரிரைச்சலிட்டுக் கொண்டு எப்போதும்போலவே போய்விட்டது. அப்படியிருக்க மறுநாள் சுந்தரம் தன் வழக்கப்படியே தனக்காக வைத்திருந்த மந் திரக்கண்ணாடியைப் பார்க்கும்போது அதில் தன் தகப்பன், தனக் காகச் சோகமடைந்து உயிரிழந்துபோவதாகத் தோன்றக் கண் டாள். அதனால் அவள்: ஐயோ! நான் என் தந்தையைப்பார்த்து வெகுநாளாயிற்று. இப்போதாவது அவரைப் பாராமற்போனால் உடனே என் பிராணனும் போய்விடும் என்றுசொல்லி அழுதாள்.

அதைக்கேட்டுச் சிங்கம் உடனே ஓடிவந்து: அதற்கு முன்னே யே என் பிராணன் போய்விடுமே! நீ விசனப்படாதே; இப்போதே உன்னைத் தகப்பன் வீட்டுக்கு அனுப்புகிறேன். அங்கே நீ நெடு நாள் நிற்பையானால், உன்னைவிட்டுப் பிரிந்திருக்கமாட்டாமல் இந்தப் பேதைச் சிங்கம் உயிரை மாய்த்துவிடும் என்றுசொல்ல, அவள் கண்ணுங்கண்ணீருமாய்: உனக்கு என்னிடத்தில் அவ் வளவு அபிமானமிருப்பது எனக்கு நன்றாய்த்தெரியும். நான் அங்கே நெடுநாள் நிற்பதில்லை. ஒரு வாரத்தில் வருகிறேன். என் சகோதரிகளெல்லாரும் கலியாணமாகிப் புருஷன்வீடுபோய்ச் சேர்ந்தார்களென்றும், சகோதரர்களெல்லாரும் போர்வீரர்களா ய்ப் பட்டாளத்தில் புகுந்தார்களென்றும் நீ எனக்குக் காட்டினா யே; ஆதலால் அண்டையில் ஒருவருமில்லாமல் தனித்திருக்கிற தகப்பனாரைப் போய்ப்பார்த்தவுடனே திரும்பலாமா? என்றாள்.

சிங்கம் அதற்குச் சம்மதித்து: அப்படியே ஆகட்டும்; நீ நாளைக் காலையில் உன் தந்தையண்டையிலிருப்பாய்; நீ இப்போது சொ ன்னபேச்சைமாத்திரம் மறவாதே; திரும்பிவருவதற்கு நீ யாதொரு வருத்தமும் படவேண்டாம்; படுக்கப்போம்போது உன் கணை

யாழியைமாத்திரம் கழற்றி ஒரு மேடையில் வைத்துவிட்டு நித்திரைகொண்டால் போதுமென்று சொல்லிச் செலவுபெற்றுக் கொண்டு போயிற்று. சுந்தரமும் தகப்பனைப்பார்க்க ஆவலாய்ப் போய்ப் படுத்தாள். காலையிலெழுந்திருக்கையில் தானிருக்கும் இடம் தகப்பன் வீடாயிருந்தது. இதற்குள் அந்த வர்த்தகன் எழுந்துவரும்போது தன் அருமைமகளான சுந்தரம் வந்திருக்கக் கண்டு உடம்புதெரியாமல் ஓடிவந்து அவளைக்கட்டி அணைத்து உச்சிமோந்து ஆனந்தக் கண்ணீர்பெருகப் பேச நாவெழாமல் சிறிதுநேரம் மயங்கிநின்றான். அந்த மயக்கந்தெளிந்தபின் தந்தையும் மகளும் தங்களுடைய யோகக்ஷேமங்களைப் பேசிக்கொண்டு பேரானந்தமடைந்திருந்தார்கள்.

இதற்குள் சுந்தரம் வந்த செய்திகேட்டு அவளுடைய சகோதரிகள் அவளைப் பார்க்கவந்தார்கள். அவ்விருவருடைய வாழ்க்கையும் மிகவும் பரிதாபமானதாயிருந்தது. பெரியபெண்ணுடைய புருஷன் தான் கொஞ்சம் வடிவழகுள்ளவனென்று கர்வமடைந்து எப்போதும் அதையே மேன்மைபாராட்டிக்கொண்டிருந்தான். இளையவள் புருஷன் கற்றவனாயினும் எரிமூஞ்சியாய்த் தன் சுற்றத்தார் நேசர்முதலியவர்களையும், முக்கியமாய்த் தன் பெண்சாதியையும் எப்போதும் கடுகடுத்துப் பேசுவதும் திட்டுவதுமே காரியமாயிருந்தான். அவ்விரண்டு பெண்களும் சுந்தரம் சிறந்த ஆடை ஆபரணங்களணிந்து தெய்வப்பெண்போலிருப்பதைப் பார்த்தவுடனே முன்னிலும் பதின்மடங்கு பொறாமை அதிகமானார்கள். பாம்புக்குப் பால்வார்க்கவார்க்கப் படுவிஷத்தைத் தருவது போல், சுந்தரம் அவர்களுக்கு நன்மைகளைச் செய்யச்செய்ய அவர்கள் அவளிடத்தில் பகையையே காட்டினார்கள். சுந்தரம் தனக்குச் சிங்கமாளிகையில் நடந்த வைபவங்களைச் சொல்லச் சொல்ல அவையெல்லாம் அவர்களுக்கு எரிகிற உடம்பில் எண்ணெயைக் காய்ச்சிவிட்டதுபோலாயின. தங்கையைச் சிங்கம் புசித்துவிடுமென்று தாங்கள் சிங்கத்தண்டை அனுப்ப, அது அவளுக்கு மேன்மையாக முடியவே மனது பொறாமைத்தீயால் வேக்காடுகொள்ள அதைத் தாளமாட்டாமல் மூத்தவர்கள் இருவரும் தனிப்புறமாய் ஒரு தோப்பிற்சென்று, 'இந்தச் சிறுக்கி எவ்வளவு சீரும் செல்வமுமாய் வாழ்கின்றாள் பார்த்தையா, என்று ஒருவரோடொருவர் சொல்லி விசனப்பட்டு, கடைசியில் சுந்தரத்தைச் சிங்கம் கெடுவிட்ட நாளுக்கு அதிகமாய் இங்கேயே நிறுத்திவிட்டால், சிங்கம் கோபமடைந்து அவளைப் புசித்துவிடுமென்று தீர்மானஞ்செய்துகொண்டு வீட்டுக்குவந்து, சுந்தரத்தினிடத்தில் தாங்கள் உள்ளுறப் பக்ஷமுடையவர்போலப் பாசாங்குசெய்து, வரவர அதிகமாய் அவளிடத்தில் அன்புபாராட்டிவந்தார்கள். ஒரு வாரமானபின்பு அவர்களிருவரும், இன்னும் சில தினங்கள்

தங்களோடு கூடியிருக்கும்படி, சுந்தரத்தைப் பலவிதமாய் வேண்டவே, அவள்: இவ்வளவு ஆஸ்தையாய் வேண்டுவதை எப்படி மறுத்துப்போகிறதென்று அதற்குச் சம்மதித்தாள். ஆயினும் சிங்கம் தனக்காகப் பிராணனை விட்டுவிடப்போகிறதேயென்கிற திகில் மாத்திரம் அவள் மனதில் எப்போதுமிருந்துகொண்டேயிருந்தது.

பத்தாநாள் ராத்திரி சுந்தரம், நித்திரைசெய்துகொண்டிருக்கையில், தன் உயிர்த்தோழனை சிங்கம், அதுவரையில் தன் வரவை எதிர்பார்த்திருந்தும் வராமையால், இறந்துபோகத் துணிந்து புறந்தரையில் படுத்துக்கொண்டு தன்னையே மனதில் நினைத்துக்கொண்டு வேறெண்ணமில்லாமல் அவஸ்தைப்படுவதாகவும், அப்போது அதற்குத் தூரத்தித் தூரத்திச் சுவாசம் வாங்குவதாகவும் கனவுகண்டாள். அவள் உடனே விழித்துக்கொண்டு அந்தக் கனவை நினைத்துக் கண்ணீர்விட்டழுது, அந்தக்ஷணமே மோதிரத்தைக் கழற்றி மேடைமேல்வைத்துப் படுத்துக் கண்ணயர்ந்தாள். விழித்துக்கொண்டவுடனே தானிருக்குமிடம் சிங்கமாளிகையாயிருந்தது. சுந்தரம் வெகு சந்தோஷமாய்ச் சிங்கத்துக்குக் களிப்புண்டாகும்படி வேண்டிய ஆடையாபரணங்களை அணிந்துகொண்டு, சிங்கம் வருகிற தருணத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அன்றையதினம் அவளுக்கு ஒரு நிமிஷம் ஒரு யுகமாயிருந்தது; மெல்ல மெல்ல பகற்பொழுதைப் போக்கினாள். பொழுதுபோய்ச் சிங்கம் வருகிறதருணமாயிற்று. சுந்தரம் ஆவலோடு வாயிலில் நின்று அது வருகிற வழியிலேயே கண்ணாயிருந்தாள். நெடுநேரமாகியும் சிங்கம் வரவேயில்லை. வராமற்போகவே சுந்தரம் ஐயோ! நம்மால் அது இறந்துபோயிற்றோ என்னவோ என்று திகிலடைந்து, அந்த மாளிகையில் ஓரிடந்தப்பாமல் சிங்கமே! சிங்கமே! என்று கதறிக் கூவிக்கொண்டு ஓடித்தேடினாள். அவள் கூச்சலுக்கு மறுமொழி கொடுப்பார் ஒருவருமில்லை. உடனே தன் கனவை நினைத்துக்கொண்டு வெளியே ஓடினாள். அங்கே ஒரு ஊற்றங்கரையில் தட்டித்தட்டி சுவாஸம் விட்டுக்கொண்டு சிங்கம் இட்டகால் இட்டகைகளாய்ப் படுத்திருந்தது. அதன் அவஸ்தையைப்பார்க்கவே சுந்தரம்: அது மிருகமென்பதைக்கூட மறந்து அதைக் கட்டிக்கொண்டு மார்பில் கையைவைத்து பிராணனிருக்கிறதா போய்விட்டதா என்று நிதானித்துப் பார்த்தாள். உயிர் கொஞ்சம் துடித்துக்கொண்டிருக்கவே, கொஞ்சந் தைரியமடைந்து பலவகையாய்ச் சீதோபசாரஞ்செய்து அதற்கு ஸ்மாணையுண்டாக்கினாள்.

கொஞ்சம் பிரஞ்ஞையுண்டாகவே சிங்கம் சிறிது கண்ணைத்திறந்து சுந்தரத்தைப்பார்த்து: நீ சொன்னபேச்சை மறந்துபோனாயே! அதனால் நான் உயிரைவிடத் துணிந்தேன்; இப்போது உன் கமல முகத்தைக் கண்டதனால் சந்தோஷமாய் இறந்துபோகிறேனே

என்று சொல்ல, சுந்தரம்: ஓ! என் பிராணநாதனே! அப்படி ஒரு போதுமாகாது; நீ எனக்குக் கணவனாய் வெகுகாலம் வாழவேண்டும்; இதுவரையில் நான் உனக்குத் தோழியாகமாத்திரம் இருக்கலாமென்று எண்ணியிருந்தேன்; இனி பாரியையாகத் துணிந்தேனென்றாள்.

இந்த வார்த்தை அவள் வாயிலிருந்து வெளியேவருவதற்கு முன்னமே அந்த மாளிகை முழுதும் ஜகஜ்ஜோதியாய்ப் பலவகைத் தீபங்கள் பிரகாசிக்கவும், வாசிப்பவர் ஒருவரும் கண்ணுக்குத் தெரியாமலே பலவித கீதவாத்தியங்கள் முழங்கவும், பற்பலவித மணக்கோலங்களுண்டாயின. அந்த அதிசயத்தைப் பார்த்துப் பிரமித்தவளாய்ச் சுந்தரம் சற்று ஆநந்தக்கண்ணீரால் கண்கலங்கி நின்றாள். மறுபடியும் செம்மையாய்க் கண்ணைத்திறந்து பார்க்கையில் முன்னிருந்த சிங்கத்தைக் காணாமல் அந்த இடத்தில் அதற்குப் பதிலாய் மன்மதன்போல மகா சுந்தரனான ராஜகுமாரனொருவன் நின்று: 'என் சாபத்தைநீக்கின சவுபாக்கியவதி' என்று சொல்லிச்சொல்லித் தன்னைவணங்கித் துதித்துக்கொண்டிருக்கக் கண்டாள். சிங்கத்தைக் காணாமல் கண்கெட்டுப்போனவள்போலச் சுந்தரம்: ஐயோ! என் சிங்கமெங்கே? என் சிங்கமெங்கே? எனக்கு வேறொருவரும் வேண்டாம் என்று சொல்லிக் கூவியழுதாள். அந்த ராஜகுமாரன்: நானே அந்தச் சிங்கம்; ஒரு கெட்டதேவதையின் சாபத்தால் எனக்குச் சிங்கமாகும்படி நேரிட்டது. அழகிய பெண்ணரசி ஒருவள் உன்னைக் கலியாணஞ்செய்துகொள்ள விரும்புகிறவரையில் நீ மிருகமாய்க் கிடக்கவேண்டுமென்று சபித்தாள். உருக்க நெஞ்சுள்ள நீ என் உருவத்தையும் புத்தியையும் பாராமல் மனது ஒன்றையே பார்த்து எனக்குப் பெண்சாதியாகக் கருதி என் சாபத்தை விடுவித்தையாகையால், இவ்விடத்திலுள்ள எல்லாப்பொருள்களும் உன்னுடைமைகளே என்றான்.

அதைக் கேட்கவே சுந்தரம் சந்தோஷமும் உற்சாகமும் அடைந்து, அந்த ராஜகுமாரனோடுகூட அரண்மனைபோய்ச் சேர்ந்தாள். அங்கே, சுந்தரம் முதனாள் ராத்திரி கனவில் கண்ட ஒரு தெய்வப்பெண், சுந்தரத்தின் தந்தையையும் சகோதரிகளையும் அழைத்துக்கொண்டு தானும்வந்தாள். அந்தத் தெய்வப்பெண் புதிதாய்த் தோன்றிய ராஜகுமாரனுக்கும் சுந்தரத்திற்கும் வெகு வைபவமாய்க் கலியாணஞ் செய்வித்துக் கடைசியில் சுந்தரத்தைப்பார்த்து: பெண்மணியே! நீ உன் நற்குணங்களுக்கேற்றபடியே நல்ல பரிசு பெற்றாய்; இனி நீ என்நாளும் செல்வமும் சீருமாய் வாழ்ந்திருக்கக்கடவாய் என்று ஆசீர்வதித்து, அவள் சகோதரிகளைப்பார்த்து: பெண்களே! உங்களுடைய கெட்டசெய்கைகளுக்காக வேறெந்தச் சிக்ஷையும் தக்கதாய் என் புத்தியில் தோன்றவில்லை; உங்கள் சகோதரி வைபவமாய் வாழ்வதைப் பார்த்துக்கொண்டிருப்

பதே போதுமான சிக்ஷையாம். உங்களுடைய கெட்டநடத்தை யைப்பற்றி உங்களுக்குப் பச்சாத்தாபம் தோன்றுமளவும் நீங்கள் இந்த அரண்மனைவாயிலில் சித்திரப்பதுமைபோல நின்று யாவை யும் பார்த்திருக்கக்கடவீர்கள். எப்போது பச்சாத்தாபம் தோ ன்றுகிறதோ அப்போதுதான் பெண்பிள்ளைகளாவீர்கள். நீங்கள் எந்நாளும் பிரதிமையாகவேகிடப்பீர்களோ என்னவோ என்று எனக்குத் திகிலாயிருக்கிறதென்று சொல்லி மறைந்துபோனாள். சுந்தரம் தன் கணவனான ராஜகுமாரனோடு சுகமாக வாழ்ந்து கொண்டிருந்தாள்.

தேசபாஷா பத்திரிகைகள்.

நமது தேசத்தில் ஆதிகாலத்தில், அங்கங்கே நடக்கும் விருத்தாந்தங்க ளைப் பலரும் அறிந்துகொள்ளும்படி செய்யத்தக்கப் பிரசித்தபத்திரிகை கள் இக்காலத்திலிருப்பதுபோலில்லையென்பது அநேகமாய்த் தெரிந்தி ருக்கலாம். அப்படியிருக்க, 1818-ஞு மேமீ த்தில், கல்கத்தாவுக்குச் சமீப த்திலுள்ள ஸ்ரீராமபுரத்தில் தர்ப்பணமென்று தேசபாஷை பத்திரிகை யொன்று முதல் முதல் ஏற்பட்டது. அக்காலத்தில் இத்தேசத்துக் கவர்னர் ஜெனரலாயிருந்த லார்ட் மார்க்விஸ்ஹேஸ்டிங்ஸ் பிரபு, இப்போது இந்த இந் துதேசத்து ஜனங்கள் தங்கள் அபிப்பிராயங்களைப் பத்திரிகை மூலமாய்ப் பிரசித்தப்படுத்த ஆரம்பித்தது, இனி இத்தேசம் அடையப்போகிற மேன்மைக்கு ஒரு அறிகுறியாய் இருக்கிறதென்றும், பத்திரிகை மூல மாய் ஜனங்களின் அபிப்பிராயம் வெளிப்படுவது, அதிகாரம் செலுத்துகிற உத்தியோகஸ்தர்கள் தங்களுக்குத் தோன்றியபடி நடவாமல் ஜாக்கிரதை யாயிருப்பதற்கு ஒரு எச்சரிக்கையாயிருக்குமென்றும் சொல்லிச் சந்தோ ஷித்தார்.

பின்பு 1830-ஞு ஆக்ரா நகரத்தில் ஹிந்துஸ்தானி பத்திரிகையொன்று தலைப்பட்டது. முதலில் அது ஆரம்பித்த சிலநாள்வரையில் சமாசாரம் மாத்திரம் அப்பத்திரிகையில் பிரசித்தமாகிக்கொண்டுவந்ததாயினும், பின்பு துரைத்தனத்தார் ஏற்படுத்துகிற ராஜாங்க வியவஹாரம் முதலியவைகளின் தாத்பரியங்களும் பிரசித்தப்படுத்தப்பட்டன. அதைக்கண்டு, இதென்ன, துரைத்தனத்தார்க்கு விரோதமாய் அபிப்பிராயமெழுதுகிறார்களே, இவர்கள் யாரப்பா என்று எவரும் ஆச்சரியப்படும்படி ஆயிற்று.

இப்படிப் பத்திரிகைகள் பிரசித்தப்படுத்துவது இத்தேசத்துக்குப் புதிதா யிருந்தாலும், பிரிட்டிஷ் ராஜ்யத்தில் இது ஸாதாரணமாகையால், இத்தே சத்தில் பிரிட்டிஷ் துரைத்தனம் பரவப்பரவ, சுதேசபாஷை பத்திரிகை களும், இங்கிலீஷ் பத்திரிகைகளும், இவ்விரண்டும் சேர்ந்த மிச்சிரபத்தி ரிகைகளும் அதுமுதல் நாளுக்குநாள் விருத்தியாகிக்கொண்டுவருகின்றன.

இப்போது இத்தேசத்தில் வழங்கும் பத்திரிகைகள் இத்தனையென்று தெரிந்துகொள்வது ஜனங்களுக்குக் கொஞ்சம் உபயோகமாயிருக்குமென்று அவற்றின் வகைதொகைகளை அடியில் குறிக்கிறோம்.

பங்காளம்.

	பத்திரிகை.
தேசபாஷை	88
இங்கிலீஷ்	49
மிச்சிரம்	14

சென்னை.

தேசபாஷை	26
இங்கிலீஷ்	31
மிச்சிரம்	32

பம்பாய்.

தேசபாஷை	66
இங்கிலீஷ்	37
மிச்சிரம்	20

காசிமுதலான வடமேற்கு மாகாணங்கள்.

தேசபாஷை	58
இங்கிலீஷ்	13
மிச்சிரம்	7

பஞ்சாப்.

	பத்திரிகை.
தேசபாஷை	31
இங்கிலீஷ்	7
மிச்சிரம்	1

நடுமாகாணம்.

தேசபாஷை	3
இங்கிலீஷ்	3
மிச்சிரம்	3

அயோத்தி.

தேசபாஷை	14
இங்கிலீஷ்	3
மிச்சிரம்	4

சிந்துதேசம்.

தேசபாஷை	3
இங்கிலீஷ்	4
மிச்சிரம்	1

ராஜபுத்திரஸ்தானம்.

தேசபாஷை	2
இங்கிலீஷ்	0
மிச்சிரம்	1

மேல்படி எண்களை மொத்தங்கைத்துப்பார்த்தால் தேசபாஷா பத்திரிகைகளும் மிச்சிரபத்திரிகைகளும் சேர்ந்து 374 ஆகின்றன. இங்கிலீஷ்பத்திரிகைகளோ 147. சராசரி பத்திரிகையொன்றுக்கு 400 பேர் கையொப்பக்காரர் உண்டென்று உத்தேசித்துப்பார்த்தால் தேசபாஷாபத்திரிகைகளை வாங்கிப்படிப்பவர்கள் சுமார் 1,50,000 பேர் கணக்காகின்றது. படிக்கக்கேட்போர் எத்தனைபேர் இருப்பார்களோ யோசித்துப் பாருங்கள்.

ராஜாங்கத்து வியாபாரங்களின்மேல் தூஷணமாய்ப் பத்திராதிபர்கள் யாதொன்றும் எழுதாமலிருக்கும்படி அவர்களை ஒரு நிர்ப்பந்தத்தில் வைத்திருக்கவேண்டுவது அவசியமெனச் சில அதிகாரிகள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அது புத்திப்பிரமமே. யுக்தாயுக்தங்களை நன்றாய் ஆராயுந் திறமையுடையவரும், தாமே ஒருகால் பத்திராதிபராயிருந்தவருமான லார்ட்டு லிட்டன் என்னும் நமது கவர்னர் ஜெனரலவர்களுடைய அபிப்பிராயம் அப்படியல்லவென்று தோன்றுகிறது; பத்திராதிபர்களை வாயையுங் கையையுங் கட்டி முடம்போல் வைத்திருப்பதைவிட சுதந்தரராய் விட்டுவைப்பதே நலம்; ஒருவர் எழுதிய விஷயம் யுக்தமாயிராவிட்டால் அவர் வாயை அடக்க விவேகிகளான மற்ற பத்திராதிபர்கள் சித்தமாகவே காத்திருக்கிறார்கள்; அவ்விஷயத்தில் நாம் தலையிட்டுக்கொள்வானேனென்று அவர் நினைக்கிறதாய்க் கேள்வி.

இப்போது நடக்கும் யுத்தத்தின் லாபநஷ்டக்கணக்கு.

மழைக்குமுந்திய யுத்தம் முடிவுபெற்று இப்போ குளிர்காலத்துப்போர் ஆரம்பிக்கிறபடியால், ஜீவகாருணிய பரர்களான கிறிஸ்து மதோத்தாரகர்கள் என்று பிருதுவஹித்துக்கொண்டு ருஷியர் நடத்தும் இந்த யுத்தத்தினால், இதுவரையிலுண்டாயிருக்கும் லாபநஷ்டங்களைச் சற்று கணக்கிட்டுப் பார்ப்போமென்று சீமையில் பத்திராதிபர் ஒருவர் பரிஹாசமாய்த் தெரிந்தெழுதியதை அடியிற் குறிக்கிறோம்:

நஷ்டங்களாவன:

1. அநேகமாயிரம் பிரஜைகள் அறைபட்டும் அறுபட்டும் சின்னபின்னமாய் இறந்துபோனார்கள்.

2. அநேகமாயிரம்பேர் குளிரினாலும், வருத்தத்தினாலும், பசியினாலும், நோயினாலும் மெலிந்து மாண்டுபோனார்கள்.

3. அதேவியாதியால் வருந்தி உயிர்போகாமல் தத்தளிக்கிற அநேகரை வாரிக்கொண்டு அநேகம் வண்டிகள் டானியூப் நதியை நோக்கி ஓயாமல் ஓடிக்கொண்டேயிருக்கின்றன.

4. அநேகம் கிராமங்களிலும் நகரங்களிலும் வீடுகள்தோறும் கோடாகோடி ஜனங்கள் ஒழிவில்லாமல் அழுவதே காரியமாயிருக்கிறார்கள்.

5. ஒன்றுக்கொன்று பரிதாபம் இரக்கமென்பவைகளைக் காட்டமாட்டாத யானை குதிரை முதலிய மிக்க உபயோகமான மிருகங்களில், அதிகமாயுழைத்துக் களைத்ததனாலும், பசியினாலும், யுத்தகாலத்தில் நேரிடுகிற சங்கடங்களாலும் இறந்தவை எத்தனையோ கணக்கில்லை.

6. தானியங்களும், கால்நடைகளும், கொள்ளையாய் நிர்மூலமாக்கப்பட்டன. அநேகங்கிராமங்கள் கொளுத்தப்பட்டன. தப்பிப் பிழைத்த குடிகள் நாநாதேசங்களுக்கும் பறந்தோடத் தலைப்பட்டார்கள்.

7. அத்தேசமெங்கும் பெண்ணாணல் பலவந்தமாய்ப் பிடித்திழுத்துக் கெடுப்பதும், ஆணால் கழுத்தில் கத்திபோடுவதுமாகிய இக்கல்வி சாதாரணமாய்க் கற்கப்படுகின்றது.

8. யுத்தத்தில் லக்ஷோபலக்ஷமாய் உயிர்ச்சேதம் சம்பவிப்பதுமல்லாமல் கோடாகோடியாய்ப் பொருட்சேதமும் நேரிட்டது. அந்தச் செலவைச் சரிப்படுத்தும்படி குடிகளைக் கொன்று விசேஷமாய் இப்போது வரிப்பணம் வாங்குகிறார்களென்பதிருக்கட்டும்; இந்த யுத்தம் ஏதோ ஒருவிதமாய் முடிந்தாலுங்கூட, மழைவிட்டும் தூவானம் விடவில்லையென்பது போல், சண்டைச்செலவினால் சுத்தசூனியமாய்ப்போன ராஜாங்கத்துப் பொக்கிஷசாலைகளையும், ஆயுதசாலைகளையும், சேனைகளையும், வியாபாரங்களையும், வர்த்தகங்களையும் மறுபடியும் யதாக்கிரமமாய் ஸ்தாபிப்பதற்காக இந்த வரி பின்பு நெடுநாள் நீடித்திருக்குமென்பது நிச்சயம்.

9. ஜனங்களுக்குச் சாந்தியும் பொறுமையும் உண்டாவதற்காக ஏற்பட்ட மதக்கோட்பாடுகள், ஒருவர்மேலொருவர் மகா மூர்க்ககுணத்தோடு பெரும்பகை பாராட்டுவதற்கு ஏதுவாய்விட்டது.

10. நாகரிகமென்பது சிறிதுமில்லாத முரட்டுக் காட்டுமனிதர்கள் முற்காலத்தில், மன்னுயிர்களை மிகவும் அலக்ஷியமாக மதித்துக் கொடுங்கோலர்களாய், விளைத்துக்கொண்டிருந்த கடுந்தீமைகள், மீட்டும் உண்டாகத்தொடங்கின.

11. பொய்புரட்டு கள்ளங்கபடம் என்புவைகளே மேலிட்டு சத்தியம் தருமம் நீதிமுதலியவைகளெல்லாம் தலையெடுக்க இடமில்லாமற்போயிற்று.

லாபங்களாவன:

1. இப்போது ஒழுங்கும் அதிகாரமும் கெட்டுக்கிடக்கிற ராஜாங்கத்தைக் கொஞ்சம் மாற்றிச் சீர்திருத்தினுல் ராஜ்ஜியம் நன்ருய் ஒருமைப்பட்டு பலப்படுமென்பதைத் துருக்கர் நன்ருய் அறிந்துகொண்டார்கள்.

2. துருக்குதேசத்தாருக்கு அநேகமாய்க் கடன்பத்திரங்கள் பலவிதத்திலும் சின்னபின்னப் பட்டுப்போனது அங்கிலேயருக்கு லாபகரமாயிருக்கின்றது.

3. சுதந்திராதிகாரமாய் ஆள்கிற ஆட்சியின் பயன் இப்படிப்பட்டதென்று நன்ருய் வெளிப்படையாயிற்று.

4. இதரராஜாங்கங்களிலுள்ள மோசம் பாசாங்குமுதலியவைகளும் சுயராஜ்ஜியத்திலுள்ள மூடத்தனங்களும் நாளளவில் வெளிப்படும்படியாயிற்று.

5. முன்னமே ஸாரக்ஷேத்திரமான பலபூமிகள் தானியமுதலியவைகளைக் கொளுத்திய சாம்பலாலும், யுத்தத்தில் மாண்டவர்களின் உடலினுலும் அதிகமாய் எருவிடப்பட்டதாயின.

6. வட்டிக்குக்கொடுக்கப் பணம்வைத்துக்கொண்டு காத்திருக்கிற வர்த்தகர்களுக்கு விசேஷ லாபமுண்டாவதற்கு இடமாயிற்று.

7. இப்படி இப்போது நடந்துவருகிற மகாயுத்தத்தினுல் புல லாபநஷ்டங்களுண்டாயிருப்பதுமன்றி இன்னும் என்னென்ன நன்மைதீமைகள் உண்டாகுமோ அவைகளை நமது பத்திரிகையைப் படிப்பவரே உத்தேசித்துக்கொள்ளவேண்டும்.

சமாசாரம்.

லார்ட் மேயர் பிரபு அனுப்பிய நிருபம்.— நாளது நவம்பர்மீ 2உ சென்னை க்ஷாமோபத்திரவநிவிர்த்திநிதிச்சங்கத்தார் கூட்டங்கூடியபோது, லண்டன்மாநகரத்தில் லார்ட் மேயர் பிரபு நாளதுமீ 9உ தமது உத்தியோகத்தைவிட்டு நீங்குவதாய்க் கேள்விப்பட்டு, அவர் இத்தனைநாள் இத்தேசத்து க்ஷாமத்தைத் தணிப்பதற்காகச் செய்த மகோபகாரத்திற்காக அவரிடத்தில் மிகவும் நன்றிபாராட்டி ஒரு வந்தனபத்திரிகை எழுதியனுப்பும்படி தீர்மானித்து அப்படியே மறுநாள் ஒரு திருமுகமெழுதி அனுப்பினுர்கள். அதாவது:

இதுவரையில் இத்தேசத்தில் ஒருநாளும் நேரிடாத பெரும்பஞ்சம் சம்பவித்து, அதனுல் இத்தேசத்துப் பிரஜைகள் பலவாய்ப் பரிதவித்ததைப்பார்த்துப் பொறுக்கமாட்டாமல் தாங்கள், பூததயையும் உதாரகுணமும் உடை

யவர்களாய்த் தங்கள்தேசத்து மற்றப்பிரபுக்களுக்கும் விசேஷமாய்த் தருமசிந்தையுண்டாகும்படி அவர்களையும் தூண்டிப் பலவித முயற்சிகள்செய்து, லக்ஷோபலக்ஷமாய்ப் பொருள்சேகரித்தனுப்பி இத்தேசத்துப் பேதைகளைப் பரிபாலித்தீர்கள். இப்படிப்பட்ட நிகரில்லாத தங்கள் மகோதாரகுணத்தைக்கண்டு இத்தேசத்து நாநாஜாதிப் பிரஜைகளுக்குந் தங்களிடத்தில் உண்டாயிருக்கும் நன்குமதிப்பு இப்படிப்பட்டதென்று சொல்ல எங்களாலில்லை. இவ்வளவுசெய்வதற்கும் தங்களுக்குச் சகாயமாயிருந்த அதிகாரத்தைவிட்டுத் தாங்கள் நீங்குகிறதருணமாகையால், இக்காலத்தில் நாங்களே இத்தேசத்துப் பிரஜைகளுக்குப் பதிலாய் நின்று தங்களுக்கு வந்தன பத்திரிகையொன்று எழுத ஆவல்கொண்டோம் என்பதே.

அதற்கு மறுநாள் அவரெழுதிய பிரதிவந்தன பத்திரிகையாவது:—தாங்கள் என்னை இவ்வளவு கனப்படுத்தியெழுதினதற்காகத் தங்களுக்குக் கைம்மாறு நான் யாதொன்றும் காண்கிலேன். நான் இந்த அதிகாரத்திலிருக்கையில், என் சுதேசப்பிரபுக்கள் பலரும் தங்கள்தேசத்தில் க்ஷாமத்தால் வருந்தும் ஏழைஜனங்களுக்கு ஒத்தாசையாகக் கொடுத்த தருமப் பணங்களைச் சேர்த்துத் தங்களிடத்திற்கு அனுப்பும்படியான பாக்கியம் பெற்றேனென்பது என் ஆயுளளவும் எனக்கு மறவாது. நான் இப்படிப் பலபேர்களுடைய பொருளையும் நம்பிக்கையாயிருந்து வாங்கித் தங்களிடத்திற்கு அனுப்பும்படியான பாக்கியம்பெற்றதும் தற்காலத்தில் எனக்கிருந்த அதிகாரத்தின் மகிமையேயொழிய என் சொந்தப்பிரபாவமன்று என்று வணங்கியெழுதினார்.

ருஷியதுருக்கர் சண்டை.—ருஷியருக்கும் துருக்கருக்கும் சண்டை தொடங்கினநாள்முதல், சில இடங்களில் ருஷியர்களுக்கும் ஜயம் கைகூடிவந்தபோதிலும், அநேகமாய் ஜயமெல்லாம் துருக்கர்பங்காகவேயிருந்தது. அவர்கள் அநேகம் கோட்டைகளைக் கைக்கொண்டார்கள். ருஷியப் படைகளைப் பலவாய் மடியச்செய்தார்கள்; அதிர்ஷ்ட சக்கரம் ஒருமுகமாயே சுழல்வதல்லவே.

சென்ற ஒருமாதகாலமாய் அந்தச் சக்கரம் ருஷியர்பக்கமாய்த் திரும்பியிருக்கின்றது. எது இருந்தாலும் மனிதக்கட்டு விசேஷமாயிருப்பதற்குச் சமானம் ஒன்றுமில்லை. ருஷியர் எவ்வளவு தோல்வியடைந்தும் ஆள்கட்டு உடையவர்களாதலால் இப்போது தலையெடுத்து ஓங்கியிருக்கிறார்கள். கார்ஸ் என்னும் பட்டணத்தைக் கைப்பற்றினார்கள். இது அவர்கள் ஆவலும் உற்சாகமுமாய் இன்னும் மேன்மேல் எதிர்த்துச் செல்வதற்கு ஒரு தூண்டுகோலாயிருக்கின்றது. துருக்கப் போர்வீரர்கள் பதினாயிரம்பேர் மடிந்தார்கள். ஐயாயிரம்பேர் காயப்பட்டார்கள். அநேகம் பீரங்கிகள் பகைவர்கையில் பிடிபட்டன. இப்படிப் பலவிதத்திலும் துருக்கர்க்குத் தோல்வியும் ருஷியர்க்கு வெற்றியுமாயிருக்கிறது. இப்போதிய நிலைமையைப்பார்த்தால் ஜயம் ருஷியர்பங்காகவே முடியலாமென்று தோன்றுகிறது. வருங்காலத்தை உள்ளபடி கண்டறிந்து கூறத் திறமையுடையவர் யார்?

Printed at the C. K. S. Press.

INTERIOR OF HOUSE OF COMMONS.

பார்லிமெண்டு சபை.